Registered as a News Paper in Sri Lanka

விலை : ரூபா 25.00

# தினச்செய்தி வாரமலர்

என்றும் உங்களுடன்

அன்றாடச் செய்திகளை உடனுக்குடன் தினந்தோறும் இணையத்தில் அறிந்து கொள்ள

www.thinacheithi.com



# விடுதலைப் புலிகள் V.S. முஸ்லிம்கள் = இனச்சுத்திகரிப்பு

முஸ்லிம் மக்களை வடபகுதியிலிருந்து வெளியேற்றியது திரு.வே.பிரபாகரன் தலைமையிலிருந்த தமிழீழ விடுதலைப் புலிகளே.

இந்த வெளியேற்றத்திற்கும் வடபகுதியில் வாழ்ந்த தமிழர்களுக்கும் எவ்வித சம்பந்தமும் கிடையாது. ஆயுததாரிகளின் செயலைக் கண்டிக்க முடியாமல் தமிழ் மக்கள் மனதுக்குள் அழுதார்கள் அவ்வளவுதான் அவர்களால் அன்று செய்யக்கூடியதாக இருந்தது. வல்லோன் வகுத்த வழி. விடுதலைப்புலிகள் நடாத்திய இனச் சுத்திகரிப்புக்கும் தமிழ் மக்களுக்கும் எவ்வித தொடர்பும் கிடையாது. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் 1990 ஆம் ஆண்டு என்ன செய்து கொண்டிருந்தார். அன்று அவர் ஏன் முஸ்லிம் மக்களுக்கு எதிராக நடாத்தப்பட்ட போராட்டத்திற்கு குரல் கொடுக்கத் தவறினார். இந்தக் கேள்விக்கு எம்.ஏ.சுமந்திரனிடமிருந்து பதில் எதிர்பார்க்கப்படுகின்றது.

☞ பார்க்க பக்கம் 2இல்



## பிரபாகரனின் வாழ்க்கை

## அரச பயங்கரவாதம் ஆரம்பம்



## கரையை நோக்கி ஒரு கப்பல்



## பூசாவிலும் தமிழ் கைதிகள்

தினச்செய்தி
என்றும் உங்களுடன்

T.P : 021 7539300
Fax : 021 7539300
E-mail : thinacheithi@gmail.com
Web : www.thinacheithi.com / lk

## ஆலய வழிபாடும் தமிழ் அரசியல் தலைவர்களும்

பௌத்த மதத்தைச்சேர்ந்த அரசியல் தலைவர்கள் ஜனாதிபதி உட்பட எந்தவொரு விடயத்தை செய்ய முன்வந்தாலும் அவர்கள் புத்த கோவில்களுக்குச் சென்று வணங்குகிறார்கள். புத்தமத தலைவர்களிடம் ஆசீர்வாதம் பெறுகின்றார்கள். தாங்கள் எடுக்கும் முயற்சிகள் வெற்றிபெற பௌத்த குருமார்களிடம் கையில் நூல் கட்டிக்கொள்கின்றார்கள்.

இது சிங்கள பௌத்த அரசியல் தலைவர்களின் நம்பிக்கை. இதனால் அவர்களுடைய சகல காரியங்களும் வெற்றிகரமாகத்தான் நடந்தேறுவதை காணக்கூடியதாகவுள்ளது. பொதுக்கூட்டங்கள் நடைபெற்றாலும் மதகுருமார்களை அழைத்துவந்து தமது அருகில் அமர்த்தி அவர்களிடம் ஆசீர்வாதம் பெற்ற பின்னர்தான் தமது வேலைகளைக் கவனிக்கின்றார்கள்.

அதுபோலவே முஸ்லிம் தலைவர்களும் ஆண்டவனின் பெயரைச் சொல்லி தமது கருமங்களை கவனிக்கின்றார்கள். ஐந்து நேரமும் தொழுகின்றார்கள். ஏதாவது செய்து தருகிறீர்களா எனக்கேட்டால் "இன்ஷா அல்லாஹ்" என்கிறார்கள். அதாவது நிகழ்காலம் சம்பந்தப்பட்ட எந்த விடயங்களை குறிப்பிடும்போதும் அவர்கள் இந்த வார்த்தையைச் சொல்கிறார்கள். இதனுடைய அர்த்தம் என்னவென்றால் "ஆண்டவனின் கிருபையால் செய்வேன், செய்யலாம். ஆண்டவன் வழிவிட்டால் செய்யலாம், செய்வேன் என்பதுதான் அதன் அர்த்தம்.

அதுபோலவே கிறிஸ்தவ மதத்தை சேர்ந்த அரசியல் தலைவர்களும் கடவுள் பக்தி நிறைந்தவர்களாக இருக்கிறார்கள். ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமையும் தவறாமல் தேவாலயம் சென்று வழிபடுகின்றார்கள். பைபிள் வாசகத்தைப் படிக்கிறார்கள். ஒவ்வொரு கிறிஸ்தவ அரசியல் தலைவரின் மேசையிலும் ஒரு பைபிள் இருக்கும். கஷ்ர நஷ்டங்கள் ஏற்படும் பொழுதெல்லாம் அந்த பைபிள் புத்தகத்தில் உள்ள வாசகங்களைப் படித்து தமது பிரச்சினைக்கு தீர்வு காண்கிறார்கள். யேசுநாதர் மீதும் கன்னி மரியாள் மீதும் பக்தியுள்ளவர்களாக இருக்கிறார்கள்.

ஆனால் தமிழ் நாட்டிலுள்ள திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்த அரசியல்வாதிகள் தாங்கள் கடவுள் பக்தி அற்றவர்கள், நாத்திகர்கள் என்றும் "ஒன்றே குலம் ஒருவனே தேவன்" என்று சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். இவர்கள் எமக்கு கடவுள் மீது நம்பிக்கை இல்லை என வெளிப்படையாக பறை சாற்றுகின்றனர்.

ஆனால் இலங்கையிலிருக்கும் அரசியல் தலைவர்கள் தாங்கள் நாத்திகர்கள் என்றும் சொல்வதில்லை. ஆத்திகர்கள் என்றும் சொல்வதில்லை. இரண்டுக்கும் நடுவில் மிதப்புக் கட்டைகளாக இருக்கின்றார்கள்.

யாழ்ப்பாணத்தைப் பொறுத்தவரை எந்தவொரு அரசியல் தலைவனும் கோவிலுக்குச் செல்வதையோ, வழிபடுவதையோ யாரும் கண்டிருக்கமாட்டார்கள்.

ஆனால் நாட்டின் ஜனாதியோ வேறு யாராவது தலைவர்கள் வந்தால் அவர்களை அழைத்துக்கொண்டு நல்லூர் கந்தசுவாமி கோவிலுக்கு போவார்கள். அப்பொழுது அவர்கள் மேலங்கிகளைக் கழற்றி வைத்துவிட்டு பயபக்தியுடன் நல்லூர் கந்தனை வழிபடுவது போன்று ஊடகங்களுக்கு "போஸ்" கொடுப்பார்கள். எமது தமிழ் அரசியல் தலைவர்கள் அனைவருமே போலித்தனமாகத்தான் எல்லா விடயங்களையும் செய்வார்கள். இவர்களை வாரத்தில் ஒருநாளாவது கோவிலுக்கு சென்று சுவாமி தரிசனம் செய்கிறார்களா? என்றால் இல்லை.

தமிழைப் பற்றியும் தமிழ்த்தேசியத்தைப் பற்றியும் வாய்கிழியப் பேசுகின்றார்கள். ஆனால் தமது நடைமுறை வாழ்வில் ஏன் இவ்வாறு நடந்து கொள்கிறார்கள். தங்களது நாற்காலிகளை சூடுகாட்டிக் கொண்டு இருப்பதற்கா? இந்தப் போலித்தனமான தமிழ் அரசியல் தலைவர்களுக்கு சைவம் இல்லை என்றாலே தமிழ் இல்லையென்று தெரியாதா?

முன்பு ஒரு காலத்தில் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரும் தமிழர் ஐக்கிய கூட்டணியின் தலைவருமாக ஒரு காலத்தில் இருந்த காலம்சென்ற மு.சிவசிதம்பரம் அவர்கள் அவரது சொந்த ஊரான கரவெட்டிக்கு வந்தால் ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமையும் அவரை வல்லிபுர ஆழ்வார்கோவிலில் சந்திக்கலாம். மனமுருக, உளமுருக வல்லிபுர ஆழ்வாரை வழிபடும் அந்தக்காட்சி திவ்வியமாக இருக்கும்.

இன்றைய அரசியல் தலைவர்கள் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பைச் சேர்ந்தவர்கள் கடவுள் மீது நம்பிக்கையுடையவராகவும் பக்திசிரத்தை உடையவர்களாகவும் இருக்கவேண்டும். ஏனோதானோ என்று இருக்கக் கூடாது.

என்னதான் இருந்தாலும் ஆடலாம், பாடலாம், நாட்டு மக்களையும் ஏமாற்றலாம். இறுதியில் ஆண்டவனுக்கு கணக்கு கொடுக்க வேண்டும் என்பதை அவர்கள் தெரிந்து கொள்ளவேண்டும்.

எந்தவொரு தமிழ் அரசியல் தலைவர்களும் கோவிலுக்கு செல்லவில்லையோ கடவுளை வணங்கவில்லையோ அவர்கள் மக்களின் நம்பிக்கைக்குப் பாத்திரமாக இல்லை என்பது தெட்டத்தெளிவு.

## விடுதலைப் புலிகள் …

முதன் முதலில் 1981 ஆம் ஆண்டு செப்ரெம்பர் 29 ஆம் திகதி எம்.எச்.எம். அஷ்ரப் அவர்களினால் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் என்ற ஒரு அரசியல் கட்சி உருவாக்கப் பட்டது.

தமிழ் பேசும் முஸ்லிம்கள் தனியான ஓர் இனம். அவர்கள் தமிழர்களிடமிருந்து புறம்பானவர்கள் என்று அன்று அஷ்ரப் தலைமையிலான முஸ்லிம் காங்கிரஸ் பகிரங்கப்படுத்தியது. அதுமட்டுமன்றி ஆரம்ப காலத்தில் கிழக்கு மாகாணத்தில் முஸ்லிம்கள் தமிழர்களை எதிர்த்து வதைத்து வந்தார்கள். கல்முனை போன்ற பல இடங்களில் தமிழர்கள் குடியேறிய இடங்களிலிருந்து தமிழர்களை விரட்டியடித்தார்கள். தமிழர்களுக்கு எதிரான போராட்டங்களில் ஈடுபட்டார்கள். அன்றைய அரசாங்கத்துடன் இணைந்து தமிழ் மக்களுக்கு எதிரான வன்முறைச் சம்பவங்களிலும் ஈடுபட்டார்கள்.

அரசாங்கம் அமைத்த முஸ்லிம் கோம்காட் அமைப்பில் சேர்ந்து தமிழர்களை இம்சித்து வந்தார்கள். எல்லாவற்றிற்கும் மேலாக 1915 ஆம் ஆண்டு கண்டியில் முஸ்லிம்களுக்கு எதிராக நடைபெற்ற பயங்கர கலகத்தின் போது அன்று ஆட்சியாளராக இருந்த ஆங்கிலேயர்கள் இந்த கலகத்திற்கு பொறுப்பானவர்கள் என குற்றம் சுமத்தி சிங்களத் தலைவர்களை கைது செய்தார்கள். ஒரு சிலரை சிரச்சேதமும் செய்தார்கள். சிங்களவர்களுக்கு எதிராக அநீதி ஆட்சியாளர்களால் விளைவிக்கப்படுகின்றது என போர்க்குரல் எழுப்பினார் சேர்.பொன் இராமநாதன். இங்கிலாந்து வரை சென்று கைதுசெய்த சிங்களவரை விடுவிக்க குரல் எழுப்பி வெற்றியும் கண்டார்.

சிங்கள தலைவர்களை விடுவிக்க சேர்.பொன். இராமநாதன் வெற்றிகரமாக எடுத்த முயற்றியை முஸ்லிம்கள் எதிர்த்தார்கள். அன்று தொடக்கம் முஸ்லிம்கள் சேர்.பொன். இராமநாதனையும் தமிழர்களையும் எதிரியாகவே கருதினார்கள்.

பெரும்பான்மை சமுகத்துடன் சேர்ந்து சந்தர்ப்பம் கிடைக்கும் போதெல்லாம் தமிழர்களை தண்டித்தார்கள், கண்டித்தார்கள்.

இவைகளுக்கு அடுத்துத் தான் விடுதலைப்புலிகள் தங்கள் போராட்டத்திற்கு எதிரானவர்கள், அரசுடன் சேர்ந்து தங்கள் போராட்டத்தை காட்டிக் கொடுக்கிறார்கள் என நம்பினார்கள். தங்கள் போராட்டத்திற்கு இடைஞ்சலாக இருக்கும் முஸ்லிம்களை வடமாகாணத்திலிருந்தும், கிழக்கு மாகாணத்திலிருந்தும் விரட்டியடிக்க வேண்டும் என்று திட்டம் தீட்டி செயற்பட்டார்கள்.

முதன் முதலாக சாவகச்சேரியிலிருந்த விடுதலைப்புலிகள் 1500 முஸ்லிம்களை விரட்டியடித்தார்கள். அதையடுத்து கிளிநொச்சி, முல்லைத்தீவு, மன்னார் பகுதிகளில் வாழ்ந்துவந்த முஸ்லிம்களை விரட்டியடித்தார்கள்.

கடந்த 1990 ஆம் ஆண்டு ஒக்ரோபர் 30 ஆம் திகதி யாழ்ப்பாணத்தில் வாழ்ந்த முஸ்லிம்களை விரட்டியடிக்க நடவடிக்கை எடுத்தார்கள். யாழ். நகரில் வாழ்ந்த முஸ்லிம்கள் அனைவரையும் யாழ்ப்பாணத்திலுள்ள ஒஸ்மானியாக் கல்லூரியில் வந்து கூடுமாறு அறிவித்தார்கள். அவ்வாறு கூடிய முஸ்லிம்கள் அனைவரையும் உடனடியாக யாழ்ப்பாணத்தை விட்டு வெளியேறுமாறு தமிழீழ விடுதலைப் புலிகள் உத்தரவு போட்டார்கள். அவ்வாறு வெளியேறுபவர்கள் உடுத்த உடையுடனும் 2000 ரூபா பணத்துடனும் இரண்டு மணித்தியாலங்களுக்குள் வெளியேறுமாறு கூறினார்கள். மொத்தமாக 72,000 முஸ்லிம்கள் வடக்கிலிருந்து வெளியேற்றப்பட்டனர். இதில் 38,000 பேர் மன்னாரிலிருந்தும் 20,000 பேர் யாழ்ப்பாணம், கிளிநொச்சியிலிருந்தும் 9,000 பேர் வவுனியாவிலிருந்தும் 5,000 பேர் முல்லைத்தீவிலிருந்தும் வெளியேற்றப்பட்டார்கள். இவ்வாறு வெளியேற்றப்பட்ட பெருந்தொகையான முஸ்லிம்கள் புத்தளத்திற்குச் சென்று தஞ்சமடைந்தார்கள்.

அதையடுத்து 1994 ஆம் ஆண்டு விடுதலைப் புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரன் "யாழ்ப்பாண பூமி முஸ்லிம்களுக்கு சொந்த பூமி துரதிஷ்டவசமாக அந்த முஸ்லிம்கள் அகதிகளாகப் போக வேண்டிய நிலை ஏற்பட்டுவிட்டது. இந்த நிலை ஏற்பட்டதற்காக நாம் கவலையடைகின்றோம்" என்று கூறினார்.

அதேபோல 2002 ஆம் ஆண்டு அன்ரன் பாலசிங்கம் ரவூவ் ஹக்கீமுடன் பேச்சுவார்த்தை நடாத்திய பிற்பாடு "கடந்த காலத்தில் நடந்த நிகழ்வுகளுக்காக நான் முஸ்லிம் மக்களிடம் மன்னிப்பு கோரினேன். கடந்த காலத்தை மறக்க வேண்டும் என்றும் குறிப்பிட்டேன். முஸ்லிம்களுடன் பேச்சுவார்த்தை நடாத்த நாம் தயார். அவ்வாறு பேசி அவர்கள் பிரச்சினைக்கு தீர்வுகாண விரும்புகிறோம்" என்று கூறினார்.

எந்த சந்தர்ப்பத்திலும் முஸ்லிம்களுக்கு எதிராக தமிழர்கள் போராடவில்லை. முஸ்லிம்களை விரட்ட முன்வரவில்லை முஸ்லிம்களை விரோதிகளாக கருதவில்லை. இனச்சுத்திகரிப்புக்கும் தமிழர்களுக்கும் எந்தத் தொடர்பும் கிடையாது.

அன்று முஸ்லிம்கள் தமிழர்களை எதிரியாகப் பார்த்தார்கள். ஆனால் அன்றும், இன்றும் முஸ்லிம்களை தமிழர்கள் உடன்பிறவா சகோதரர்கள் என்றுதான் நினைக்கிறார்கள். முஸ்லிம்களை அரவணைக்கிறார்கள். முஸ்லிம்களின் பிரச்சினைகளுக்கு தீர்வு கிடைக்க வேண்டுமென்று எதிர்பார்க்கின்றார்கள்.

இனச்சுத்திகரிப்பில் ஈடுபடாத தமிழர்கள் முஸ்லிம்களுக்கு விடுதலைப் புலிகளால் ஏற்பட்ட பிரச்சினைகளுக்கு பொறுப்பேற்க முடியாது. பொறுப்புக் கூறவும் முடியாது. சுமந்திரனின் பேச்சு பொறுப்பற்ற பேச்சு. இந்த பிரச்சினைகள் நடந்த காலத்தில் வாழ்ந்தவன் என்ற முறையில் இதைநான் குறிப்பிடுகிறேன். அரசாங்கம் முஸ்லிம்கள் வாழ்ந்த சிலாவத்துறை ஆகிய பகுதிகளில் முஸ்லிம்களின் காணிகளை அரசகாடு என்று பிரகடனப்படுத்தியுள்ளது. அந்தப் பிரகடனத்தை உடனடியாக கைவிடவேண்டும். முஸ்லிம்கள் வாழ்ந்த இடங்களில் அவர்களை சுதந்திரமாக வாழ விடவேண்டும்.

## தமிழ் மக்களின் போராட்டங்களுக்கு அ.இ.ம.காங்கிரஸ் ஆதரவளிக்கும்

சிறைச்சாலைகளில் விசாரணைகள் இன்றி தடுத்து வைத்திருக்கும் தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலை தொடர்பில் அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் தலைவர் றிசாத் பதியுதீன் பேசி வந்துள்ளார்.




கடந்த அரசாங்கத்திலும், முன்னாள் ஜனாதிபதி மற்றும் பாதுகாப்பு செயலாளர் ஆகியோரிடத்தில் இது தொடர்பில் அமைச்சர் றிசாத் பதியுதீன் பல முறை பேசியுள்ளார்.

புதிய அரசாங்கத்தில் ஜனாதிபதி மற்றும் பிரதமரிடத்திலும் இந்த கைதிகளின் விசாரணைகள் துரிதப்படுத்தப்படுவதுடன், சந்தேகத்தின் பேரில் குற்றங்கள் பதியப்படாதவர்களை விடுதலை செய்ய வேண்டும் என்பதை வலியுறுத்தியும் வந்துள்ளார்.

வடபுல முஸ்லிம்கள் வெளியேற்றப்பட்டு 25 வருடங்கள் கழிந்த கடந்த மாதத்தின் இறுதியில் கொழும்பில் இடம்பெற்ற செய்தியாளர் மாநாட்டில் தடுத்து வைக்கப்பட்டுள்ள அப்பாவி தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலை தொடர்பில் அரசாங்கம் உரிய நடவடிக்கையெடுக்க வேண்டும் என்று பகிரங்கமாக அமைச்சர் றிசாத் பதியுதீன் வேண்டுகோள் விடுத்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

அதே வேளை தமிழ் மக்கள் முன்னெடுக்கும் ஜனநாயக ரீதியான போராட்டங்களுக்கு தமது தலைமையிலான அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் கட்சி முழுமையான ஆதரவை வழங்கும் என்பதில் எவ்வித சந்தேகங்களும் இல்லை என்றும் அமைச்சர் றிசாத் பதியுதீன் மேலும் தெரிவித்துள்ளார்.

# வழுவழுத்த பேச்சுக்களால் வாக்குமாறும் தலைவர்கள்



குழப்பத்தின் துருவமாய் அன்று சிலர் கருணாவைப் பயன்படுத்தினார்கள். இன்று சுமந்திரனைப் பயன்படுத்துகின்றார்கள். ஜே.ஆரின் பரம்பரையில் வந்த பட்டை அரசியல் வாதிகளின் பகுத்தறிவிற்கு தீனிபோட காலத்திற்குக் காலம் தமிழினத்தின் விடுதலையை விற்றுப் பிழைக்கும் வித்தகர்களும் உருவாகி வருகின்றனர். தமிழ்த் தேசிய கூட்டமைப்பிற்குள் பாரிய முரண்பாடுகள்

**கிருஸ்ணன்**

இன்று முற்றிய நிலையில் உள்ளது. தமிழ் மக்களின் பிரச்சினைகள் ஆராயப்பட வேண்டிய மாகாண் சபை அமர்வுகளில் தனிப்பட்ட முரண்பாடுகள் விஸ்வரூபம் பெறுகின்றது. இது தொடர்பாக ஊடகங்களின் சார்பாக மக்கள் கருத்துக் கேட்கும் போது வழுவழுத்த பேச்சுக்களால் வாக்கு மாறுகின்றனர்.

வடமாகாண அமைச்சர்களை மாற்றுதல் மற்றும் வடமாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரை நீக்குதல் ஆகிய விடயங்கள் தற்போது அதிகமாகப் பேசப்பட்டு வருகின்றன. இது தொடர்பாக மக்களிற்கு தெளிவுபடுத்துங்கள். அவைத்தலைவர் என்கின்ற ரீதியில் இது உங்களது கடமை என கருத்துக் கேட்ட போது. இந்த இரண்டு விடயங்களிலும் நான் தலையீட்டை மேற்கொள்ளாமல் நடுநிலையாகச் செயற்படுவேன் என வடமாகாண சபை அவைத் தலைவர் சி.வி.கே. சிவஞானம் தெரிவித்தார்.

வடமாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரனை நீக்குமாறு கட்சியிடம் கோரியிருப்பதாக நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன், அவுஸ்ரேலியாவில் வைத்துக் கூறியுள்ளமை மற்றும் வடமாகாண அமைச்சர்களை மாற்றுமாறு உறுப்பினர்கள் சிலர் கோரியுள்ளமை தொடர்பில் அவைத்தலைவரிடம் கேட்டபோதே அவர் மேற்கண்டவாறு கூறினார். அவர் தொடர்ந்து கூறுகையில்,



“வட மாகாண முதலமைச்சரை நீக்குமாறு கோரும் விடயத்தில் நான் அவருக்கு ஆதரவாகவோ அல்லது எதிராகவோ செயற்படமாட்டேன். அது கட்சியின் நிலைப்பாடு. அமைச்சரவையை மாற்ற வேண்டும் என சுமார் 20 பேர் கொண்ட உறுப்பினர்கள் கலந்துரையாடியதாக ஊடகங்களில் செய்திகள் வாயிலாக அறிந்தேன். அந்த விடயத்தில் நான் நடைபெறும் விடயங்களை அவதானிப்பவனாக இருப்பேனே தவிர, சரி பிழை தொடர்பில் கருத்துத்தெரிவிக்கமாட்டேன். இதுவே எனது பதவிக்குரிய நிலைப்பாடு ஆகும்’ என்றார்.


விக்னேஸ்வரனை அகற்ற வேண்டும் என்பதில் அதிதீவிரமாக உள்ளவர்கள் தான் வெளிப்படையாக இப்படிப் பூசி மெழுகுகின்றனர் என்பது ஒரு புறமிருக்க விக்னேஸ்வரனை அகற்ற வேண்டும் என்கின்ற தேவை ஏன் தற்போது வலுப்பெற்றுள்ளது என்பதற்கு சுமந்திரன் பல காரணங்கள் சொன்னாலும் உண்மை அதுவல்ல. தக்க தருணத்தில் பலரின் பல சுரண்டல் செயற்பாடுகளிற்கு அவர் தடையாக இருக்கின்றார் என்பதுதான் அடிப்படையாகும்.

சுமந்திரனின் கருத்துத் தெடர்பாக சம்பந்தர் பதிலளிக்கையில் சுமந்திரன் கூறிய கருத்து தவறானது எனக்கூறிய அவர் இது தொடர்பாக தான் விக்னேஸ்வரனுடன் பேச இருப்பதாக கூறினார். எதிர்கட்சித் தலைவராக பதவியேற்று யாழ்ப்பாணம் வந்த போதும் மக்கள் கேட்ட கேள்விக்கும் இதைத்தான் கூறினார். அப்படியானால் இத்தனை நாளும் பேச நேரம் கிடைக்கவில்லையா?... ஏன் விக்னேஸ்வரன் தேவலோகத்திலா இருக்கிறார்? அங்கு கவரேச் கூட இல்லையா?.. முழு முட்டாள்களாக தமிழ் மக்களை பார்க்கின்றீர்கள் என்பது மட்டும் தெளிவாகத் தெரிகின்றது.

அன்புக்குரிய வடக்கு மாகாண சபை உறுப்பினர்களே!...

வடக்கு மாகாண சபைக்கு தேர்தல் நடந்த போது தமிழ் மக்கள் வாக்களித்த வேகம் கண்டு இந்த உலகமே வியந்தது. தேர்தல் தினத்தன்றும் கூலி வேலைக்குப் போனால் தான் அன்றைய சீவனோபாயம் நடக்கும் என்ற நிலைமை இருந்த போதும் கூட, எத்தனையோ பேர் வாக்களிப்பதை ஒரு விரதமாகக் கருதி அதிகாலையிலேயே விழித்து, நேரத்தோடு வாக்களிப்பு நிலையத்துக்குச் சென்று வாக்களித்த அந்த வாக்குகளே உங்களுக்குப் பதவி தந்தன.

உங்கள் பதவியை தீர்மானித்த புள்ளடிகள் ஒவ்வொன்றும் சாதாரணமானவையல்ல.



அது வாக்களித்த ஒவ்வொரு தமிழ் மகனதும் எண்ணிறைந்த எண்ணங்களை, கற்பனைகளை, இன உணர்வுகளை தாங்கிக் கொண்டவை. உங்களால் தங்களுக்கு விடிவு கிடைக்கும் என்று நம்பி வாக்களித்த மக்களுக்கு நாம் தீங்கு விளைவித்தால் அது உங்கள் சந்ததியையே சாகடித்து விடும்.

உங்கள் சம்பள விபரம் தொடர்பில் விவாதம் நடந்ததாக அறிந்தோம். மிகவும் கவலையாக இருந்தது. ஒருமுறை ஜப்பானியத் தூதுவர்கள் யாழ்ப்பாணத்துக்கு வருகை தந்த போது, எங்களுக்கு வாகனம் தேவை என்று நீங்கள் கேட்டீர்கள். இப்போது உங்கள் சம்பளம் தொடர்பில் விவாதம் நடத்துகிறீர்கள். இவற்றைச் செய்யாதீர்கள் என்று நாம் சொல்லவில்லை.

மாறாக சம்பளத்தை அதிகரிப்பதாக இருந்தால் அதை உங்களுக்குள் கதைத்து உரிய ஒப்புதல்களைப் பெற்று அலுவலை செய்து முடியுங்கள். அதற்காக சபை நேரத்தில் உங்கள் சம்பள அதிகரிப்புத் தொடர்பில் விவாதம் நடத்தி வில்லங்கப்படாதீர்கள்.

இது உங்களை பதவியில் அமர்த்திய மக்களுக்கு நீங்கள் செய்யும் பிரதியுபகாரமாக அமைந்துவிடாது என்பதனை மட்டும் நினைவில் வைத்துக் கொள்ளுங்கள்.

---

# சொன்னார்கள் சொன்னார்கள்...

வடமாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரனைஇலங்கை தமிழரசுக்கட்சியிலிருந்து நீக்கவேண்டும்

முதலமைச்சர் விக்னேஸ்வரனை இந்தப் பொறுப்புக்கு அழைத்து வந்தவர்களில் நானும் முக்கியமான ஒருவன். அவருக்கு வடமாகாண சபையை நிர்வகிக்கின்ற பொறுப்பை கட்சி கொடுத்திருந்தது. கடந்த நாடாளுமன்றப் பொதுத் தேர்தலின் போது கட்சிக்கு சார்பாகச் செயற்படாமையே எமக்கும் அவருக்கும் இடைவெளி உருவாகக் காரணம்.




தேர்தல் பிரசாரங்களில் ஈடுபட மனமில்லாமல் கட்சிக்கு எதிராக அறிக்கை வெளியிட்டிருந்தார். நடுநிலையாக இருக்கப்போகிறேன், ஊமையாக இருக்கப் போகிறேன் என்றார். எப்படியானவர்கள் தெரிவு செய்யப்பட வேண்டும் என்று அடையாளம் காட்டுகின்ற போது தெளிவாகவே மாற்றுக்கட்சியை சுட்டிக்காட்டி அறிக்கை விட்டிருந்தார்.

எந்த ஒரு கட்சியும் தனது உறுப்பினர் இவ்வாறு செய்வதை அனுமதிக்காது. முதலமைச்சராக இருக்கலாம். இளைப்பாறிய நீதிபதியாக இருக்கலாம். இந்த விடயத்தில் அவரைக் கட்சியிலிருந்து நீக்குமாறு தனிப்பட்ட முறையில் நான் கேட்டிருக்கின்றேன்

நான் அவரிடம் விளக்கம் கோரவேண்டும் என்றுதான் கேட்டிருக்கிறேன். அதை இன்னும் கட்சி செய்யவில்லை. விரைவில் கட்சி அதைச் செய்தே ஆகவேண்டும்.

**சுமந்திரன்**

வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி. விக்னேஸ்வரனை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் இருந்து நீக்குவது தொடர்பாக முடிவு ஏதும் எடுக்கப்படவில்லை. அவ்வாறு எவரேனும் கூறியிருந்தால் அது தவறானது



கடந்த நாடாளுமன்றத் தேர்தல் காலத்தில், முதலமைச்சர் வெளியிட்ட சில கூற்றுக்கள் மற்றும் அவரின் சில நடவடிக்கைகள் சம்பந்தமாக சில கேள்விகள் எழுப்பப்பட்டது உண்மை.

அது தொடர்பாக அவரிடம் நாங்கள் இன்னும் பேசவில்லை. பேச இருக்கிறோம்.

எனினும், கட்சியிலிருந்து அவரை நீக்குவதற்கு ஒரு முடிவு எடுக்கப்பட்டதாக யாரும் கூறியிருந்தால் அது தவறு.

முதலமைச்சருக்கும் எமக்குமிடையில் விரைவில் பேச்சு இடம்பெறும்

**சம்பந்தன்**

சரத் பொன்சேகா இல்லாவிட்டாலும் கூட, எனது தலைமையில் போர் வெற்றி கொள்ளப்பட்டிருக்கும்

சரத் பொன்சேகாவின் இடத்தில் வேறொருவர் இருந்திருந்தாலும் எனது தலைமையில் போர் வெற்றிகொள்ளப்பட்டிருக்கும்.


ஆனால், நான் இல்லாவிட்டால் போரை வென்றிருக்க முடியாது.

ஜனாதிபதி மாளிகைக்குள் பதுங்கு குழி நிர்மாணித்தது இந்த நாட்டின் ஜனாதிபதியின் பாதுகாப்புக்கே தவிர மகிந்த ராஜபக்ச என்ற தனி நபருக்காக அல்ல.

போர்க்காலத்தில் பாதுகாப்புத் தரப்பினரின் ஆலோசனைகளுக்கமையவே இந்தப் பதுங்கு குழி நிர்மாணிக்கப்பட்டது.

அத்துடன் வெள்ளைவான் கடத்தல், கொலை கொள்ளை போன்றவற்றுக்கும் எனக்கும் எவ்விதத் தொடர்புமில்லை.

கடந்த காலத்தில் மகிந்த ராஜபக்சவை சுற்றியிருந்த சிலரின் நடவடிக்கைகள் காரணமாகவே அவர் தோல்வி கண்டார்.



இன்று இவர்கள் ராஜபக்சாக்களுக்கு எதிராகப் பேசுகின்றனர். தமிழ், முஸ்லிம் மக்களின் வாக்குகள் கிடைக்காமையும் அவரது தோல்விக்கு வழி வகுத்தது.

**கோத்தாபய ராஜபக்ச**

# வடக்கில் எங்களுக்கான செம்மையான கல்வி எப்போது?

வடமாகாண அரசியலில் "ஒரு ஓட்மன்" என்ற நிலைக்கு நீதிபதி தள்ளப்பட்டுள்ளார். இங்கு ஒன்றை கவனிக்க வேண்டும். வாலுள்ள மனிதரிகளின் ஊருக்கு போனா நாங்களும் வால் வைக்க வேண்டும். இல்லாட்டி எங்களை நையாண்டி பண்ணுவார்கள் ஒதுக்குவார்கள்.

நல்ல மனிதராக இவரை ஒரு ஆன்மீகவாதியாக, தன்னுடைய சமூகத்துக்கு ஏதும் செய்ய நினைத்து வந்தவர் என்று நல்லவர்கள் நிதானமாக யோசிப்பவர்கள் கருதுகிறார்கள். கள்ளத்தனம், கபடம், குரோதம், சுயநலம், சுரண்டுதல், ஒதுக்கல், துஸ்பிரயோகம் செய்தல், அபகரித்தல், பாரபட்சம் காட்டுதல், பொய்பேசுதல், ஏமாற்றுதல் என இன்னோரன்ன சமூகநீதிக்கு விரோதமாக வளந்துவரும் பழைய அரசாங்க உத்தியோகத்தர்களை பெரும்பான்மையாக கொண்ட வடமாகாண சபையில் என்னவென்று முதலமைச்சர் நீதியை நிலைநாட்டப் போகிறார் என்பது இப்போது எழுந்துள்ள ஐயவினா

வடமாகாண முதல்வர் பத்திரிகைகளின் செய்திகளுக்கும் விமர்சனங்களுக்கும் நாண்கள் செவிசாய்க்க முடியாது என்று பேசியுள்ளார். அவர் ஒரு நீதிமான் ஒரு ஜனநாயக சமூகத்தின் மக்கள் குரலாக இருப்பது ஊடகம் எல்லாம் சரியாக ஊடகங்கள் செய்கின்றன என்பதற்கு. இல்லாவிட்டாலும் அவற்றை விமரிசனப் பாங்கிலாவது கருத்தில் கொள்ள வேண்டும். இதன்வழி நின்று சிலவற்றை நோக்குவோம்.

கல்வியில் ஊழல் ஆற்றலுள்ள அதிபர்கள் ஒதுக்கப்பட்டமை, சுகாதாரத்தில் அநியாயம், சில ஆஸ்ப்பத்திரிகளில் டாக்டர்கள் இல்லை, பிரதேச சபைகளில் நிர்வாக சீர்கேடுகள் என்றும் ஒரு ஜனநாயகப் பண்பு ஒழிந்த குழுவினரோடு எப்படி இவரால் சமரசம் செய்ய முடியும்?

திட்டமிடல் இல்லாமை வடக்கின் மனிதவள அபிவிருத்திக்கான தரவுகள் இல்லாமை. பௌதீக வளங்களை இனம்கண்டு விளைநிலைப்படுத்தாமை முகாமைத்துவங்களை அகவயமாக நோக்குதல், சார்புநிலை கொண்டு நிறுவனங்களில் தலையிடுதல் இதில் முக்கியமாக,

தனது அதிகாரத்தை சிலகாலம் மிக மோசமான நிர்வாகியான கல்வியமைச்சரிடம் கையளித்து முதலமைச்சர் அமெரிக்கா சென்ற போது இங்கு மிகத்திமிரோடு அநியாயங்களை கல்வியமைச்சர் செய்தார் என்று அவதானிகள் கூறுகிறார்கள்.

அடியில் நீறுபூத்த நெருப்பாகக் கிடந்த சாதிவாதம், ஊர்வதம் என்பன இவரின் தீர்மானங்கள் மீது செல்வாக்கு செலுத்தியது. பெண்கள் சார்புவாதம் கல்விப் புலத்தில் மிக மோசமாக பின்பற்றப்பட்டது. இதனால் புலிகள் காலத்தில் கூட இல்லாத அளவுக்கு கல்விச் சிந்தனை புறக்கணிக்கப்பட்டது. இப்படியே போனால் மிகப்பெரும் துறையான கல்வி எம்மை இந்த நாட்டின் கோடிப்புறத்தில் தள்ளுமளவுக்கு தாழ்ந்து போகும். இது பேரினவாதிகளுக்கு சிரிப்புக்கு இடமாகும். அண்மைய புள்ளி விபரங்கள் வடபுலத்துக் கல்வி தாழ்ந்து போகிறது என்று காட்டுகிறது.

முதலமைச்சர் விக்னேஸ்வரன் அவர்கள் பாடசாலை மாணவர்கள் பாதிக்கப்படும் நிலைமைகளில் பெற்றோர், ஆசிரியர்கள் பங்கு பற்றிப் பேசியுள்ளது கவனிக்கத் தக்கது.

"நாங்கள் வாழ்ந்து கெட்ட சமுதாயமாக கணிக்கப்படக்கூடாது வீழ்ந்தும் மேலெழுந்து வாழப் போகும் வலிமைமிக்க சமுதாயமாக போற்றப்பட வேண்டும். அதில் அதிபர்கள், ஆசிரியர்கள் பணி மகத்தானது" எனக் குறிப்பிட்டுள்ளார். உண்மையில் ஒரு சமூகத்தை வழிநடத்துவது கல்வி அங்கே பாரபட்சம் காட்டப்பட்டு உண்மையான ஆற்றலும் புதிய சிந்தனையுமுள்ள அதிபர்கள் தேவையற்ற விதத்தில் புறக்கணிக்கப்பட்டனர். அவர்களுக்கு அரசியல் செல்வாக்கில்லை. காலைக் கையைப் பிடிக்கவில்லை என்பதால் யாரும் அவர்காளுக்காக குரல் கொடுக்கவில்லை.

இவ்வாறே நலன்பேண் துறைகளில் முக்கியமாக சுகாதாரம். பின்தங்கிய வைதியச்சாலைகள் கைவிடப்பட்டுள்ளன ஏன்?

அதிபர்கள் பற்றி மிக அழுத்தமாகப் பேசியுள்ளார் வடமாகாண முதல்வர். ஆனால் கல்வி அமைச்சரின் சுயவிருப்புக்காக பழிவாங்கப்பட்ட அதிபர்கள்

> *ஒரு பெரிய அடக்கு முறைக்குள் இருக்கி றோம் என்று கூக்குரல் எழுப்பும் தமிழர் சமூகம் தங்களுக் குள்ளேயே ஒடுக்குமுறை களைத் திட்டமிட்டுச் செய்வது ஒரு இருண்ட நாட்களுக்கான சமிக்ஞையே என்பதை வடக்கு நிர்வாகம் நிதானமாக புரிய வேண்டும். இன்றைய கல்வியுலகம் மாந்தர் சமுதாயத்தின் வாழ்க்கையாகவே மாறியுள்ளது.*

பற்றியும் அவர் கவனம் எடுக்க வேண்டும். வவுனியா தொட்டு வடமராட்சி வரை அதிபர்களுக்கு பாடசாலை பொறுப்பளித்தலில் மிக மோசமான ஏற்றத்தாழ்வுகள் காணப்படுவது மிகவெளிப்படையானது. இதனை வடமாகான கல்விச் செயலாளரும் கல்வி அமைச்சரும் பொறுப்பற்ற விதத்தில் செய்தார்கள் என்று முல்லைத்தீவு, கிளிநொச்சி, மடு, தீவகம், யாழ்ப்பாணம் முதலிய கல்வி வலயங்களிளிருந்து குரல் எழுப்பப்படுகிறது.

ஒரு வலயத்தில் பார்த்த கல்வித்தரம் இன்னொரு வலயத்தில வேண்டப்படவில்லை. இதுவோ சுயநிர்ணயத்தால் நாம் பெற்றது. முழு சுயநிர்ணயமும் கிடைத்தால் என்னாகும். ஒரு அளவுகோல் கொண்டு எல்லோரையும் சமமாக



நடத்த வேண்டும். கோடாமை சான்றோர்க்கு அணி.

சில அதிபர்கள் செய்யும் திருகுதாளங்களை எங்கடை ஆக்கள் தானே என்று பார்த்துக் கொண்டிருக்கிறார்கள். சில பாடசாலை அதிபர்கள் பாடசாலை நேரத்திலேயே தனியார் கல்வி நிலையங்களுக்கு மாணவர்களைப் போவதை ஆதரிக்கிறார்கள். தமது நிர்வாக சுமையைக் குறைக்க தமது ஆசிரியர்களை கற்பித்தலில் ஈடுபடுத்த முடியாது. மெதுவாக மாணவர்களை தனியார் கல்வி நிலையங்களுக்கு போக விடுகிறார்கள். இவை கல்விக்கான காலத்தை துஸ்பிரயோகிக்க நிறைய வாய்ப்புகளைக் கொடுக்கும். 2013 களில் நடைமுறைக்கு வந்த தொழிநுட்பத்துறைக்குத் தமது பாடசாலை மாணவர்களை தயார்படுத்திய பாடசலைகளை அவர்களின் பொழுதை வீணாக்கின தொழிநுட்பக்கல்வியை உயர்தரத்தில கற்பிக்க ஆற்றலுள்ள ஆசிரியர்கள் பாடசாலைகளில் இல்லை. இவற்றைக் கேட்டு பெற்றுக் கொடுக்க மாகாணம்சார் அதிகாரிகள் அக்கறை கொள்ளவில்லை. இப்போது வரப்போகின்ற பெறுபேறுகள் எப்படி அமையப் போகிறதோ என்று பெற்றோர் ஏங்கியவண்ணமுள்ளனர்.

சில பிள்ளைகள் வளமற்ற பாடசாலை என்பதால் இந்தத் துறையை இடையில் கைவிட்டு வேறு துறைக்குத்தாவினர். இங்கு இளைஞர் தொழில் இன்மை. இந்த நாட்டில் அதிகரிக்கும் நிலைமை தொடரவும் தொழில் நுட்பவியலாளர்களை வடமாகாணத்தில் இல்லாது போகவும் வழி பிறக்கிறது. விரலால் எண்ணும் அளவுக்கே காணப்படும் இப் பாடசாலைகள் மீது வடக்கு கல்வியமைச்சு எந்தவித அக்கறையும் கொள்ளவில்லை. வடக்கு கல்விமைச்சிடம் இலங்கை கல்வியுலகமும் வெளியுலகமும் பற்றிய தெளிவோ, தகவல்களோ இந்த புதிய கல்வி சீர்திருத்தங்கள் ஏன் என்ற எண்ணங்களோ இல்லை.

இதனால் வடக்கு கல்வி எதிர்காலத்தில் இருண்ட நிலைக்கும அதன்பின் இளைஞர் குழப்பங்களும் ஏற்றப்பட காலாய் அமையும் என உணர முடிகிறது.

பின்தங்கிய பாடசாலைக்கான தேவையை அறியும் கீழிருந்து மேலான அணுகுமுறைகளால் சிறந்த சமநிலை முகாமைத்துவம் ஒன்றை செய்வதன் அவசியம் வடக்கு கல்வியமைச்சால் இதுவரை முன்னெடுக்கப்படவில்லை. புள்ளிவிபரங்களைச் சேகரிக்கும்போது முக்கிய பாடங்களுக்கு சில பாடசாலைகளில் ஆசிரியர்கள் இல்லை. அதனால் கல்வி பெறுவதில் சமநின்மை நிலவுகிறது என்பது கல்வியமைச்சின் செயலாளருக்கு இது புரியாத நிலை காணப்படுகிறது.

நடைமுறையில்

1. பின்தங்கிய பகுதிகளுக்கு ஆசிரியர்கள் செல்ல விரும்பாமை.
2. தமக்கு வேண்டியவர்களை வசதியான இடங்களுக்கு மேலதிகமாகவேனும் அமர்த்ததுதல்.
3. இடமாறங்கள் வழங்கும்போது குறித்த பாடசாலையில் ஏற்படப் போகும் தொடர்விளைவுகள் பற்றி கரிசனை கொள்ளாமை.
4. முக்கியமான பௌதீக வளங்களை அப்பாடசாலைக்கு வழங்காதிருப்பது.
5. அதிபர்களின் முகம்பார்த்து பாடசாலைகளைபுறக்கணிப்பது
6. சமூகங்களின் முகம்பார்த்து பாடசாலைகளுக்கு பாரபட்சமாக வளங்களை பகிர்தல்.
7. அதிபர்களின் அரசியல் நடவடிக்கையை கவனத்தில் எடுத்தல்.
8. ஆசிரியர்களின் தனிப்பட்ட செல்வாக்குகளில் பாடசாலை நிர்வாகத்தில் தலை இடுதல்.

இது வடபுலத்தின் வீழ்ந்து கிடக்கும் கல்வியை மேலும் தாழ் நிலைக்கே கொண்டு செல்லும்.

ஒரு குறித்த தொகைப் பாடசாலைகளை இப்பகுதி சமூகத்துக்கு பயனுள்ள வகையில் விளைதிறன்மிக்க நிறுவனங்களாக வளர்த்தெடுக்க வேண்டிய கல்வியமைச்சரும் செயலாளரும் கடந்த முப்பது வருடங்களாக கல்விக்கென்றே தங்களை அர்ப்பணித்த மாகாண கல்வியியலாளர்கள் தொட்டு அதிபர்கள் வரையுள்ளவர்களின் மனங்களைப் புண்படுத்தி அவர்க்ள விரும்பாதவற்றை எல்லாம் நியாய்த்துக்கு மாறாகத் தங்களிடம் அதிகாரம் இருக்கென்பதற்காக பாடசாலைகளை குழப்புகிறார்கள் எனக் குரல்கள் எழுகின்றன.

ஆசிரியர் சங்கங்கள் அதிபர்கள் சங்கங்கள் என்பன நியாயங்களை உரைக்க வலுவற்று இருப்பதை உணர முடிகிறது. ஒரு பெரிய அடக்கு முறைக்குள் இருக்கிறோம் என்று கூக்குரல் எழுப்பும் தமிழர் சமூகம் தங்களுக்குள்ளேயே ஒடுக்குமுறைகளைத் திட்டமிட்டுச் செய்வது ஒரு இருண்ட நாட்களுக்கான சமிக்ஞையே என்பதை வடக்கு நிர்வாகம் நிதானமாக புரிய வேண்டும். இன்றைய கல்வியுலகம் மாந்தர் சமுதாயத்தின் வாழ்க்கையாகவே மாறியுள்ளது. உலகில் உணவு உற்பத்தி செய்பவர்கள் வீதம் குறைந்து செல்ல சேவையினரின் தொகை அதிகரிக்கிறது. இந்நிலையில் வடக்கு மாகாணத்தின் கல்வி சரியாக திசை உட்படுத்தப்பட வேண்டும்.

இன்றைய எழுத்தறிவு வேறாக மாறியுள்ளது. இந்நிலையில் அதற்கு உகந்த கல்விச்சூழல் மாகாணசபையின் கல்வித்துறையால் உருவாக்கப்பட்டுள்ளது. தொழினுட்பக் கற்கையை மேற்கொண்ட மாணவர்களுக்கென்று ஒரு ஆய்வுகூடத்தைக் கடந்த இரண்டு வருடங்களில் வடக்கு கல்வியமைச்சு யோசித்ததா? இதுவரை சிறப்பாக முன்னெடுத்தவை என்ன? மக்களின் பணத்தை உறிஞ்சீக் கொண்டு சொகுசாக பஜிரோவில் போய் பிரதமவிருந்தினராக கலந்துகொண்டால் சரியா ? இன்று பல கேள்விகளோடுதான் புதிய சமுதாயம் எழுச்சியுற்றுள்ளது. அதற்கு வடக்கு கல்வியமைச்சு பதில் சொல்ல வேண்டும். இல்லாவிட்டால் இவர்களைத் தெரிவுசெய்தவர்களையே இந்த பொறுப்புக் கூறாமை சாரும். இலஞ்சம் வாங்குதல் சாதி சனம் கிராமத்தான் பக்கத்து வீட்டான் உதவியவன் என்ற வட்டத்துக்குள் இந்த அதிகார ஆளுமைகள் சுழலுவது கல்விக்குப் பெருங்கேடு. நீதியான மனிதர்களிடமும் ஒழுக்கம் மிக்கவர்களிடமும் கல்வி நிர்வாகம் இல்லையே.

அருணன்


# தனது கடமை பொறுப்புகளிலிருந்து விலகுகிறாரா முதல்வர் விக்கி?

வடமாகாண சபையின் நிர்வாக திற்குட்பட்ட அரச திணைக்களங்களின் சில நேர்மையான அதிகாரிகளுடன் பேசுகின்ற பொழுது எல்லோரும் சொல்லி வைத்தால் போல கூறுவது முதலமைச்சர் விக்னேஸ்வரன் அவர்கள் முதலமைச்சர் பதவிக்கு தகுதி அற்றவர் என்பதுதான்.

விக்னேஸ்வரன் வருகை தரும் போது அவர் காலில் விழுந்து மரியாதை செய்யும் கம்பன் கழகத்தினரும், விக்னேஸ்வரனை அரசியலுக்கு கொண்டு வருவதில் பெரும் பங்காற்றிய கம்பவாருதி ஜெயராஜ் அவர்களும் முதலமைச்சரின் தற்போதைய நடவடிக்கைகளில் பாரிய அதிருப்திகொண்டு அறிக்கை விடுகின்றனர்.

இதைவிட மக்களால் தெரிவு செய்யப்பட்ட பல மாகாணசபை உறுப்பினர்கள் முதலமைச்சர் மீது காழ்ப்புணர்வையே காட்டுகின்றனர்.

இவற்றின் உச்சகட்டமாக தமிழ் தேசியக் கூட்டமைப்பின் முக்கிய உறுப்பினர் ஒருவர் முதலமைச்சர் விக்னேஸ்வரன் கட்சிக்கு கட்டுப்படுவதில்லை என்ற குற்றச்சாட்டை முன்வைத்து அவரின் அண்மைக் கால நடவடிக்கைகளுக்காக கூட்டமைப்பு அவரிடம் விளக்கம் கோரவேண்டும் என்று வெளிப்படையாகவே தெரிவித்துள்ளார்.



இவ்வாறு முதலமைச்சர் மீது குறை கூறுவது வேறு யாருமல்ல.

அவர்மீது மதிப்பும் மரியாதையும் கொண்டிருந்தவர்கள்தான்.

அவரை அரசியலுக்குக் கொண்டு வருவதில் தீவிர ஆர்வம் காட்டியவர்கள்தான்.

திடீரென எல்லோரும் இவர் மீது குற்றம் சுமத்துவதற்கான காரணம் என்ன?

இவர் செய்த பாரிய தவறுகள் தான் என்ன?

ஒரு நல்ல மனிதன், ஒரு அப்பழுக்கில்லாத ஆன்மீகவாதி,

ஒரு தலைசிறந்த இலக்கியவாதி, ஒரு துறைபோன சட்ட அறிவாளர், ஒரு தீவிர தமிழ் ஆர்வலர்.

இவ்வாறாக அனைத்து ஆற்றலும் நிறைந்த ஓர் கல்வி மானை எதிர்ப்பது என்பது பாரிய கேள்விக்குரிய ஒன்றாகும்.

உண்மையில் மேலே சொன்ன அனைத்து தகைமைகளும் நிறைந்த அற்புத மனிதர் விக்னேஸ்வரன் என்பதில் இரு வேறுபட்ட கருத்துக்கே இடமில்லை.

பிரச்சினைக்குரிய தளங்கள் இரண்டுதான்.

1. அவரின் அரசியல் நடவடிக்கைகள்.
2. அவருடைய நிர்வாகத்திறன்.

### அரசியல் நடவடிக்கைகள்

கற்பனையான, காலத்துக்கு ஒவ்வாத, நடைமுறைக்கு அப்பாற்பட்ட, மக்களின் உணர்வுகளைத் தூண்டி விடுகின்ற அரசியல் கொள்கையைத்தான் முதலமைச்சர் அவர்கள் பின்பற்றுகின்றார்.

அரசியல் தெளிவோ, ராஜதந்திரமோ சிறிதளவுகூட இல்லாத சிறு மாணவனாகவே அறிக்கைகளை விடுகின்றார். தன்னை நியாயப்படுத்துவற்காக அவர் கையில் எடுத்துள்ள ஆயுதம் தமிழ் தேசியம்.

தன்னை ஒரு தீவிர தமிழ் தேசியவாதியாகக் காட்டிக்கொள்ளவே அதிகம் விரும்புகிறார்.

தமிழினிக்காக இவர் எழுதிய ஒருபக்கக் கட்டுரையும் அதையே சொல்லுகிறது. உண்மையிலேயே தமிழினி பட்ட கஷ்டங்கள் எண்ணிலடங்காதவை. தமிழினியின் விடுதலைக்காக கடைசிவரை ஒரு தமிழ் வழக்கறிஞர் கூட வாதிடவில்லை. சிங்கள வழக்கறிஞர்களே தமிழினியை விடுவித்தார்கள். அப்போதெல்லாம் நீதித்துறையிலும் சட்டத்துறையிலும் பழம் தின்று கொட்டை போட்ட விக்னேஸ்வரன் என்ன செய்தார்?. அப்போது வராத தமிழ் தேசிய உணர்வு தமிழினியின் மரணத்திற்கு பின்புதான் முதலமைச்சருக்கு வந்ததா?

இந்த இரட்டை வேடம்தான் முதலமைச்சரின் இன்றைய அரசியல் நிலைப்பாடு.

சிங்கள மக்களையும் தென்னிலங்கை அரசியலையும் ஆணி வேறு அக்குவேறாக அறிந்திருப்பவர் முதலமைச்சர். அவர்களோடு தனிப் பட்ட ரீதியில் மிகமிக நெருக்கமானவர்.

அவருக்கு தென்னிலங்கையின் அரசியல் நிலைப்பாடு தெளிவாகவே தெரியும்.

தென்னிலங்கையில் இருந்து நாம் பெறக்கூடியவை எவை, பெற முடியாதவை எவை, பேசித் தீர்த்துக் கொள்ளக் டியவை எவையென அவருக்கு மிகமிக துல்லியமாகத் தெரியும்.

தெரிந்தும் பெறமுடியாதவை எனத் தெளிவாக தெரிந்தவற்றுக்காகத்தான் முதலமைச்சர் குரல் கொடுக்கின்றார்.

உண்மையில் முதலமைச்சர் தன்னைத் தானே ஏமாற்றுகின்றார் என்பதே உண்மை.

கடந்த தேர்தலில் இவர் ஆடிய நடுநிலை நாடகம் இவருடைய அரசியல் முதிர்ச்சியின்மைக்கு ஒரு சிறந்த எடுத்துக்காட்டு.

இவர் விட்ட அறிக்கைகளில் இவரின் அரசியல் தெளிவின்மையும் தடுமாற்றமும் அப்பட்டமாகத் தெரிகிறது.

இவரின் அண்மைக்கால அறிக்கைகளையும் பேச்சுக்களையும் அவதானிக்கும் பொழுது ஒன்று தெளிவாகத் தெரிகிறது. பெரும்பான்மை இனத்துடனான நல்லிணக்கத்தைக் கட்டியெழுப்புவதைத் தவிர்த்து மீண்டும் மீண்டும் இனமுரண்பாட்டுக்குத் தூபமிடுவதாகவே இவரின் நடவடிக்கைகள் அமைகின்றது.

அரச எதிர்ப்பு மூலம் தன்னை ஒரு தீவிர தமிழ் தேசியவாதியாக காட்ட முற்படுவது தெளிவாகத் தெரிகிறது.

அரச பதவி வேண்டும், 3 லட்சம் வாடகையில் டெம்பில் ரோட்டில் வாசஸ்தலம் வேண்டும், அரச சொகுசு வாகனம் வேண்டும், வேண்டிய பொழுது கொழும்பு–யாழ்ப்பாணம் இலவச விமான டிக்கெட் வேண்டும், மத்திய அரசின் பொலிஸ் பாதுகாப்பு வேண்டும் இவையெல்லாம் அரச செலவில் வேண்டும், ஆனால் மக்களுக்கான நல்ல திட்டங்கள் வரும் போது மட்டும்தான் மத்திய அரசு வேண்டத்தகாதது ஆகின்றது.

பொலிஸ் அதிகாரம் மாகாண சபையிடம் வரும்வரை தனக்கான மத்திய அரசின் பொலிஸ் பாதுகாப்பை இவர் வேண்டாம் எனச் சொல்லலாம் அல்லவா?

தனக்கான எல்லாத் தேவைகளுக்கும் மத்திய அரசுதேவை, மக்களுக்கான தேவைகளுக்கு மட்டும் மத்திய அரசுடனான எதிர்ப்பு அரசியல்.

ஏன் இந்த இரட்டை வேடம்.? இதன் அர்த்தம் மத்திய அரசிடம் சரணாகதி அடைவது என்பதல்ல.

மத்திய அரசிடம் இருந்து பெறக்கூடிய உச்சக்கட்ட பலன்களை மக்களுக்குப் பெற்றுக் கொடுக்கும் அதேவேளை தீர்க்கப்படாது இருக்கும் பிரச்சனைகளுக்காக ராஜதந்திர ரீதியில் செயல்படுவதே ஒரு முதிர்ந்த அரசியல்வாதியின் வெற்றி.

இந்த வகையில் விக்னேஸ்வரன் அவர்கள் ஒரு தோற்றுப்போன அரசியல வாதியே.

### நிர்வாக நடவடிக்கைகள்

உண்மையில் யாழ்பாணத்தைக் கொழும்பு, கண்டி போன்று ஒரு Mega City ஆக கட்டியெழுப்புவற்கான பூர்வாங்க நடவடிக்கையில் மத்திய அரசு இறங்கியிருக்கிறது.

இது உயர்மட்டத்தில் இருக்கும் பலருக்கும் தெரிந்த ஒரு விடயம்.

எத்தனையோ ஆயிரம் மில்லியன் ரூபாய்கள் செலவிடப்படவிருக்கிறது.

இதற்காக உலக வங்கி, ஆசிய அபிவிருத்தி வங்கி போன்ற சர்வதேச நிதி நிறுவனங்கள் எப்போது வேண்டுமென்றாலும் நிதியைத் தர தயாராகவே இருக்கின்றன.

இந்த mega project ஐ எதிர் கொள்ளகூடிய நிலையில் வடமாகாண சபையும் அதன் அமைச்சர்களும் அதன் தலைமைப் பொறுப்பதிகாரியுமான முதலமைச்சரும் தயாராக இருக்கின்றார்களா என்றால் இல்லை என்பதே மிகத் தெளிவான பதில்.

நிர்வாக மட்டத்திலுள்ள அனைவருக்கும் இது தெரியும்.

இதற்கான அடிப்படையான சில தயார் படுத்தல்களையாவது வடமாகாண சபையும் முதலமைச்சரும் செய்கின்றார்களா என்றால் அதுவுமில்லை.

Pro-Active ஆனா எந்த செயல்பாட்டையும் முதலமைச்சர் செய்வதில்லை.

மக்களாலும், வடமாகாணசபை அதிகாரிகளாலும் எழுப்பப்படும் கேள்விகளுக்கு இதுவரைக்கும் முதலமைச்சர் அவர்கள் constructive ஆனா எந்தப் பதிலையும் சொல்லவில்லை.

சில மக்கள் சந்திப்புகளின் போது மக்களின் கோரிக்கைகளுக்கான பொறுப்புணர்வுள்ள பதிலை முதலமைச்சர் அளிப்பதில்லை. அண்மையில் புங்குடுதீவில் நடந்த மக்கள் சந்திப்பின் போது அம்மக்கள் புங்குடுதீவிற்கு தனியான காவல் நிலையம் வேண்டுமென்று முதலமைச்சரிடம் கோரிக்கை வைத்தனர். இதற்கான முதலமைச்சரின் பதில் வேடிக்கையானது. பொலிஸ் அதிகாரத்தை வடமாகாண சபைக்குப் பெற்றுக்கொள்ளுவதற்காக நாம் போராடிக் கொண்டு இருக்கும் இவ்வேளையில் புதிய பொலிஸ் நிலையத்தை மத்திய அரசிடம் கேட்க முடியாது என்ற கருத்துப்படவே முதலமைச்சர் பதிலளித்தார். பொலிஸ் அதிகாரம் மாகாண அரசிடம் வரும்வரை அப்பகுதி மக்கள் அல்லல பட வேண்டும் என்பதா முதலமைச்சரின் வாதம் ?

இதேபோல மக்கள் பிரச்சினைகளுக்குத் தீர்வைக் கண்டறிவதை விட அவை தீர்க்கப்பட முடியாது என்பதற்கான காரணங்களையே முதலமைச்சர் சொல்கின்றார்.

அண்மையில் மணல் பிரச்சினை சம்பந்தமான கரவெட்டி ஒன்றியம் முன்வைத்த கோரிக்கைக்கும் முதலமைச்சர் இவ்வாறே பதிலளித்தார்.

மக்களின் எந்த பிரச்சினைக்கும் இவர் தீர்வுகண்டதாகத் தெரியவில்லை.

இவரின் ஆணைக்குட் பட்ட திணைக்களங்களில் நடக்கும் முறைகேடுகளுக்கு எதிராக இவர் எந்த நடவடிக் கையும் இதுவரை எடுக்க வில்லை.

மாகாண சபையின் வினைத்திறனை அதிகரிப்பதற்காக இவர் எந்தவிதமான நடவடிக்கைகளையும் இதுவரை எடுக்கவில்லை.

இவருடன் சந்திக்க வரும் பிறநாட்டு அமைச்சர்களிடமும் அதிகாரிகளிடமும் இவர் சொல்வது ஒன்றே ஒன்றுதான்.

முதலில் இனப்பிரச்சினையைத் தீருங்கள். பின்னர் அபிவிருத்தியைப் பற்றி பேசுங்கள் என்பதேயாகும்.

இது எவ்வளவு பிற்போக்கு சிந்தனை.

இனப்பிரச்சினைக்கான தீர்வு முயற்சிகளோடு சமாந்தரமாக அபிவிருத்திக்கான முயற்சிகளுக்கு முதலமைச்சர் தயாரில்லை. இதனால் பெருஅளவிலான பணம் தடுக்கப்படுகிறது. இதற்கு முதலமைச்சர் சொல்லும் காரணம் சிரிப்புக்கிடமானது. அபிவிருத்தி என்ற போர்வையில் தென்னிலங்கை நிறுவனங்களுக்கும் பணத்தை வாரி வழங்கும் வெளிநாட்டு சூழ்ச்சிதான் இந்த அபிவிருத்தி நாடகம் என்பதே அவர் பதில். அவருக்கு ஒன்று தெரியவில்லை. MEGA PROJECTS ஐ முன்னெடுப்பதற்கான வளங்கள் எதுவுமே எம்மிடம் இல்லை.

மனிதவளம், தொழில்சார் வல்லுனர்கள், அங்கீகரிக்கப்பட்ட கட்டுமான நிறுவனங்கள், உபகரணங்கள், இயந்திரங்கள், கட்டமைக்கப்பட்ட நிர்வாகம் என எதுவுமே எம்மிடம் இல்லை.

இவை எல்லாவற்றிற்கும் நாம் தென்னிலங்கையையே சார்ந்திருக்க வேண்டும்.

இதுவே உண்மை. இதை விடுத்து தென்னிலங்கைக்கு பணம் சென்றுவிடும் என்று அபிவிருத்தி திட்டங்களை பிற்போடுவது முதலமைச்சரின் அனுபவமின்மையும் தவறான எடுகோள்களையுமே எடுத்துக் காட்டுகின்றது.

இது மக்களுக்கு செய்யும் மிகப் பெரிய துரோகமாகும்.

விக்னேஸ்வரன் அவர்கள் வினைத்திறன் இல்லாத ஒரு முதலமைச்சர் என்பதற்கு பின்வரும் காரணங்களை முன்வைக்கிறேன்.

1. அரசியல் தெளிவின்மை
2. இராஜ தந்திர அனுபவமின்மை
3. நிர்வாக திறனின்மை
4. மக்கள் பிரச்சினைக்கு தீர்வு காணும் ஆளுமையின்மை
5. Pro-Active சிந்தனையின்மை
6. இனப்பிரச்சினையையும் அபிவிருத்தியையும் ஒரே தட்டில் இட்டு அளவிடுதல்
7. தன்னுடனான உட்கட்சி முரண்பாட்டை முறையாகக்கையாளாமை.

இறுதியாக ஒன்றை சொல்கின்றேன்.

முதலமைச்சர் ஒரு பழுத்த ஆன்மீகவாதி.

இந்து மதகொள்கைகளை தன் வாழ்வின் அடிப்படையாகக் கொண்டவர்.

பாவங்களுக்கு அஞ்சுபவர்.

மனிதநேயம் மிக்கவர்.

அவருடைய மதக்கொள்கைக் கொள்கைகளில் ஒன்று யோகநெறி.

யோகம் என்பது ஒருவன் தனக்கு விதிக்கப்பட்ட கடைமையை சரிவர செய்தல் ஆகும்.

பலன் மீது பற்றுக்கொள்ளாது ஒருவன் தன் கடமையை தொடர்ச்சியாக ஆற்ற வேண்டும். இவர்களே தர்மவான்கள்.

இவர்களே இறைவனின் விருப்புக்குரியவர்கள்.

இவர்களே பிறவிப்பெரும் கடலைத் தாண்டக்கூடியவர்கள்.

கடைமையில் தவறுபவர்கள் இவற்றிற்கு தகுதியற்றவர்கள்.

கடைமையை செய்யாதவர்களில் முதலமைச்சரும் ஒருவரா?

நவாதரன்

# குடாநாட்டு உணவகங்கள்; நில் – கவனி – உண்

பசிக்கிறது என்றால் வீடுகளில் அம்மாவோ அல்லது மனைவியோ, பிள்ளைகளோ உணவு தருவர். அவ்வாறு குடும்பம் இல்லாதவர்களிற்கு பசியாற்றுவது? அதுதான் ஹோட்டல் எனப்படும் உணவுக்கடைகள். இந்த உணவுக்கடைகளின் பெருக்கம் நாளுக்கு நாள் அதிகரித்துக் கொண்டு வருகின்றது. ஆனால் இந்த அதிகரிப்பிற்கு ஏற்ப உணவுக்காகத் தங்கி வாழும் குழுமம் போசாக்குள்ளதாகவும், பலமுள்ளதாகவும் மாறியிருக்கின்றனவா என்றால் இல்லை என்று கன்னத்தில் அறைந்ததுபோல் பதிலளிக்க முடியும். பண்பாட்டின் தாயகம் என்று சொல்லப்படும் யாழ்ப்பாணத்தின் பண்பாட்டின் உப கூறான உணவுக் கலாச்சாரம் (Food calture) சிதைவடைந்து செல்கின்றமை கவலையளிக்கும் விடயமாகும்.

இது ஒருபுறமிருக்க மனித அடிப்படைத் தேவைகளினுள் ஒன்றானதும், உயிர் வாழ்வதற்கும் அவசியமான இவ்வுணவு தூய்மையானதாக இருக்கின்றதா? அதேவேளை அந்த உணவுப் பரிமாறலின் போது, விருந்தோம்பல் பண்புள்ள நோக்கத்தோடு (In a hospitable manner) இங்கு கருமம் ஆற்றப்படுகின்றதா என்றால் அது மிகப்பெரும் கேளிவிக்குறியாகவே இருக்கிறது.

இப்பதியானது இன்றைய யாழ்ப்பாணத்தின் உணவுக் கூறுகளின் சுகாதாரக்கேடு, விருந்தோம்பல் பண்புக் குறைவு பற்றியே பேச விளைகிறது.

இட்லி வைத்தாயிற்று... சாம்பார் வர இட்லி வெறுமையாக சாப்பிட்டு முடிந்துவிடும் நிலைமை இன்று யாழின் முன்னணிக் கடைகளில் அனைவரும் காணும் உண்மை. வடக்கில் குறிப்பாக யாழ்ப்பாணத்தில் சனத்தொகை குவிவு அதிகமாகக் காணப்படுகிறது. பல்கலைக்கழகங்கள் உள்ளிட்ட கல்வி நிறுவனங்களில் கற்க மாணவர்களும், இடம்மாற்றம் பெற்று பணியாற்றவும் இடம்பெயர்ந்து வந்துள்ள ஒருகூட்டத்தாரில் பெரும்பகுதி கடையுணவையே நம்பி இருக்கிறது. அதேவேளை வடக்கு வாழ் மக்களின் வாழ்க்கை முறைமாற்றம் அதிகளவில் உள்ளது. யாழ்ப்பாணத்திலே உள்ள குடும்பங்களில் கூட சமையல் பழக்கம் பல்வேறுபட்ட காரணிகளால் குறைவுபட்டு காணப்படுகிறது.

இக்கூட்டத்தினரும் கூட கடை உணவுகளையே நம்பவேண்டியிருக்கிறது. ஆனால் கடை முதலாளிகள் பெருச்சாளிகள் பொன்று தமது பணப்பெருக்கத்தை அதிகரிக்கவே பெருமளவு எத்தனங்கள் எடுக்கின்றனரே தவிர தம்மால் வழங்கப்படும் உணவுகளின் தரம் பற்றி சிந்திக்கத் தலைப்படுவது குறைவு.

உதாரணமாக ஒரு நோயாளி குடித்த கோப்பையில் இன்னொரு சுகதேகி தேநீர் அருந்துவாராயின் அவரது உடல் நலமும் பாதிக்கப்படும், தொற்றுநோய் பெருக்கத்திற்கு இவை வழிவகுத்து விடுகின்றன. ஈகையால் தேநீர்க் கோப்பைகளை தொற்றுநீக்கி பாவிக்க வேண்டும். இங்கு எத்தனை கடைகளில் இவ்வாறான சுகாதாரங்கள் நிகழ்த்தப்படுகின்றன என்பது வினாவே...? இத்தோடு சைவக்கடைகள் மற்றும் அசைவ உணவுக்கடைகள் தமது கடைகளிற்கு கொள்வனவு செய்யும் மரக்கறி, மீன், இறைச்சி, பால் இவற்றின் தரம் தொடர்பாக கவனம் செலுத்துகிறார்களா? இதற்கான ஒரு நபரை அனுப்பி தரமான பொருட்களை கொள்வனவு செய்கிறார்களா? விடை இல்லை. மொத்த விற்பனைகாரர் இவற்றை கடைகளில் வழங்கி விட்டு செல்கிறார். இங்குதான் என்ன தரமும், நிர்ணயமும் இதுதான் உண்மை.

முதலாளிகள் தமது பணியாளர்களிற்கு தூய்மையான உணவுப் பராமரிப்பு சேவைபற்றி அன்றாடம் விளக்கம், தெளிவு கொடுக்கிறார்களா? பெரும்பாலான கடைகளில் இல்லை. இது அண்மையில் இடம்பெற்ற ஒரு சம்பவத்தின்மூலம் பரவலாக வெளிப்பட்டிருந்தது.



"ஒரு உணவகம் கொள்வனவு செய்யப்பட்ட உணவுப் பொதிகளினுள் தீக்குச்சி, இறைச்சித் துண்டில் அகற்றப்படாத ரோமம் இருந்தது" என இளைஞர் ஒருவர் யாழ். நகர உணவகம் மீது தொடுத்த முறைப்பாட்டையடுத்து அந்த இளைஞருக்கு யாழ். நீதிமன்றத்தினால் பத்தாயிரம் ரூபா இழப்பீடு வழங்க உத்தரவு பிறப்பிக்கப்பட்டு இருந்தமை குறிப்பிடத்தக்கது.

இது சொல்லப்பட்ட பிரச்சினை. இதைப்போல எத்தனையோ பிரச்சினைகள் இருக்கின்றன. இவற்றைச் சொன்னால் பிரச்சினைக்கு தீர்வு வருமா? எமக்கு ஏதாவது பிரச்சினை வருமா? என்று நுகர்வோர்களால் பயந்து கொண்டு எத்தனையோ பிரச்சினைகள் வெளிக்கொணரப்படாமல் இருக்கின்றன. அத்தோடு வழங்கப்படுகின்ற முறைப்பாடுகள் எந்த அளவு எது தொடர்பான நடவடிக்கைகள் அசண்டைமீனம் இன்றி எடுக்கப்படுகின்றனவா? என்பதும் கேள்வியே?

இன்றைய உலகில் உள்ள அனைத்துத் துறைகளும் சேவை என்ற கோட்பாடுகளைக் களைந்து எல்லாம் இலாபம் சம்பாதிப்பு என்ற வரையறைக்குள் அடங்கிவிட்டன. மற்றையது இன்னொரு விடயம், யாழிலுள்ள பிரபலமான உணவகம் ஒன்றில் மதிய உணவு அருந்தச் சென்றிருந்தேன். ஒரு முட்டைச் சோற்றிற்கு சொல்லிவிட்டு இருந்தேன். மாறி, மாறி எல்லா சேவையாளர்களிடமும் சொல்லி சரியாக அரைமணி நேரத்தின் பின்புதான் உணவு வந்திருந்தது. இதுதான் இவர்களின் உபசாரநிலை. இது ஒரு புறமிருக்க சாப்பிட்டுக் கொண்டிருக்கும் போது ஒரு மாதிரியான முறையற்ற வாசனை வந்தது. நான் அது உணவின் வாசனையோ என எண்ணி சாப்பிட்டபோது அழுகிய வெங்காயங்கள் வெளிவந்தன. உடனே 300 ரூபா சாப்பாட்டை மூடிவிட்டு பணத்தைக் கொடுத்துவிட்டு வெளியேறி இருந்தேன். அவர்கள் பணக்காரர்களாக வர எத்தணிக்கிறார்களே தவிர எம்மை பசியில் வைத்து பணம் பறிக்கிறார்கள். அந்தக் கடையில் உணவு அறை மூடப்பட்ட அறையினுள் இருந்து. கதவை மூடிவிட்டு இவ்வாறான திருகுதாளங்கள் உணவில் நடந்தேறுகின்றன. அதேவேளை அதே கடையில் இன்னொரு பகிடி நடந்தது. நான் உணவருந்தும் போது ஒரு சுகாதார பரிசோதகர் உணவருந்திவிட்டு சென்றிருந்தார். இதுதான் எமது உணவகங்களின் நிலைமைக்கு ணவுக்கடை வைத்திருப்பவர் உணவு நஞ்சாதல், மோசமடைந்து உணவுக் கலாசாரம் பற்றி தெரிந்தவர்களோ, புரிந்தவர்களோ இல்லை. இதுதான் இங்கு பிரதான பிரச்சினையாக எழுந்திருக்கிறது.

ஒரு காலத்தில் இனவாதம் வடிவிலும், மொழிவாதம் வடிவிலும், கலாசார சீரழிவு வடிவிலும் எம்மினத்தை வாட்டி வதைத்த துன்பம் இன்றோ உணவு வடிவில் எம்மைப் பீடித்து இருக்கிறது. இன்று உணவு நஞ்சாதல், உணவு ஒவ்வாமை போன்ற பிரச்சினைகள் மேலெழ இந்த உணவு சுகாதாரம் இன்றிய பிரச்சினைகளே மூலகாரணிகளாக இருக்கின்றன. எமது புலமையாளர்கள் இனப்பிரச்சினை, மொழிப்பிரச்சினை பற்றி பேசுகிறார்களே தவிர எத்தனைபேர், சூழலியல் பிரச்சினை மாறிவரும் தூய்மையற்ற உணவுக் கலாசாரம்பற்றி பேச விளைகிறார்கள் என்பதும் இது தொடர்பான புலமைத்தனங்கள் அவர்களிடையே இருக்கின்றதா? என்பதும் பெரிய ஒரு வினா எழுச்சியே. இதுதவிர இன்னொருவர் குறிப்பிட்டுக் கூறிய விடயம், ஒரு கடையொன்றில் ஒரு மேசையில் சோறு ஆறப்போடுகிறது என்றும் அந்த சோற்றின் மீது பல நேரங்களில் இலையான்கள் தங்கி விடுகின்றன. கூடாரமாகி விடுகின்றதென்றும், பல நேரங்களில் அது வேலைக்காரர்களின் படுக்கையிடமாகவும் மாறிவருகின்றர் எனக் குறிப்பிட்டிருந்தார். இதேவேளை இன்று பெரும்பாலான உணவுக் கடைகளில் பத்திரிகைகளில் உணவு சுற்றிக்கொடுக்கப்படுகின்றது. இந்தப் பதிதிரிகைகள் கடைக்கு வரம்முன் எத்தனை பூனைகளினதும், ஏனைய உயிரினங்களினதும், எத்தனை கால்களின் மிதி பலகையாகவும் உறைவிடமாகவும் இருந்ததோ? யாம் அறியோம் பராபரமே.

இவ்வாறு உணவுக் கடைகளில் மோசடி செய்பவர்களை எதிர்த்து பலமான நடவடிக்கைகளோ, தண்டணைகளோ வழங்கப்படுவதில்லை. போதைப்பொருள் விற்பனையும், நஞ்சு விற்பனையையும் விட இவ்வாறான சுகாதாரமில்லாத உணவு விற்பனை செய்வது மிகவும் கொடூரமானதாக இருக்கின்றமை குறிப்பிடத்தக்கது. இதனைவிட இன்று செல்லும் உணவுக்கடைகள் முழுவதுமே சன நெருக்கத்தால் நிறைந்து காணப்படுவது உண்மை. ஆனால் கடைகளில் எந்த அளவு ஊழியர்கள் வாடிக்கையாளர்களிற்கு நிறைவான சேவை வழங்குகின்றனர் என்பது மாதபெறுமானந்தரமே...!

இன்று உணவகங்களில் வியாபாரப் பெருக்கமோ என்னவோ! இன்று கடை முதலாளிகளையும் சரி, உணவுக் கடைகளில் பணியாற்றுபவர்களோ சரி அவர்களிடம் இருந்து உணவு பெறவெண்டிய நிலைமை யதார்த்த காலத்தில் காணப்படுகிறது. சில கடைகளில் வழமையாக வரும் வாடிக்கையாளர்களில் டிப்ஸ் எனப்படும் கையுறை வழங்குபவர்களை விசேடமாக கவனிக்கும் வழக்கமும், வெற்றியிடம் இருந்துவரும் சுற்றுலாப் பயணிகளை கவனிப்பதில் அதிக சிரத்தை எடுப்பதையும் பலரின் சம்பாசனைகளின் ஊடாக அறிந்திருக்கின்றேன்.

பணம் கொடுத்து உணவு வாங்கும் வாடிக்கையாளர்கள் ஏன் இரந்து பெற வேண்டும் என்ற கேள்வி எழாமலில்லை. உணவு வழங்குபவர்கள் வாடிக்கையாளர்களை மதித்து நன்றாக உபசரிக்க வேண்டும். இது காலத்தின் தேவை.

இன்று உள்ள பெரும்பாலான கடைகளின் சமையலறைகளை பார்வையிடும் வாடிக்கையாளர்கள் அக்கடைகளில் உணவருந்தமாட்டார் எனத் தெளிவாகக் கூறலாம். அப்படி சுத்தமின்றி உணவுதயாரிக்கும் பெரும்பாலான கடைகள் காணப்படுகின்றன. சில கடைகளில் ரொட்டிக்கு மா குழைப்பவர்களின் தோற்றத்தைக் காண்பவர்கள் சகிக்க முடியாது என்று சொல்லுவார்கள். குறித்த கடைகள் உணவுற்பத்தியாளர்களிற்கு பொருத்தமான உடைகளைப் பெற்றுக்கொடுப்பதில்லை. இது ஒரு முக்கியமான விடயமாகும். பத்திரிகைக்கு முறைப்பாட்டு ஆணைக்குழு இருப்பது போல அது எடுக்கும் தெளிவூட்டல்களைப் போன்று, உணவுக் கடைகளிற்கு நடவடிக்கைகளை மேற்கொள்ள நுகர்வோர் பாதுகாப்பு அதிகாரசபை சீரான செயற்பாடுகளை முன்னெடுப்பதில்லை. ஒவ்வொரு கடைவாசலிலும் (அல்லது) பொதுவான இடங்களில் முறைமீட்டு பெட்டிகளை இந்த அதிகார சபை வைக்கவேண்டும். அந்த முறைப்பாடுகளிற்கு நடவடிக்கை எடுக்கவேண்டும். எவ்வாறு முறையிடுவது போன்ற விழிப்புணர்வுகளே முன்னெடுக்கவேண்டும். இது தொடர்பாக வடமாகாண சுகாதார அமைச்சர் சத்தியலிங்கத்தின் கவனம் மேலெழ வேண்டும் என நான் இங்கு குறிப்பிட விரும்புகிறேன். இங்கு பாதிக்கப்படுவது வேறு இன மக்களல்ல, உங்களுடைய ஆளுகைக்குட்பட்ட மக்கள். உங்கள் இன மக்கள் என்பதை அமைச்சர் மற்றும் வடமாகாணசபை புரிந்து கொள்ளவேண்டும்.

முன்னைய காலங்களைப்போல் மக்கள் வீரியமின்றி காணப்படுவதற்கு இந்த போசாக்கு குறைவான உணவு முறைகளே காரணமாகும்.

இங்கு கடைகளில் விற்கப்படும் சமைத்த உணவுகள் எந்த அளவிற்கு போசனை மிகுந்து காணப்படுகின்றது என்றால் பெருத்த வினாக்குறி எழாமலில்லை. என்ன செய்வது வேறு வழியில்லாமல் சாப்பிட்டுக் கொண்டிருக்கின்றோம் என மக்கள் புலம்புவது கேட்காமலில்லை.

பழைய வடைகளை, பழைய சாப்பாடுகளை, இறைச்சிகளை, மீன் பொரியல்களை குளிர்சாதனப் பெட்டிக்குள் வைத்துவிட்டு மறுநாள் மீண்டும் தயாரிக்கும் புதிய உணவுகளுடன் மீண்டும் சூடாக்கி கலந்து விடுவது பலரும் அறியாத உண்மை. இவ்வாறு சைவ, அசைவ கடைகளின் கொடூரம் நீண்டு செல்கின்றன. இவை தொடர்பான கவனம் மேலெழாதவிடத்து வலது குறைவான சமூகத்திற்கு இது இட்டுச்செல்லும். "வளமான சமூகத்தின் எழுச்சிக்கு வளமான உணவு அவசியம்" உணர்ந்து கொள்ளவேண்டியது காலத்தின் தேவை... உணர்வோம்...

ச.திருச்செந்தூரன்,
திருகோணமலை.

# வன்னி நாட்டார் பாடல்களில் ஒரு பார்வை

....வன்னி விவசாயக்கிராமங்கள் நிரம்பியது. இங்கு குளங்களும் கோயில்களும் காடுகளும் நிரம்பியுள்ளன. வன்னி வளநாட்டின் பாரம்பரியமிக்க வாழ்வியல் வழிபாடுகள் சடங்குகள் தொழில்கள் என்பன பற்றிய நாட்டார் பாடல்கள் ஏராளமாக உள்ளன. அவை பெரும்பாலும் பள்ளுசிந்து கும்மி வசந்தன் எனவும் கூத்து, கதைப்பாடல்களாகவும் அமைந்துள்ளன.

பிள்ளையார்சிந்து, விறுமன்சிந்து, வதனமார்சிந்து, ஐயனார்சிந்து, முருகையன்சிந்து என வழிபாட்டிலும், பண்டிப்பள்ளு, குருவிப்பள்ளு, குருவிச்சிந்து, கொட்டுக்கிணற்றடிப் பிள்ளையார் கும்மி, கமுகஞ்சண்டை, என வகைவகையாக வழக்கிலுண்டு.

“முடியோடு தேங்காயைக் கைமிலெடுத்தோம்
மூத்ததோர் கணபதியைத் தோத்திரம் செய்தோம்

என என்ன வேலை செய்யப் புகுந்தாலும் விநாயகனைத் தொழுது செய்வது தமிழர் பழக்கம். ஏர்பூட்டும்போதே

பட்டி பெருகவேணும் தம்பிரானே
பால்பானை பொங்கவேணும் தம்பிரானே எனத்தொடங்கி
மேழி பெருகவேணும் தம்பிரானே
பெய்யவேணும் தம்பிரானே
மாரிமழை பெய்யவேணும் தம்பிரானே என்று மழை வேண்டிப்பாடித்தொடங்கும்


விவசாயியின் பெரும்சொத்து மாடுகள்தான். இவைகளைக் குடும்பத்தில் ஒருவராகவே கணித்து வளர்ப்பார்கள். அப்போ அவைகளை வேலைவாங்கும் போது பாடிக்கீடி சமாளித்து வேலைவாங்குவார்கள்.

சார்பார்த்தகள்ளனடா...
தாய்வார்த்தைகேளாண்டா..
பாரக்கலப்பையடா செல்லனுக்கு
பாரமெத்தத்தோணுதடா...
வரம்போதலகாணி...
செல்லனுக்கு
வாய்க்காலோபஞ்சுமெத்தை

இப்படியே வேலை வாங்கும் விவசாயி இன்று வெள்ளாண்மை செய்யும் வேளாண் குடிமக்களாக உள்ளனர்.

மாரிமழை பெய்து வெள்ளம்வர அதைதன் தேவைக்கேற்ப வழிநடத்தும் திறமைக்காக அவன் வெள்ளத்தை ஆள்பவனானான். வெள்ளத்தை ஆள்பவன் வெள்ளாளன். மன்னராட்சி ஒழுக்கப்பட்ட காலத்தில் மன்னனுக்குரிய நிலங்களை கூடக்கூலிக்கு விட்டவர்கள் அந்த நிலங்களுக்கே சொந்தக்காரராகி விட்டனர். இந்த நிலங்களைப் பண்படுத்தி பள்ளம் பார்த்துப் பயிர்செய்தவன் பள்ளனாகினான். இவர்களை வைத்து வேலை வாங்கியவர் “ஆண்டே” எனப்படும் உயர்ந்தவராகக் கருதப்பட்டார். வேலை செய்வவன் அடிமை அந்த அடிமையின் மகனும் அடிமை என கொத்தடிமை முறை நடைமுறையிலிருந்தது இவர்களது குடும்பப் பிரச்சினைகளில்கூட இந்த ஆண்டானே முடிவெடுத்தார். இதற்கு எடுகோளாக உள்ள பாடலடிகள்,

“பள்ளி பள்ளி பள்ளன் எங்கடி போனான்.



பள்ளம் பாத்துப் பயிர் செய்யப் போனான்
கொத்தப் போனான் குழலுதப் போனான்
கோழிக் கூட்டுக்கு மண் வெட்டப்போனான்.”
தெந்தனாதன தெந்தந்தினானா
தெனதெனா தெந்ததின
தெந்தினானா...

இந்த இறுதியடிகளைத் தருப்போடுதல் என்பார்கள். உங்களுக்கு நினைவிருக்குமோ தெரியாது கிராமத்தில் யாராவது கோள் சொல்லும்போது “ஓமோம் இவன்தான்” என்று யாராவது சேர்ந்து பேசினால்...”நீ என்னடா தருப்போடவாறியே” என்று கூறுவது,

இந்தப் பாடல்களின் வரிகள் எல்லோருக்கும் பாடமிருக்காது, எனவே தெரிந்தவர்பாட மற்றவர்கள் தருப்போடுவார்கள் நாங்கள் பாடலுக்கு வருவோம்.

பள்ளன் வயலில் வேலை செய்து கொண்டிருக்கிறான். பசிவாட்டுகிறது உணவு கொண்டுவரும் பள்ளி மெதுவாக வருகிறாள். பள்ளன் கோபத்தோடு போய்,

என்னடி பள்ளி நீ ஏகாந்தக்காறி
இந்நேரம் மட்டும் என்னடி செய்தாய்? என்று ஏசியபடியே கஞ்சிக்கலயத்தை எட்டி உதைத்து விடுகிறான். பள்ளிக்குப் பொறுக்க முடியவில்லை. ஆண்டையிடம் போய் முறையிடுகிறாள்,

ஆறு போனதங்கு தண்ணீருமள்ளி
அழுத பிள்ளைக்குப் பாலும் புகட்டி
சீறு பூறென்று சிறு நெல்லுக் குத்தி
கமுகம்பூப் போலரிசியும் தீட்டி
காலத்தாலே நான் காச்சின

**தமிழ்க்கவி**

கஞ்சியக்
காலாலே தட்டிப்
போறானெயாண்டே ஆண்டே

பள்ளனைக் கூப்பிட்டு விசாரிக்கிறார். அவனோ பள்ளியின் மீது குற்றம் சுமத்துகிறான்.

“அருககுவாள் சற்றே
விழிக்குமையெழுதுவாள்
ஆழகான. கூந்தலை அள்ளி முடிப்பாள்
செருக்குவாள் சற்றேசெல்லங் கொண்டாடுவாள்
தேனுடன் கொஞ்சம் பாலும் கலப்பாள்
உருக்குவாள் ஊரில் பெடியளெல்லோரையும்
உச்சியம் பொழுதுணுக் கழைப்பாள்
நொருக்குவேன் கையில் மண்வெட்டியாலே நான்
ஆண்டைக்காகப் பொறுத்து விட்டேனே

என்று கூறிசமாளித்து விடுகிறான். இதுபோல பள்ளனின் இரு தாரங்களுக்கிடையேயான சண்டைப் பாடல்களும் உண்டு

கமக்காரனுடைய உழவு மாடுகள் காணாமற் போய்விடும். அப்போதெல்லாம் அவற்றைத்தேடி அலைய வேண்டிவரும். காடுமேடெல்லாம் சுற்றியலையும் போது தன்னைக்காக்க உடற் கட்டுமந்திரம் சொல்லிக்கொள்வான். ஊர் எல்லையெங்கும் ஐயனாரைக் காவல் வைத்திருப்பார்கள். மாடு தேடிப் போகும்போது நல்ல கேட்டித்தடி வெட்டி காட்டெல்லைக் கோயிலுக்குச் சாத்தி வைப்பார்கள்

நாவியும் கீரியும் நுழையாத
குருமனில் நாங்கள் நுழைந்தொருகுறும் பொல்லுவெட்டி
பொல்லு நல்ல பொல்லு வெட்டிக் கட்டிய பொல்லு
மட்டடக்கும் பொல்லு இது...

எனவதனமார் சிந்தில் வரும் பாடல் வரிகளை நினைவில் கொள்ளலாம்.

அட்ட திசையெல்லாங் கவரி வீச
அடர்ந்து சில மனிதர் வந்தடிபணிந்தேத்த
மட்டுலவு மச்சிலாய் வாழுமையனாரை
மலரடிகளென்று மனதிலயராமே... என்றவரிகளும்
சல்லியொரு கொம்பு முழவதிர
வெள்ளையானை மேலேறிவரும்
ஆதிசடவக்குளம் வாழுமையனாரே எனவரும் வரிகளும்
தொநதத் தொகுத்தியென மத்தள முழங்க
திசைதோறு மதிகாரர் சூழவே நிற்க

சாதரணப் பன்றிகள் மனிதர்களைப் போல உணவுதேடி உண்டு களைத்து உறங்கும் போது பெண் பன்றி ஒரு கனவுகண்டு திடுக்கிட்டெழுகிறது ஆண் பன்றி கனவின் பலனை ஆராய்ந்து சொல்கிறது. பின் மனிதர்களுடைய விளைவையழிக்கப் போகின்றன.

மனிதர்களுக்கு ஒரு பணிவான வேண்டுகோள்...

வனத்தையறுத்து நெருப்பைக் கொழுத்தி
மரத்தின் தடிகள் பொறுக்கியே
வளைத்து வேலி நிரைத்து
கட்டி வளர் நெல்விதைகள் தூர்வியே
புனத்தில் அடரும் கரி
கண்டுடனே புள்ளிமான் பலசாதிக்கு
பிரித்துக் கொடுத்து
தனக்குமிஞ்சிய பொருள் கொண்டேகும்
மனிதரே
கனக்க விளைவிங்கிருக்கும்
செய்தியை நமக்கிங்கொருவர் உரைத்திடார்
கன்னிதுயிலில் கண்டகனவை
கழறக் கேளும் மனிதரே
இனத்தில் பெரியசாதி நாங்கள்
பிழைக்க வழியில்லாமலே
ஏவர்க்கும் பெருமை
கொடுக்கும் செந்நெல் விளைவு தறைக்குள் ஏகினோம்

மிகப் பவ்வியமாக இன்னுமொரு வேண்டுகோள்

“பங்கப்படுத்தியே மதகரிகள் தம்மையும்

ஒவ்வொரு அடிக்கும் உள்ள நகைச்சுவைப் பண்பைவியக்காமல் இருக்கமுடியாது.

சொன்னபடிக்கு உடனே கமத்தை
சூழ்ந்து பண்டிகள் யாவரும்,
சுறுக்கு விளையும் தறைக்குள் வந்தோம்
துரத்தவேண்டாம் மனிதரே...

எப்படி இருக்கிறதுகதை? பன்றிதான் தன்மனைவியின் அழகை எப்படி வருணிக்கிறது! மனிதக்காதலாகவே இந்த அன்பும் குடும்பச் சண்டையும் இருக்கிறது.

“பன்னும் அடியும் நுனியும்
தறித்த பனந்துண்டம் போல் அழகியே
பாவைஎனது ஆசைக்கிசைந்த
பருத்த உரல் போல்
இடையினாய்” இதே பன்றிப் பெண்ணின் மொழியழகு வேறு.

வங்கணவடிவே என்
கிளிமொழியே வஞ்சியரே
குணரஞ்சிதமே!
பண்புடனுன் துபரு
வயிறதுதான் பருகிற நினைவது தானோடி
கண்படுமென துமைந்தரைத்
தனியே கடுவழி நீ விடலாமோடி

பன்றிக்குட்டிகளைத் தனி வழி விட்டதற்காக தன்மனைவியைக் கண்டிக்கும் போதுகூட எவ்வளவு அன்பாக விளிக்கிறது என்பது பலர் கற்றுக்கொள்ளவேண்டிய பாடந்தான். பன்றிப்பள்ளிலே பிள்ளைச் செல்வம் பற்றிய செய்தியும் உள்ளது

“நாடியே ஒரு பிள்ளையில்லாமல்
நாள்கள் தோறும் தவங்கள் புரிந்து
தேடியே எங்கள் சிவலிங்கப் பிள்ளையார்
சிந்தை கூர்ந்தொருமைந்தரைத்
தந்ததார் பன்றிதறைக்குள்

பாயும் வித்தை ஆம் அதை வித்தையென்றுதான் பாடல் வருணிக்கிறது.

“அந்தியும் சந்தியு மறிந்தே பல
விந்தைகள் சிந்தைகள் புரிந்தே”
“காலையும் மாலையும்
பார்த்தே கருமேகம் போலே
கிளைசேர்த்தே”
“நாலுகால்
சத்தமுமடக்கி
நாய்க்குட்டிபோல்
மேனியை ஒடுக்கி
கூளைவால்
கொள்ளியை மினுக்கிபண்டி
கூட்டத்தோடோடி வந்ததுவே”

என ஒவ்வொரு பாடலும் சுவைததும்பப் பண்ணியுள்ள அந்தக் கவி நாட்டார் பாடல் மரபின் படிகாணாமல் போக்கடிக்கப் பட்டுள்ளார்.

அருவிச்சிந்துகள் பலமுன்னர் குறித்தவைகூட அரிவி வெட்டுப் பாடல்கள்தான்

“மட்டுக்கருக்காலே
அரிவாளைத்தீட்டி மாவிலங்கம்பிடி தன்னில் இறுக்கி
வெட்டும் பிடியைச் சிறக்கவே
வெட்டி வெள்ளித்தகட்டாலே விரல்கூட்டமிட்டு

என்று கத்தியின் சிறப்பு கூறப்படுகிறது. மட்டு என்பது மட்டக்களப்பின் சுருக்கம் மட்டக்களப்பு தாக்கத்தி ஒன்றரை அல்லது இரண்டங்குல அகலமான முனை சுருட்டிய வளைவு கத்திவீசிக் கோலினால் ரெண்டுமுன்று வீச்சுக்குகைநிறையும். மூன்று கைக்கு ஒரு உப்பட்டி விழும். பாடலும் அதற்கேற்ற தொழில் சார் சந்தம் அமைந்திருப்பதை கவனிக்கலாம்.

1. மட்டுக்கருக்காலே.
2. அரிவாளைத்தீட்டி.
3. மாவிலங்கம்பிடி நாலாவது சொல்லுக்கு உப்பட்டி கீழேவிழும்.


எல்லாப் பாடல்களிலும் இந்த ஒழுங்கைக் காணலாம்.

“கூழாவடியாம் குளிர்ந்த
நிழலாம் குளக்கட்டுநீளம்
புளியமிணலாம்...

(தொடர்ச்சி 23இல்......)

# பிரபாகரனின் வாழ்க்கை

## அரச பயங்கரவாதம் ஆரம்பம்





விடுதலைப்புலிகள், துப்பறியும் பொலிஸ் இன்ஸ்பெக்டர் பஸ்தியான் பிள்ளையினையும் அவருடன் வந்தவர்களையும் படுகொலை செய்தது அந்தக்காலத்தில் ஒரு பெரிய விடயமாகக் கருதப்பட்டது.

பஸ்தியான் பிள்ளையின் கொலைச் சம்பவம் நடைபெற்றபோது பிரபாகரன் அங்கிருக்கவில்லை. எனவே அந்தக் கொலையை அறிந்து பிரபாகரனைச் சந்தித்த உமாமகேஸ்வரன் கொலை சம்பந்தமாக பிரபாகரனுக்கு எடுத்துக் கூறினார். விபரமாக அதைக் கேட்ட பிரபாகரன், செல்லக்கிளியைக் கட்டி ஆரத்தழுவினார். "நீ தமிழர்களைப் பெருமைப்படுத்திவிட்டாய்" என்று கூறினார். அப்போது அருகிலிருந்த உமாமகேஸ்வரன் இந்த விடயம் சம்பந்தமாக மத்திய குழுவில் கலந்தாலோசித்து நல்ல முடிவுக்கு வர வேண்டும். எவ்வளவு காலம்தான் நாங்கள் இரகசியமாக இயங்குவது. எம்மை உலகத்திற்குத் தெரியப்படுத்த வேண்டிய அரிய சந்தர்ப்பம் இது. நாடுபூராகவும் எங்களைப் பற்றி "பொடியன்கள்" "பொடியன்கள்" என்று பேசிக்கொண்டே இருக்கின்றார்கள். எனவே நாம் யார் என்பதை நாட்டிற்கும் உலகிற்கும் தெரியப்படுத்தியே ஆகவேண்டும் என்று கூறினார். பிரபாகரனும் உமாமகேஸ்வரனின் கூற்றை ஆமோதித்தார்.

"(P.L.O) பலஸ்தீனிய விடுதலை இயக்கம், (I.R.A) அயரிஸ் குடியரசு இராணுவம் போன்றவற்றைப் போல நாங்களும் பகிரங்கப்படுத்த வேண்டும்" எனப் பிரபாகரன் கூறினார். "எங்களுடைய சாதனைகள் எல்லாவற்றையும் நாங்கள் பகிரங்கப்படுத்த வேண்டும்." நடைபெற்ற கொலைகளுக்கெல்லாம் நாங்கள் உரிமை கோரவேண்டும் எனப் பிரபாகரன் கூறினார். அவர்களின் சாதனைகளையும் அதனை அனுப்பி வைக்கும் பொறுப்பையும் அரசியற் பிரிவிற்குப் பொறுப்பாகவிருந்த உமாமகேஸ்வரன் ஏற்றுக் கொண்டார்.

அந்தப் பொறுப்புக்களை ஏற்றுக் கொண்ட உமாமகேஸ்வரன் கொழும்பு கோட்டையிலுள்ள தொலைபேசி பரிவர்த்தன நிலையத்திற்குச் சென்று லண்டனிலுள்ள தமது ஆதரவாளர்களுடன் தொடர்புகொள்ள முயற்சித்தார். அந்தக் காலத்தில் வெளிநாடுகளுக்குத் தொடர்பு கொள்வது மிகவும் கடினம். இன்றைய காலம் போல நினைத்தவுடன் வெளிநாடுகளுக்குத் தொடர்பு ஏற்படுத்த முடியாது. தொடர்பு கொள்வதாயின் தொலைபேசி பரிவர்த்தன நிலையத்திற்குச் சென்று தங்களுக்குத் தேவையான தொலைபேசி இலக்கத்தைப் பதிவுசெய்து விட்டு தொடர்பு வரும் வரை அங்கே காத்துக் கொண்டிருக்க வேண்டும். உமாமகேஸ்வரன் பதிவு செய்த அழைப்பு மூன்று மணித்தியாலம் காலதாமதித்துப் பின் வந்தது.

லண்டனிலுள்ள விடுதலைப் புலிகளின் ஆதரவாளர்களுடன் உமாமகேஸ்வரன் உரையாடினார். அவர்கள் பிரபாகரன் எடுத்த முடிவை வரவேற்றார்கள், பாராட்டினார்கள், தைரியப்படுத்தினார்கள். "இவ்வாறுதான் ஏனைய கொரில்லா இயக்கங்கள் செய்கின்றன. செய்யப்படும் கொலைகளுக்கும், கொள்ளைகளுக்கும் அவர்கள் அச்சமின்றி உரிமை கோருகின்றனர். நீங்களும் செய்ய வேண்டும். இதனை நாங்கள் வரவேற்கின்றோம் என்றார்கள்.

சென்னையில் 1976 ஆம் ஆண்டு கடிதம் அடிப்பதற்கு லெற்றர்பாட் தயாரித்திருந்தார்கள். அந்த லெற்றர் பாட்டிலே **"தமிழீழ விடுதலைக் கழகம்"** என்று பெரிய எழுத்துக்களில் அச்சிடப்பட்டிருந்தது. அதற்குக் கீழே லிபரேஸன் **(Liberation Tiger Of Tamil eelam)** என்று சிறிய எழுத்தில் ஆங்கிலத்தில் அச்சிடப்பட்டிருந்தது.

கடிதத்தினைத் தயாரித்து அதனை அன்றைய காலத்தில் டைப் செய்ய வேண்டும். அதனைச் செய்வதற்கு தனக்கு வேண்டிய பெண்மணியைத் தேடி உமாமகேஸ்வரன் சென்றார். அந்தப் பெண்தான் உமாமகேஸ்வரனும் பிரபாகரனும் பிரிவதற்குக் காரணமாக அமைந்த ஊர்மிளாதேவி.

ஊர்மிளா ஒரு கவர்ச்சிகரமான பெண்மணியாவார். கணவனைப் பிரிந்து விவாகரத்துப் பெற்றிருந்தார். கொழும்பிலுள்ள ஒரு கண்ணாடி விற்கும் கடையில் அந்தக் காலத்தில் வேலை செய்தார். உமாமகேஸ்வரன் ஊர்மிளாவைத் தனது தூரத்து உறவுக்காரி என்று சொல்லிக் கொண்டு திரிந்தார். அந்தக் காலத்தில் தமிழ் இளைஞர் அமைப்பின் கொழும்புக் கிளையில் ஒரு முக்கிய அங்கத்தவராக ஊர்மிளா இருந்தார்.

அதே நேரத்தில் கொழும்பிலுள்ள தமிழர் ஐக்கிய விடுதலை முன்னணியின் மகளிர் பேரவையிலும் உறுப்பினராக இருந்து இயங்கி வந்தார். ஊர்மிளாவைச் சந்தித்து தான் தயாரித்த கடித உறையைக் கொடுத்து இதில் எட்டுப்பிரதிகள் எனக்கு வேண்டும். மிகவும் அந்தரங்க வேலை. அதனை மிகவும் இரகசியமாகச் செய்ய வேண்டும் என்று அந்த தசாவோயியின் பயங்கரத்தை உமாமகேஸ்வரன் விபரித்துக் கூறினார்.

ஊர்மிளாதேவி, உமாமகேஸ்வரனின் வேண்டுகோளிற்கு இணங்கி, இரகசியமான அந்த அறிக்கையைத் தயார்செய்து கொடுப்பதற்கு முன்வந்தார். அதனைத் தயாரிப்பதற்குச் சிறந்த இடம் எது என ஆராய்ந்து இறுதியில் பழைய நாடாளுமன்றத்திலுள்ள எதிர்க்கட்சித் தலைவரின் காரியாலயமே சிறந்ததெனத் தீர்மானித்தார். ஊர்மிளா அடிக்கடி எதிர்க்கட்சித் தலைவ்ர அமிர்தலிங்கத்தின் காரியாலயத்திற்குச் செல்வது வழக்கம். அங்கு போய் எதிரக்கட்சித் தலைவர் அமிர்தலிங்கம் அவரது செயலர் பேரின்பநாயகம் (இப்பவும் இவர் ஏழாலையில் வசித்து வருகின்றார்.) ஆகியோருக்கு உதவி செய்து வருபவர் இந்த ஊர்மிளா ஆகும்.

எதிர்க்கட்சித் தலைவரின் காரியாலயத்தில வைத்து இந்த அறிக்கையை டைப் செய்வது பாதுகாப்பானது என உணர்ந்த ஊர்மிளா அவ்வாறு செய்ய முன்வந்தார். அப்பொழுது நாடாளுமன்றம் அமர்வில் இல்லை. அங்கே இருந்த சுருக்கெழுத்தாளர் பாவித்த டைப் அடிக்கும் இயந்திரத்தில் உமாமகேஸ்வரன் கொடுத்த அறிக்கையினைத் தயாரித்தார்.

அந்தக் காலத்தில் எல்லாம் பிரதிகள் எடுப்பதற்கு இயந்திரங்கள் இருக்கவில்லை. பிரதிகள் எடுப்பதாயின் காபன் பேப்பர் வைத்து டைப் செய்தால் தான் பிரதிகள் எடுக்க முடியும். அவ்வாறு அடித்துத் தேவையான பிரதிகளுடன் டைப் செய்த அறிக்கையையும் உமாமகேஸ்வரனிடம் கையளித்திருந்தார். அதையடுத்து அந்த அறிக்கைகளைக் கடித உறைக்குள் போட்டு முகவரிகளை எழுதினார்.

1. பொதுச்செயலாளர் (ஐக்கிய தேசியக்கட்சி)
2. பொதுச்சசெயலாளர் (ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி)
3. பொலிஸ் பொறுப்பதிகாரி (காங்கேசன்துறை)
4. பொலிஸ் பொறுப்பதிகாரி (வல்வெட்டித்துறை)
5. இயக்குநர் (பொலிஸ் துப்பறியும் இலாகா)
6. இறுதியாக ஆசிரியர் வீரகேசரி

வீரசேகரி அந்தக் கடிதத்தை 28 ஏப்ரல் 1978 ஆம் ஆண்டு பிரசுரித்தது கடிதத்தில் வருமாறு குறிப்பிடப்பட்டிருந்தது,

**ஏப்ரல் 25.1978**

**"இயக்கத்தின் ஆரம்பகாலப் பெயர் தமிழ்ப்புதிய புலிகள் 05.05.1976 இது தமிழீழ விடுதலைப் புலிகள் எனப் பெயர் மாற்றப்பட்டது.**

**தமிழ் விடுதலைப் புலிகளாகிய நாங்களே பின்வரும் கொலைகளைச் செய்தோம்" என்று உரிமை கோருகின்றோம்.**

**திரு.அல்பிரட் துரையப்பா** *(மாநகர முதல்வர் - மேயர் ,வடபிராந்திய ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி அமைப்பாளர்)*

**திரு. என்.நடராஜா** *(பெற்றோல் நிலையச் சொந்தக்காரர் - கோப்பாய் ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி அமைப்பாளர் - குண்டுவீச்சு)*

**திரு.ஏ.கருணாநிதி** *(துப்பறியும் பொலிஸ் காங்கேசன்துறை - துப்பாக்கிச்சூடு)*

**திரு.சண்முகநாதன்** *(துப்பறியும் பொலிஸ் வல்வெட்டித்துறை- துப்பாக்கிச்சூடு)*

**திரு.தங்கராஜா** *(முன்னாள் ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் நல்லூர்த் தொகுதி யின் நாடாளுமன்ற உறுப்பினர் அருளம்பலத்தின் செயலாளர்)*

**திரு.சீ.கனகரட்ணம்** *(பொத்துவில் நாடாளுமன்ற உறுப்பினர் - முன்பு தமிழர் ஐக்கிய விடுதலை முன்னணி பின்பு ஐக்கிய தேசியக்கட்சி)*

**திரு.பஸ்தியாம்பிள்ளை** *(துப்பறியும் பொலிஸ் இன்ஸ்பெக்டர்)*

**திரு.பேரம்பலம்** *(துப்பறியும் உதவிப் பொலிஸ் இன்ஸ்பெக்டர்)*

**திரு.பாலசிங்கம்** *(துப்பறியும் பொலிஸ் சார்ஜன்ட்)*

**திரு.சிறிவாதன** *(துப்பறியும் பொலிஸ் வாகனச்சாரதி)*


**மேலும் "திரு. வஸ்தியாம்பிள்ளையும் அவரது கோஸ்டியினரும்" ஏப்ரல் 07. 1978 தமிழீழ விடுதலைப் புலிகளைத் தேடி ரிவால்வர்கள், பிஸ்டல்கள், கண்ணுகள், துப்பாக்கிகள், மெஸின் ஆகியவற்றைக் கொண்டுவந்து புலிகளைத் தாக்கினர். ஆனால் புலிகள் தங்களுக்கு எவ்வித காயங்களும், உயிர்ச்சேதங்களும் இன்றி அவர்களைத் தாக்கிக் கொன்றார்கள்.**


**மேலும் அவர்கள் வந்த வாகனமும் நாசப்படுத்தப்பட்டது. இந்த மாதிரியான கொலைகள் மற்றும் "பழைய கொள்ளைகள் சம்பந்தமாகவும் எந்த அமைப்புக்களோ, தனி நபர்களோ உரிமை கோர முடியாது." அவ்வாறு விடுதலைப்புலிகளைத் தவிர இலங்கையிலும், வெளிநாடுகளிலும் வேறு யாரும் உரிமை கோரினால் அவர்களுக்கு எதிராக கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும்.**

**"செயலாளர்"**

உமாமகேஸ்வரன் எதிர்பார்த்த அந்தத் தாக்கம் வீரகேசரியில் பிரசுரமான அந்த அறிக்கை உருவாக்கிற்று. அப்போதுதான் மக்கள் அதுவும் குறிப்பாக தமிழ் மக்கள் சிங்களக் கெடுபிடிகளுக்கு எதிராகப் போராடுவதற்கு ஒரு தமிழ் இயக்கமொன்று உருவாகியுள்ளதென்ற விடயம் அவர்களுக்குத் தெரிய வந்தது. அந்தச் செய்தியை மக்கள் மிகவும் ஆர்வத்துடன் வரவேற்றார்கள். "எங்களுடைய பெடியள் நடத்திக் காட்டி விட்டார்கள்" என்று பெருமையாகக் குறிப்பிட்டார்கள்.

இந்தத் துப்பறியும் பொலிஸாருக்கு அனுப்பி வைத்த கடிதம், அன்றைய ஜனாதிபதி ஜே.ஆர்.ஜெயவர்த்தனவிற்குச் சென்றது. மிகவும் கோபமடைந்தார். உடனடியாக ஜே.ஆர் மிகவும் கோபமடைந்தார். உடனடியாக இந்தத் தீவிரவாத இயக்கத்திற்கு எதிராக நடவடிக்கை எடுக்குமாறு உத்தரவிட்டார். அத்துடன் அவர் நின்று விடவில்லை.





உள்நாட்டு அலுவல்கள் அமைச்சராக இருந்த கிழக்கு மாகாணம் கல்குடாவைச் சேர்ந்த கே.டபிள்யூ.டபிள்யூ.தேவநாயகத்திடம் தமிழீழ விடுதலைப் புலிகளையும் அது போன்ற அமைப்புக்களையும் தடை செய்வதற்குத் தேவையான சட்ட நடவடிக்கைகளை தயார் செய்யுமாறு உத்தரவிட்டார். அது மாத்திரமல்லாது அந்தக் காலத்தில் கைத்தொழில்துறை அமைச்சராக இருந்த கெலனிய நாடாளுமன்ற உறுப்பினர் சிறில் மத்யூஸை அழைத்து தமிழருக்கு எதிராக ஓர் போராட்டங்களிலும் ஈடுபடுமாறு உத்தரவிட்டார்.

— அரசகேசரி —

அண்மையில் தான் அந்த தேசம் இரத்தத்தில் நனைந்து போயிற்று. மனிதர்களில் ஒரு பகுதியினர் கழுகுகளாக மாறிப்போயினர். கொலை, கொள்ளை, தீவைப்பு, ஆகியவற்றின் உச்சக்கட்ட அரங்கேற்றம் நடந்து முடிந்தது. 1958 இல் தொடங்கி இந்தக் காலகட்டம் வரை இலங்கையில் அடிக்கடி தமிழர்கள் மீது வெறித்தனமாய் நடாத்தப்பட்ட இனப்படுகொலைகளுக்கெல்லாம் இந்தக் கலவரம் சிகரம் வைத்தாற் போலிருந்தது. பிணந்தின்னி அரசியல்தான் பேரினவாதம் என்று மீண்டும் நிரூபிக்கப்பட்டு விட்டது. சிங்களப் பேரினவாத சோவனிச அரசு மனித நாகரீகத்தை முற்றாகக் கைகழுவி விட்டு மிருகத்தனத்தில் முழுமையாய் ஈடுபட்டுவிட்டது.

முதலாளித்துவ சுரண்டும் வர்க்கம் பன்னாட்டு மூலதன சரியான வரலாற்று நாவல்களாக இருக்கமுடியும். இந்தவகையில் லங்காராணி நிகழ்ச்சிப் போக்குகளின நிதர்சன வடிவமான ஒரு மிகச் சிறந்த வரலாற்றுப் படைப்பாகத் திகழ்கிறது. 77 கலவரத்தின் இரத்தவாடையும் அதனால் எழுச்சி பெற்ற இளைஞர்களின் புரட்சி மணமும் பதிந்து நிலைத் திருக்கின்றது இந்த நாவலில்.

77 கலவரத்தின் போது பாதிக்கப்பட்ட இலங்கைத் தமிழர்கள் கொழும்பு அகதிகள் முகாம்களில் நிரம்பி வழிந்தனர். பரிவோடு அவர்களுக்கு உதவி புரியவந்த தமிழ் இளைஞர்களும், மாணவர்களும், பம்பரம்போல் சுழன்று பணியாற்றினர். உடனே அவர்கள் அனைவரும் யாழ்ப்பாணத்திற்கு கொண்டு செல்லப்பட்டாலன்றி உயிர் பிழைக்க முடியாது! கொழும்புக்கும் யாழ்ப்பாணத்திற்கும் இடையில் இருப்பது இருநூறு மைல்கள் சீலைப் பொட்டலங்கள், ஒரு கிளிக்கூண்டு, ஒரு நாய்க் குட்டி, இத்தனை பரபரப்பிலும் கலவ ரத்திலும் கூட இவ்வளவையும் சுமந்து கொண்டு கப்பலில் பயணம் செய்யும் அந்த நாகரீகத் தமிழ்க் குடும்பத்தில் அந்த பெல்பொட்டம் அணிந்த நங்கை அந்த பொமேரியன் நாய்க்குட்டியைப் பிரியவேயில்லை.

எல்லாம் தெரிந்தவர்போல் எகத்தாளமாகக் கதைக்கும் ஒன்றுமறியா – ஆனால் சுயநலத்தில் எப்போதும் கண்ணாயிருக்கிற கொழும்பு வியாபாரி ஒரு புறம். நாலும் தெரிந்த விபரமாகப் புட்டுப்புட்டு வைக்கும் பெரியவர் நாகலிங்கம் ஒரு புறம். கலவர நிகழ்ச்சிகள் தந்த கலகம் இன்னும் நீங்காத முனியாண்டி ஒருபுறம். கச்சதீவு ஒரு பெரிய நாடு போலவும் இலங்கை ஏகாதிபத்தியத்தின் பொலிசும் இராணுவமும் அழிப்பு, தமிழகத்திலும், இந்தியாவிலும், பொதுமக்களிடையே ஒரு பேரெழுச்சியை உண்டாக்கியது. ஆனால் இலங்கையின் நிலைப்பாடுகள் சரிவரப் புரிந்து கொள்ளப்படாமையால் இந்த எழுச்சி விழலுக்கிறைத்த நீராயிற்று. ஆளுக்கொரு விதமாய் தகவல் தந்தும், அவரவர் கற்பனைக்கேற்ற வரலாற்றை திரித்துரைத்தும் இனி நடக்க வேண்டியவற்றைப் பற்றிய கணிப்புக்களை மிகத்தாராளமாக குழப்பிப் போட்டனர். லங்கா ராணியில் வரும் வேட்டிக்கார இளைஞன் கதாபாத்திரம், நீர்கொழும்பு இளைஞர்களுக்கு விளக்கம் தருவதாக வரும் ஒருசில பக்கங்கள் ஈழவரலாற்றில் மிகத்துல்லியமாக கையடக்கப் பதிப்பாக விளங்குகின்றன.

நீண்ட போராட்ட வரலாற்றை இவ்வளவு தெளிவாக சில பக்கங்களிலேயே சுவைபட விபரித்திருப்பது கடுகைத் பாட்டாளிகள், அவர்கள் இழப்பதற்கு ஏதுமில்லாதவர்கள், போராட்டம் என்பது அவர்கள் வாழ்வியலில் அத்தியாவசியக்கூறு. அவர்களை இணைத்துக் கொள்ளாமல் ஈழமக்கள் போராட்டம் நடைபெற முடியாது. இந்த உண்மையை பட்டவர்த்தனமாக இந்த நாவல் வெளிப்படுத்துகிறது. இன்றைக்குக் கூட தொண்டமான்களும், செல்லச்சாமிகளும், ஸ்ரீமாவோ சாஸ்திரி ஒப்பந்தப்படி இங்கே, கொண்டுவந்து கவிழ்க்கப்பட்ட, நாலே முக்கால் இலட்சம் தோட்டத் தொழிலாளர்களைத் தவிர மீதியிருப்போரை இங்கே ஓட்டிக்கொண்டு வந்துவிட பெரும்பாடுபட்டுக் கொண்டிருக்கிறார்கள். எவ்வளவு பெரிய அக்கிரமம், என்பதை தொலைநோக்கோடு இந்த நாவல் தெளிவுபடுத்தியிருக்கிறது.

எந்தப் போராட்டத்திலும், தத்துவம், ஆயுதம், மக்கள் சக்தி ஆகிய மூன்றும்

## ஒரு கண்ணோட்டம் (லங்காராணி)

# கரையை நோக்கி ஒரு கப்பல்

பேராசிரியர்: பெரியார்தாசன்

ஆதிபத்தியம், இனவெறிப் பாதுகாப்புடைய மத அமைப்பு இத்தனையும் கைகோர்த்துக் கொண்டு ஊக்குவித்து வந்த முரண்பாடுகள் இப்போது முற்றி வெடிக்கத் தொடங்கிவிட்டன. இதற்கு முன் இதேயளவில் இல்லாவிட்டாலும். இதேவகையில் நடைபெற்ற 1977 ஆகஸ்ட் கலவரத்தில் நடைபெற்ற நிகழ்ச்சிகளும், விளைவுகளும் இலங்கையர்களால் குறிப்பாக இலங்கை வாழ் தமிழர்களால், சரியாகப் பயிலிடப் பட்டிருக்குமானால் பின்னர் நடந்தது இன்னொரு கலவரமாகாமல் வர்க்கத் தீர்வை உள்ளடக்கிய போராக இருந் திருக்கக் கூடும். அவ்வாறு ஏற்பட்டிருந்தால் முடிவுகள் தமிழர்களின் தொடர் துயரங்களுக்கு முற்றுப்புள்ளி வைத்திருக்கக்கூடும்.

இனி எதிர்காலத்தில் செயற்பாடுகளை சரியாகத் தீர்மானிக்கவாவது 1977, ஆகஸ்ட் இனக்கலவரத்தைப் பற்றிய படிப்பினைகள் உதவலாம். இந்த இலக்கைக் கொண்டு படைக்கப்பட்ட இலக்கியம் தான் "லங்காராணி".

சரித்திர நாவல் என்ற பெயரில் யதார்த்தத்திற்கு விரோதமான கொச்சைத்தனங்கள் மட்டுமே, எழுத்தாக்கப்படுவது தமிழ் நாவலுலகில் வழக்கம்! இடிந்த கோட்டைகளின் இடுக்குகளில் சரித்திர நாயகிகளின் சதைக் கதைகளைத் தேடியலையும் சாண்டில்யத்தனமான கதைகளுக்கே தற்போது சரித்திர நாவல்கள் என்று பெயர். ஆனால் இன, மொழி, வாழ் நிலை, வரலாற்று உரிமைகளை தக்கவைத்துக்கொள்ளப் போராடும் போராளிகளின் செயற்பாடுகளைச் சித்தரிப்பனவே தான்! ஆனால், சிங்களப் பகுதிகளுக்கூடாகப் பயணம் அமையுமென்பதால் பாதுகாப்பு இல்லை. எனவே ஏறத்தாழ 600 மைல்கள் கடற்பயணம் செய்து அவர்களை கரை சேர்க்கும் நோக்கத்தோடு "லங்காராணி" என்கிற கப்பல் புறப்பட்டது.

பயண காலமான அந்த மூன்று நாட்களில் தான் எத்தனை நிகழ்ச்சிகள்! எத்தனை பாத்திரங்கள்! எவ்வளவு உணர்ச்சிகள்! எத்தனை விவாதங்கள்! எப்படிப்பட்ட தீர்வுகள். ஓ! அதுவொரு ஈடு இணையில்லா துன்பியல் நாடகம், பரபரப்பான நிகழ்ச்சிகளின் சரியான படப்பிடிப்பு, எதிர்கால செயற்பாட்டிற்கான திட்டவரையறை; உணர்ச்சிக் குமுறல்களில் ஒருமித்த வடிகால், தீர்க்கமான இலக்கை நோக்கி வடிவமைக்கப்பட்ட ஒரு வகைப் போர்ச்சாதனமாக இந்த நாவலைப் படைத்துள்ளார் ஆசிரியர் அருளர்.

லங்கா ராணி கப்பலில் பயணம் செய்யும் ஏறத்தாழ ஆயிரத்து இருநூறு அகதிகளில் எல்லோரும் தமிழர்கள் தான். என்றாலும் அவர்களுக்குள் தான் எத்தனை வேறுபாடு. வயோதிபர்கள், குழந்தைகள், காயம்பட்டவர்கள் ஓடுகிற அவசரத்தில் விலையுயர்ந்த பொருட்களை மாத்திரம் பெட்டியில் அடைத்துக் கொண்டு வந்தவர்கள், எடுத்துக்கொள்ள ஏதுமேயில்லாதவர்கள் இதுவொரு வகை. இன்னொரு வகையினர் இதற்கு நேர்மாறானவர்கள். மூன்று இரும்புப் பொட்டிகள், நான்கு சூட்கேசுகள், ஆறு போரிட்டு அந்நாட்டைப் பெற்று விட்டது போலவும், உண்மையிலேயே நம்பிக்கை கொண்டிருக்கிற நீர்கொழும்பு இளைஞன் ஒருபுறம். இவர்களுக்கிடையே எவ்வளவு கீழான பணியையும் முகஞ்சுழிக்காமல் ஓடியாடி தொண் டாக செய்கிற மலையக இளம் பெண் இராணி ஒருபுறம். நடந்தவைகளை மதிப்பிட்டு நடக்க, இருப்பவைகளை கணித்து, என்ன செய்யவேண்டும். அதை எப்படி செய்யவேண்டும் என்பதில் தீர்மானியாய் இருக்கிறவைகளை அற்புதமாக விளக்கவும் தெரிந்திருக்கிற வேட்டிக்கார இளைஞன் ஒரு புறம். மற்றும் அகதிகளுக்கு தொண்டு செய்வதில் தோய்ந்துபோ்ய அதேநேரத்தில் தமது தேசத்தைத் தாம் எவ்விலை, கொடுத்தேனும் பெற்றேயாக வேண்டும் என்கின்ற புரட்சி உணர்வு பொங்கித் துடிக்கும் சரவணன், குமார், தேவன் போன்ற இளைஞர்கள் ஒரு புறம். இவர்களுக்கு உதவியாய் இருக்கிற டாக்டர் நற்குணம் ஒருபுறம். இத்தனை வகைப்பட்ட தமிழர்களையும் சுமந்து கொண்டு ஆடி அசைந்து நீலக்கடலில் நிதானமாகப் பயணித்துக் கொண்டிருக்கிறது லங்காராணி.

சிங்கள சோவனிச பேரினவாதம் இராணுவத்தின் துணையோடும், காடையர்களின் உதவியோடும் அண்மையில் நடாத்திய தமிழின துளைத்து ஏழ்கடலைப் புகட்டுவதும் சாத்தியமே என்னும் படியாக அமைந்துள்ளது. தங்கள் கல்வியையோ, வேலையையோ, காணிகளையோ, சிங்களவர் பறித்துக் கொள்கிறார்கள் என்பதற்காக மட்டும் தமிழர்கள் அங்கு போராடவில்லை.

தங்கள் பாரம்பரிய பிரதேசத்தில் தங்கள் வாழ்நிலையில் சுயநிர்ணய உரிமையை தாங்கள் பெறுவதற்கும் சமதர்ம ஆட்சியமைப்பை ஏற்படுத்திக் கொள்வதற்குமான ஒருபெரிய இலக்கை முன்னிறுத்தியே அவர்கள் போராடுகிறார்கள். இந்தப் போராட்டத்தை நாட்டுப் பிரிவினைக்கான போராட்டம் என்றோ, பிழைக்கப் போன இடத்தில் ஏன் போராட்ட வேண்டுமென்றோ கொச்சைப்படுத்தும் இந்தியப் பிரமுகர்களும் அவர்கள் கூற்றை அப்படியே ஏற்கும் மக்களும், ஊன்றிப்படிக்கவும், உண்மையை உணரவும் இந்த நாவலில் அநேக செய்திகள் உள்ளன.

ஏறத்தாழ 150 ஆண்டுகளுக்கு முன்னால், ஆதிக்க வெள்ளையர்களால், தென்னிந்திய கிராமங்களிலிருந்து, அழைத்துச் செல்லப்பட்டு, தேயிலைத் தோட்டங்களில் தங்கள் இரத்தத்தை வியர்வையாக்கி உழைத்து, பன்றிக் குடிசைகளுக்கும் கீழான, லயன்களில் அடைபட்டு, சமூகத்தில தாழ்வாய், பொருளாதாரத்தில் சோற்றுக்கும், துணிக்குமே போதாத வருமானத்தில் இன்றுவரை உழன்றுவரும், மலையகத் தோட்டத் தொழிலாளிகள் உண்மையான முரண்பாடின்றி தகுந்த விதத்தில் இணைந்தாக வேண்டும். இதில் பிரச்சினைகள் சரியாகவும், வரலாற்று ரீதியாகவும், இயங்கியல் பூர்வமாகவும் புரிந்து கொள்ளப்படுதல் அவசியம். ஈழப்பிரச்சினைக்கு வெறும் கோசங்களும், வீண் விவாதங்களும் நெடும்பயணங்களும் பேச்சுவார்த்தைகளும் எவ்வளவும் பயன்படப்போவதில்லை.

தத்துவத் தெளிவின் அடிப்படையில், மக்கள் சக்தியின் அரவணைப்பில் நடைபெறும் ஆயுதம் தாங்கிய போராட்டமே, இதற்கொரு நிரந்தரத் தீர்வை உண்டாக்கும். அதோ! காங்கேசன்துறையில் கம்பீரமாக வந்துநிற்கும் லங்கா ராணியிலிருந்து ஏறத்தாழ அகதிகள் எல்லோரும் இறங்கிப் போய்க் கொண்டிருக்கின்றனர். போராட்டமே என்று புரிந்து கொண்ட இளைஞன் சரவணன் கத்தியால் தன் விரல்களைக் கீறிக்கொண்டு அதில் பொழிகின்ற இரத்தத்தால் தன் புரட்சி துடிப்பை எல்லாம் உள்ளடக்கி எழுத முற்படுகையில், வேட்டியுடன் இருந்த இளைஞன் அவன் கையைப் பிடித்து, "ஈழ விடுதலைப் புரட்சிவாதிகள்" என எழுதி விட்டான். கப்பலின் கனத்த இரும்புச் சுவரின் மேல் சூரிய கிரகணங்கள் பட்டுப் பளபளக்கக் கொட்டிக் கொண்டிருக்கின்ற இரத்த துளிகள் புரட்சியை நோக்கி மக்களுக்கு அழைப்பு விடுகின்றன. லங்காராணி நாவல் இங்கே முடிகிறது, போராட்டம் தொடர்கிறது.

(தொடர்ச்சி 19 இல்......)

# விழிப்புலன் இழந்தவர்க்கு ஒளி கொடுக்கும் வாழ்வகம்

**என்.கே.குலசிங்கம்**

விழிப்புலன் இழந்தவர்களை விழிப்புடன் பராமரிக்கும் காப்பகமாக சுன்னாகம் வாழ்வகம் விளங்குகிறது. பலமாடிக் கட்டடங்களுடன்



மிகவும் அழகாகவும் அதேசமயம் அமைதியாகவும் காணப்படும் வாழ்வகத்தை 1988 ஆம் ஆண்டு கலாநிதி அன்னலட்சுமி சின்னத்தம்பி தெல்லிப்பளை காசிவிநாயகர் ஆலயத்துக்கு அருகில் உள்ள சிறிய இடமொன்றில் ஆரம்பித்தார்.

ஆனால் 1990, 1995, 1997 காலப்பகுதியில் ஏற்பட்ட இடப்பெயர்வுகள் காரணமாக உடுவில், மானிப்பாய் போன்ற இடங்களுக்கு இடம்மாற வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டது. இந்நிலையில் வாழ்வகத்தைப் பற்றி அறிந்து கொண்ட இலண்டன் தமிழ் அநாதைகள் அறக்கட்டளை நம்பிக்கை நிதியம், சுன்னாகம் சபாபதிப்பிள்ளை வீதியில் உள்ள முப்பத்திரண்டு பரப்புக் காணியைக்



கொள்வனவு செய்து வாழ்வகத்துக்கு அன்பளிப்பாக வழங்கியது.

அதற்குள் ஒரு கட்டடமும் கட்டப்பட்டு அங்கு விழிப்புலன் இழந்த பிள்ளைகள் தங்க வைக்கப்பட்டார்கள். அவர்கள் பாடசாலைக்கு சென்று கல்வி கற்பதற்கான வசதிகளும் செய்து கொடுக்கப்பட்டன.

ஆரம்பத்தில் விழிப்புலன் இழந்த பிள்ளைகள் இருக்கும் இடங்களைத் தேடிச் சென்று அவர்களுடைய பெற்றோர்களுக்கு விழிப்புணர்வைத் தூண்டி பிள்ளைகளின் கல்வியின் அவசியம் பற்றி கலாநிதி அன்னலட்சுமி அவர்கள் பல அறிவுரைகளை அவர்களுக்கு வழங்கினார். அதன் பயனாக விழிப்புலன் இழந்த பிள்ளைகளுக்குக் கல்வி கற்கும் வாய்ப்புக்கள் கிட்டியது. ஆண்கள் தெல்லிப்பளை யூனியன் கல்லூரியிலும் பெண்கள் மருதனார்மடம் பெண்களுக்கான இராமநாதன் கல்லூரியிலும் கல்வி கற்கும் வாய்ப்புக் கிட்டியது. பிறெயில் எழுத்தின் மூலம் இவர்கள் தமது கல்வியைத் தொடர்ந்துள்ளார்கள். கணனிக் கல்வியும் பிள்ளைகளுக்கு அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது...

தற்போது வாழ்வகத்தில் கணனி அலகொன்று இயங்கி வருகின்றது. தமிழ் பேசும் விழிப்புலனற்ற மாணவர்களுக்கான நிறுவனங்களுள் கணனிக் கல்வியை முதல் முதலாக அறிமுகப்படுத்திய நிறுவனம் என்ற பெருமை வாழ்வகத்திற்கே உரியது. அத்துடன் பிள்ளைகளுக்கு சங்கீதம், நடனம், மிருதங்கம், ஆங்கிலம், கணிதம் போன்ற பாடங்களும் மேலதிகமாகக் கற்பிக்கப்படுகிறது.

இதன்மூலம் விழிப்புலன் இழந்த பலர் விரிவுரையாளர்களாக, சட்டத்தரணிகளாக, பட்டதாரிகளாக, பல்கலைக்கழகத்தில் படிப்பை மேற்கொள்பவர்களாக, ஆசிரியர்களாக அரச உத்தியோகத்தர்களாக மிளிர்வதை இன்று பார்க்கக் கூடியதாகவுள்ளது. வாழ்வகத்தின் தலைவராக இருக்கும் சண்முகம் ரவீந்திரன் அவர்கள் பட்டதாரிப் படிப்பை முடித்து மேலும் பல பட்டங்களைப் பெற்று தற்போது யாழ்ப்பாணம் தேசிய கல்வியற் கல்லூரியில் விரிவுரையாளராக உள்ளார். விழிப்புலன் இழந்த நிலையிலும் பெருமைக்குரிய பதவியொன்றைப் பெற்று இவர் பணியாற்றுவது பாராட்டுக்குரியது. இவரது துணைவியாரும் ஒரு பட்டதாரியாவார். தெல்லிப்பளை மகாஜனக் கல்லூரியில் இவர் ஆசிரியையாகப் பணியாற்றுகின்றார். இவர் பார்வையுடையவர்.

யாழ்.பல்கலைக்கழகத்தில் படிக்கும்போது ரவீந்திரனை விரும்பிக் கல்யாணம் செய்து கொண்டவர். இவர்களின் அன்புக்கு அடையாளமாக இரண்டு பெண் பிள்ளைகளும், ஒரு ஆணும் உள்ளனர். அவர்களும் பார்வை கொண்டவர்களே. இவர்களில் ஒரு பெண்பிள்ளை ஹற்றன் நஷனல் வங்கியின் உத்தியோகத்தவராவார்.

ஒஸ்லோவில் உள்ள இந்து இளைஞர் அறிவாலயம் அன்னைலட்சுமி சின்னத்தம்பிக்கான ஆலயம் ஒன்றை வாழ்வகத்தில் அமைத்துக் கொடுத்துள்ளது. தலைவர் ரவீந்திரன் குடும்பத்துக்காக இல்லம் ஒன்று கட்டப்பட்டுள்ளது. செல்லா மண்டபம் என மாடிக் கட்டடம் ஒன்றுள்ளது. கீழே காரியாலயமும் மேலே மாடியில் கேட்போர்கூடமும் உள்ளது. வாழ்வகத்துக்கான விழாக்கள் இங்கே நடாத்தப்படுகின்றன. மற்றொரு கட்டடத்தில் சாயிபாபா பூஜை மற்றும் மத வழிபாடுகள் இடம்பெறுவது வழமை. உணவு பரிமாறல் இடமும் மேல் மாடியிலும், கீழ் மாடியிலுமாக உள்ளன. கலாநிதி அன்னலட்சுமி சின்னத்தம்பிக்காகக் கட்டப்பட்ட மண்டபம் அன்னையின் ஆலயம் போலவே காட்சியளிக்கிறது. அங்கே புனிதத்தன்மை முதன்மையாகப் போற்றப்பட்டு வருகிறது.

வாழ்வகத்தில் ஆண்கள், பெண்கள் என 39 பிள்ளைகள் தங்கியுள்ளார்கள். இவர்களுக்கான கல்வி, உடை, தங்குமிடம், உணவு யாவும் இலவசமாக வாழ்வகத்தினாலேயே பொறுப்பேற்கப்பட்டது.

பலரது பிறந்தநாள், நினைவு தினம் திருமணநாள் போன்ற பல நிகழ்வுகளுக்கும் வாழ்வகத்திற்கு வரும் பலர் அன்பளிப்புக்களை வழங்குகின்றார்கள். சிலர் வாழ்வக மாணவர்களுடன் இணைந்து வாழ்கத்திலேயே உணவருந்துகின்றார்கள். அரச உதவியிலும் பார்க்கப் பொதுமக்களின் உதவியே இங்கு பெரிதாகக் காணப்படுகிறது. பல வெளிநாட்டவர்களின் உதவியும் வாழ்வகத்துக்கு நிறைய உண்டு.

இங்குள்ள மாணவர்கள் படிப்பில் மட்டுமன்றி விளையாட்டிலும் மிகுந்த திறமை கொண்டவர்கள். ஒரு மாணவன், மருதனார்மடம் இராமநாதன் கல்லூரியில் இருந்து ஆரம்பித்து தெல்லிப்பளை யூனியன் கல்லூரி வரை மரதன் ஓட்டம் ஓடி முடித்து சாதனை படைத்தான். விழிப்புலன் இழந்த நிலையிலும் இத் தூரத்தை ஓடி முடித்த இம் மாணவனைப் பலர் பாராட்டியதைப் பார்க்க முடிந்தது. தனது இரண்டு பக்கங்களிலும் ஓடிக்கொண்டு வந்த இரண்டு மோட்டார் சைக்கிள்களின் ஓசையை வைத்து நடுவே இந்த மாணவன் ஓடி மரதன் ஓட்டத்தை நிறைவு செய்தான்.

தர்மதன் என்னும் மற்றொரு மாணவன் தனது பத்தாவது வயதில் பொக்கழிப்பான் நோய் காரணமாகத் தனது இரண்டு கண்களின் பார்வையை இழந்தான். இருந்தும் தனது விடாமுயற்சியினால் க.பொ.த உயர்தரப் பரீட்சையில் மூன்று ஏ சித்திகளைப் பெற்று சித்தியடைந்தான். சாதனை வீரர்களைப் பாராட்டும் நிகழ்வில் அப்போது வடமாகாண ஆளுனராக இருந்த ஜி.ஏ.சந்திரசிறி இம் மாணவனது நிலையை அறிந்து இந்திய நாட்டின் மும்பாய் நகரில் உள்ள பிரபல கண் வைத்திய நிபுணர் ஒருவரின் கீழ் சத்திரசிகிச்சை மேற்கொள்வதற்காக 12 இலட்சம் ரூபாவை அவரது நிதியிலிருந்து



வழங்கியிருந்தார். இருந்தும் அம் மாணவனது பார்வை சரியாக செயற்படவில்லை. இம் மாணவன் தற்போது யாழ்.பல்கலைக்கழகத்தில் சட்டப் படிப்பை மேற்கொண்டு வருவது குறிப்பிடத்தக்கது.

அன்னை கலாநிதி அன்னலட்சுமி சின்னத்தம்பி, வாழ்வகத்தை தனக்குப் பின்னர் நடாத்தக் கூடியவர் ரவீந்திரனே என்பதை உணர்ந்து அவரிடம் அந்தப் பொறுப்பை முழுமையாக ஒப்படைத்தார். அன்னை இட்ட கட்டளையை சிரமேற் சுமந்து அதனைத் திறம்பட செய்து வருபவர் ரவீந்திரன் அவர்கள். அவரது காலத்தில் வாழ்வகம் பல முன்னேற்றங்களைக் கண்டுள்ளது. அனைவரையும் அணைத்துப் போகும் அரிய பண்பும், அவரது அயரா முயற்சியும் வாழ்வகத்துக்குப் பக்கபலமாக அமைந்துள்ளன. பொதுமக்களின் பங்களிப்பும் வாழ்வகத்துக்கு நிறைய உண்டு. வாழ்வகம் வளமாக வாழ வேண்டும் என்பது பலரது ஆவல்.



# சேர். பொன்னம்பலம் இராமநாதன்

# சட்டசபை உறுப்பினர்

கே.ரி.இராஜசிங்கம்

சேர்.பொன்னம்பலம் இராமநாதனின் 50 வருட அரசியல் வாழ்வு 1879 – 1930. அது ஒரு நாட்டின் சுதந்திரத்திற்கான போராட்டம் என்றும் கருதவேண்டும். அவர் நடாத்திய சுதந்திரப்போராட்டமே நாடு சுதந்திரமடையக் காரணமாயிற்று.

நாடு என்றால் இலங்கை. இலங்கை தற்பொழுது ஸ்ரீ லங்கா என்று அழைக்கப்படுகிறது. இலங்கை இந்து சமுத்திரத்தின் மத்தியில் அமைந்துள்ளது. இங்கு தமிழர்களும், சிங்களவர்களும் வாழ்கின்றார்கள். அவர்களுக்கு என்ற பிறிதான மதங்களும், பாசைகளும் உண்டு.

இது புவியியல் அமைப்பின்படி ஒரு காலத்தில் கீழைத்தேய கண்டமாக இருந்தது. இந்த கண்டம் பிரிபடாது ஒரு பக்கம் மடகஸ்கார் வரையும், மறுபக்கம் மலாயக்குடா வரையும் நீண்டிருந்தது. காலகெதியில் இந்தக் கீழைத்தேயக் கண்டம் கடலுக்குள் மூழ்கி ஒருபக்கம் இலங்கை நடுவிலும், மறுபக்கம் மாலைதீவு, இலட்சதீவு, சீல்சேஸ் தீவு ஆகிய தீவுகளாகவும் பிரிந்தும் கங்கை நதியை இணைந்த வடக்குத்தெற்கு இந்தியா ஒரு நிலப்பரப்பாக காணப்பட்டது.

காலகெதியில், இந்தியாவிலிருந்து இலங்கையும் பிரிந்தது.

இலங்கையையும் இந்தியாவையும் ஒரு சிறுகடல் பிரிக்கின்றது. அது பாக்குநீரிணை என அழைக்கப் படுகின்றது. இலங்கையையும் இந்தியாவையும் 32 கிலோமீற்றர் கடற்பரப்பே பிரிக்கின்றது.

வரலாற்றை ஆராய்கின்ற போது இலங்கை ஐக்கியமான ஒரு நாடாக இருந்ததில்லை. தமிழர்களும், சிங்களவர்களும் போட்டியிட்டுக்கொண்டு தனித்தனியான சமூகமாகவே வாழ்ந்துவந்தனர். எனவே, சிங்களம், தமிழ்த் தேசியம் என்ற கருத்து ஓங்கியிருந்ததே தவிர, எப்பொழுதுமே இலங்கைத் தேசியம் என்று ஒன்று இருக்கவில்லை.

1505ஆம் ஆண்டு போர்த்துக்கேயருடைய சிறிய படை அடங்கிய கப்பல் ஒன்று புயல் காற்றினால் தள்ளப்பட்டு காலித் துறைமுகத்தை வந்தடைந்தது. அந்த போர்த்துக்கேய கப்பலுக்கு தொன் லோறன்ஸ் சா டி அல்மேடா என்பவரே தலைமைதாங்கினார். அப்பொழுது வீரபராக்கிரமபாகு (1484 – 1509) கோட்டை மன்னனாகவும், செனசமத்த விக்கிரமபாகு (1469 – 1511) கண்டிய மன்னனாகவும், பரராசசேகரம் (1469 – 1511) தமிழ் இராச்சியத்தின் மன்னனாகவும் இருந்தனர். இவ்வாறு இலங்கை மூன்று இராச்சியங்கள் தனித்தனியாக இருந்தன.

1551ஆம் ஆண்டில் கோட்டை இராச்சியத்தின் பாதுகாவலராக தங்களை போர்த்துக்கேயர் மாற்றிக் கொண்டனர். அதையடுத்து 1597 – 1658 ஆம் ஆண்டு வரைக்கும் இலங்கை கரையோரப் பகுதிகள் அனைத்தும் போர்த்துக்கேயர் கட்டுப்பாட்டுக்குள் வந்தன. 1621 ஆம் ஆண்டு வடக்கிலிருந்த தமிழ் இராச்சியம் போர்த்துக்கேயரால் கைப்பற்றப்பட்டது. தமிழ்ப் பகுதிகளை கைப்பற்றிய போர்த்துக்கேயர் ஐநூறுக்கு மேற்பட்ட இந்துக் கோவில்களை உடைத்து நொறுக்கினார்கள். நல்லூர் கந்தசுவாமி கோவில், மாவிட்டபுர கந்தசுவாமிகோவில், திருக்கோணேச்சரம், திருக்கேதீச்சரம் ஆகிய கோவில்களை எல்லாம் உடைத்து நொறுக்கி, அங்கு எல்லாம் கிறிஸ்தவ தேவாலயங்களை போர்த்துக்கேயர் நிறுவினர்.

1638 ஆம் ஆண்டு போர்த்துக்கேயரை விரட்டுவதற்காக ஒல்லாந்தர்களை கண்டிய மன்னனான 2ஆம் இராஜசிங்கன் (1635 – 1687) வரவழைத்தான். நாட்டிலே கால் வைத்த ஒல்லாந்தர்கள் போர்த்துக்கேயர் வசமிருந்த இராச்சியங்களைக் கைப்பற்றினார்கள். தமிழ் இராச்சியம் 1658ஆம் ஆண்டு ஒல்லாந்தர் வசமாகியது.

ஒல்லாந்தர்களை அடுத்து பிரித்தானியர் இந்த நாட்டில் காலடி எடுத்து வைத்தார்கள். 1796ஆம் ஆண்டு பிரித்தானியர்கள் இலங்கையின் கரையோரப் பகுதிகளைக் கைப்பற்றினார்கள். அதையடுத்து, 1815ஆம் ஆண்டு சுதந்திரமாக இருந்த கண்டி இராச்சியத்தை பிரித்தானியர்கள் கைப்பற்றினார்கள். இந்த சுதந்திர இராச்சியம் ஸ்ரீ விக்கிரம இராஜசிங்கனின் ஆட்சியின் கீழ் இருந்தது. சிங்களப் பிரதானிகள் சுதந்திரமாக இயங்கிவந்த கண்டி இராச்சியத்திற்கு எதிராகச் சதி செய்து மன்னனைக் காட்டிக் கொடுத்து, ஆட்சியைக் கவிழ்த்தார்கள். இதையடுத்து, 1815ஆம் ஆண்டே சிங்களப் பிரதானிகளுக்கும், பிரித்தானியர்களுக்கும் இடையில் ஒப்பந்தம் ஒன்று செய்யப்பட்டது. இந்த ஒப்பந்தமே கண்டிய ஒப்பந்தம் ஆகும். பிரித்தானியர் ஸ்ரீ விக்கிரம ராஜசிங்கனைக் கைது செய்தனர். பிரித்தானியர் சிங்களப் பிரதானிகளுடன் பேச்சுவார்த்தை நடாத்த தொழுக்கு முதலியாராக மொழிபெயர்ப்பாளரான குமாரசாமி முதலியார் நியமிக்கப்பட்டார்.

1817 – 1818 ஆம் ஆண்டு இலங்கையில் ஊவா, வெல்லச எதிர்ப்புப் புரட்சி கிளம்பியது. இது காலனித்துவ ஆட்சி நடாத்திய பிரித்தானியர்களுக்கு எதிராக நடைபெற்ற புரட்சியாகும். இந்தப் புரட்சி கெப்பிற்றபொல திஸாவாவினால் ஆரம்பிக்கப்பட்டது. பிரித்தானியரின் ஆட்சிக்கு எதிராக மக்கள் கிளர்ந்தெழுந்தார்கள்.



பிரித்தானியர் இந்தியாவிலிருந்து படைகளைக் கொண்டுவந்து இந்தப் புரட்சிகளை அடக்க வேண்டியிருந்தது. பதினெட்டு புரட்சி தலைவர்களின் சொத்துக்கள் ஆட்சியாளரால் கைப்பற்றப்பட்டது. அந்த சமயத்தில் நோய் வாய்ப்பட்டிருந்த பிலிமத் தலாவையை கைது செய்து மொறீசியஸ் நாட்டிற்கு நாடுகடத்தினார்கள். கெப்பிற்றபொல, மடுகல்ல ஆகிய பிரதானிகளை கைதுசெய்து நவம்பர் 18 ஆம் திகதி 1818 ஆம் ஆண்டு இருவரையும் சிரச்சேதம் செய்தார்கள். ஊவா மாகாணத்தில் 18 வயதுக்கு மேற்பட்ட எல்லா ஆண்களும் தண்டனைகளுக்கு உட்படுத்தப்பட்டார்கள்.

பிரித்தானிய ஆட்சிக்கு எதிராக பங்கு பற்றிய சகல கிளர்ச்சிக்காரரையும் தேசத்துரோகிகள் என்று அரசவர்த்தகமானியில் அன்றைய தேசாதிபதி சேர்.றொபேட் பிறவுன்றிக்கினால் பிரகடனப்படுத்தப்பட்ட வர்த்தமானி இலங்கை நாடாளுமன்றத்தில் 2011ஆம் ஆண்டு சமர்ப்பிக்கப்பட்டது. அன்று தேசத்துரோகிகள் என்று பிரகடனப்படுத்தப்பட்ட அனைவரையும் தேசிய வீரர்கள் என முன்னாள் ஜனாதிபதி மகிந்தராஜபக்ஷவினால் அறிவிக்கப்பட்டனர்.

1818ஆம் ஆண்டு நடைபெற்ற கிளர்ச்சியை அடுத்து பிரித்தானியர்களின் ஆட்சியை மேலும் ஸ்திரப்படுத்துவதற்காக கோல்புறுக் – கமரர் ஆணைக்குழு ஒன்றை அன்றைய பிரித்தானிய காலனித்துவ காரியாலயம் இலங்கைக்கு அனுப்பிவைத்தது. இந்த ஆணைக்குழு இலங்கை அரச நிர்வாகம், நிதி, பொருளாதாரம், நீதி ஆகியன சம்பந்தமாக விசாரணை நடாத்தி இவற்றை எவ்வாறு சீர்திருத்துவது என அறிக்கை தருமாறு கோரப்பட்டது.

1833ஆம் ஆண்டு இந்த ஆணைக்குழு தனது அறிக்கையை சமர்ப்பித்தது. இந்த அறிக்கையின் சிபாரிசுகள் வருமாறு.

1. இலங்கைத் தீவை ஐந்து மாகாணங்களாகப் பிரித்தார்கள். அவையாவன கொழும்பு, கண்டி, காலியாழ்ப்பாணம், திருகோணமலை ஆகும்.

2. சட்டநிர்வாக நிருபன சபைகள் அமைத்தல்.

3. இரட்டை ஆட்சி முறையாக இருந்த கண்டி இராச்சியத்தையும், கரையோர இராச்சியத்தையும் ஒன்றாக்கி ஒரே நிர்வாகத்தின் கீழ் தேசாதிபதியின் தலைமைத்துவத்தின் கீழ் கொண்டுவந்தார்கள்.

4. இலங்கையர்களை சிவில் நிர்வாக அதிகாரிகளாக சேர்த்துக்கொள்ளல்.

5. முன்னாள் கண்டி இராச்சியத்தில் இருந்த இராஜகாரிய முறையை இரத்துச் செய்தல்.

6. கல்வியை நிர்வகிக்கும் ஒரு ஆணைக்குழுவை அமைத்தல்.

7. பிரித்தானியப் பாடசாலைகளைப் போன்று ஆங்கில மொழிமூலம் கல்வி பயிற்றுவிக்க பாடசாலைகள் அமைத்தல். ஆசிரியக் கலாசாலைகள் அமைத்தல்.

இந்த சிபாரிசின் மூலம் தேவாலய நிர்வாகத்தின் கீழ் இருந்த பாடசாலைகள் அரசாங்கத்தின் கீழ் வந்தன. மேலும், கொழும்பு அக்கடமி (றோயல் கல்லூரி) என்ற ஒரு பிரதான பாடசாலை ஒன்றும், பிரித்தானிய நாட்டிலுள்ள ஆங்கிலப் பாடசாலைகளைப் போலவே அமைக்கப்பட்டது.

1833ஆம் ஆண்டு உருவாக்கப்பட்ட சட்ட நிர்வாக சபையில் பதினாறு உறுப்பினர்கள் இருந்தார்கள். பிரித்தானிய தேசாதிபதி பத்து உத்தியோகத்தர்களை இந்த சபைக்கு தெரிவு செய்தார். அதையடுத்த ஆறு உத்தியோகப்பற்றற்ற உறுப்பினர்களையும் தெரிவு செய்தார். அவர்களில் மூவர் ஐரோப்பியர், ஒருவர் சிங்களவர், ஒருவர் தமிழர் மேலும் ஒருவர் பறங்கியராகும். ஆரம்பத்தில் இவ்வாறு தெரிவு செய்யப்பட்ட உத்தியோகப்பற்றற்ற உறுப்பினர்கள் நிர்வாகம் சம்பந்தமாக பிரச்சினைகள் சபையில் அறிமுகப்படுத்தப்பட்டால், அந்த விடயம் சம்பந்தமாக தமது கருத்துக்களைக் கூறும் அதிகாரமே அவர்களுக்கு இருந்தது. ஆனால், 1860 ஆம்ஆண்டை அடுத்து நிதி சம்பந்தப்படாத பிரச்சினைகள் சம்பந்தமாக சட்ட வரைபுகள் அறிமுகப்படுத்தும் அதிகாரமும் அவர்களுக்கு வழங்கப்பட்டது.

மேலும் 1889ஆம் ஆண்டு உத்தியோகபற்றற்ற உறுப்பினர்களின் எண்ணிக்கை எட்டாக உயர்த்தப்பட்டது. (மூன்று ஐரோப்பியர்கள், ஒரு கீழைத்தேய சிங்களவர், ஒரு கண்டிச் சிங்களவர், ஒரு தமிழர், ஒரு முஸ்லிம், ஒரு பறங்கியராகும்.) இந்த சட்டநிர்வாக சபைக்குத் தான் திரு. பொன்னம்பலம் இராமநாதன் அவர்கள் 1879ஆம் ஆண்டு உத்தியோகப்பற்றற்ற உறுப்பினராக தேசாதிபதியாக தெரிவு செய்யப்பட்டார்.

. பொன்னம்பலம் இராமநாதன் அவர்கள் 1892ஆம் ஆண்டு வரை சட்டசபையின் நியமன உறுப்பினராக இருந்தார்.

அவர் தனது முதலாவது பதவிக்காலத்தில் செய்த முக்கியமான சாதனைகள் பின்வருமாறு –

அக் காலத்தில் பொதுவிதிகள் சட்டம் 1861 இன் கீழ் வயதுவந்த சகலரும் கட்டாயம் ஊழியம் செய்ய வேண்டும். இது மக்கள் மனதில் சஞ்சலத்தையும் வேதனையையும் உருவாக்கியிருந்தது. இராமநாதன் இச்சட்டத்தினை தனது கையில் எடுத்து இதன் இறுக்கமான தன்மையை நீக்கி வைத்தார்.

31ஆம் இலக்க 1884ஆம் ஆண்டு தபால் சேமிப்பு வங்கிச் சட்டத்தை இலங்கையில் அறிமுகம் செய்தார். இந்தச் சட்டத்தை இலங்கைக்கு அறிமுகம் செய்யவேண்டுமென ஆர்வம் காட்டியவர் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர் ஆவார்.

இராமநாதனே சிறுபிள்ளைகளின் குற்றங்களுக்கு சீர்திருத்தப் பள்ளியையும், அவர்களுக்கான கைத்தொழில் பாடசாலைகளையும் நிறுவக் காரணமாயிருந்தார்.

1885ஆம் ஆண்டு முகமதியர்களின விவாகப்பதிவுச் சட்டத்தை சீர்செய்தார். ஒரு பகுதி முஸ்லிம்கள் இச்சீர்திருத்தம் வேண்டுமெனவும், இன்னொரு பகுதி முஸ்லிம்கள் இச்சீர்திருத்தம் வேண்டாம் எனவும் குழம்பியிருந்தனர். சட்டசபையில் தமிழர்களுக்கும், தமிழ்பேசும் மக்களுக்கும் உறுப்பினராக இருந்த இராமநாதன் அவர்கள் இரண்டுபகுதி முஸ்லிம்களும் ஏற்றுக்கொள்ளும் விதத்தில் திருமணப்பதிவு கட்டாயமானது அல்ல விரும்பினால் செய்யலாம் என்ற சட்டத்தை உருவாக்கினார்.

1879 – 1884 இற்கும் இடைப்பட்ட காலத்தில் உத்தியோகபற்றற்ற இலங்கை சட்டசபை உறுப்பினராக அவர் பின்வரும் முக்கியமான விடயங்கள் பற்றி தனது விவாத திறமையினால் நிறைவேற்றினார்.

1. ஆண்பிள்ளை, பெண்பிள்ளைகளின் பொதுக் கல்வி முன்னேறுவதற்கு நடவடிக்கைகளை மேற்கொண்டது.

2. சட்டப்படிப்பையும் அனுமதியையும் மறுசீரமைத்தார்.

3. வருங்கால சந்ததியினருக்கு சட்டப்பயிற்சி மிக முக்கியமானது என்றும், இக்கல்வி வருங்காலத்தில் அரசியலில் ஈடுபடுவதற்கு உதவியாக இருக்கும் என்றும் அவர் கருதினார்.

4. குற்றவியல் மற்றும் பொதுச் சட்டங்களைச் சேர்த்து இணைப்பது இந்நாட்டின் சட்ட வளர்ச்சிக்கு உதவியாக இருக்குமென கருதினார்.




# விரைவில் சிங்கம் 3

சூர்யா-ஹரி கூட்டணியில் வெளியான "சிங்கம்", சிங்கம் 2" ஆகிய திரைப்படங்கள் மாபெரும் வெற்றியை பெற்றதை அடுத்து "சிங்கம் 3" படப்பிடிப்பு விரைவில் ஆரம்பமாகவுள்ளதாக செய்திகள் வெளிவந்தன. இந்நிலையில் தற்போது இந்த படத்தின் படப்பிடிப்பு துவங்கும் நாள் குறித்த தகவல் வெளிவந்துள்ளது. வரும் டிசம்பர் மாதம் 2ஆம் தேதி "சிங்கம் 3" படத்தின் படப்பிடிப்பு ஆரம்பமாகவுள்ளதாகவும், இந்த படத்தின் படப்பிடிப்பை தூத்துக்குடி மற்றும் வெளிநாடுகளில் படமாக்க இயக்குனர் ஹரி திட்டமிட்டுள்ளதாகவும் கூறப்படுகிறது.



சமீபத்தில் "பசங்க 2", "24" ஆகிய படங்களின் படப்பிடிப்புகளை முடித்த சூர்யா, வரும் டிசம்பர் முதல் துரைசிங்கமாக மாறவுள்ளார். இந்த படத்தில் சூர்யாவுக்கு ஜோடியாக ஸ்ருதிஹாசன் மற்றும் அனுஷ்கா நடிக்கவுள்ளனர்.







# விஜயுடன் கேரள பெண்

இளையதளபதி விஜய் நடித்து வரும் "விஜய் 59" படத்தின் படப்பிடிப்பு தற்போது விறுவிறுப்பாக நடந்து வருகிறது. கடந்த சில நாட்களுக்கு முன்னர் இந்த படத்தின் நாயகியான சமந்தா காட்சிகளின் படப்பிடிப்பு முடிவடைந்த நிலையில், மற்றொரு நாயகியான எமிஜாக்சன் சம்பந்தப்பட்ட காட்சிகளின் படப்பிடிப்பு தற்போது நடைபெற்று வருகிறது.

இந்நிலையில் இந்த படத்தில் எமிஜாக்சன் நடிக்கும் கேரக்டர் குறித்த தகவல் தற்போது வெளிவந்துள்ளது.

எமி, இந்த படத்தில் கேரள பெண்ணாக நடிக்கின்றாராம். எமிஜாக்சன் ஏற்கனவே மலையாள பெண்ணாக கௌதம் மேனனின் "விண்ணை தாண்டி வருவாயா" படத்தின் இந்தி ரீமேக் படமான 'EK Deewana Tha' என்ற படத்தில் நடித்துள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

# எமியின் புதிய காதலன்





தமிழ், இந்தி படங்களில் நடிக்கிறார் எமி ஜாக்ஸன். 'விண்ணை தாண்டி வருவாயா' படம் இந்தியில் ரீமேக் ஆனபோது அதில் நடித்த எமிக்கும், ஹீரோ பிரதீக் பாப்பருக்கும் காதல் மலர்ந்தது. 2 வருடம் நீடித்த காதல் திடீரென்று முறிந்தது. இதையடுத்து நடிப்பில் கவனம் செலுத்தி வருகிறார் எமி. தற்போது இவருக்கும் நடிகர் சூரஜ் பஞ்சோலிக்கும் காதல் மலர்ந்திருப்பதாக பாலிவுட் வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. அக்ஷய்குமாருடன் 'சிங் ஈஸ் பிளிங்' படத்தில் நடித்தார் எமி ஜாக்ஸன். இதன் சிறப்புக் காட்சி மும்பையில் திரையிடப்பட்டது.

அதை காண்பதற்கு தனிப்பட்ட முறையில் சூரஜிற்கு சிறப்பு அழைப்பு விடுத்திருந்தார் எமி. மும்பை பாந்த்ரா பகுதியில் எமி புதிய வீடு வாங்கி இருக்கிறார். இது சூரஜ் வசிக்கும் வீட்டுக்கு மிக அருகிலேயே அமைந்திருக்கிறது. நாளுக்கு நாள் எமி, சூரஜ் நெருக்கம் அதிகரித்து வருகிறதாம். சூரஜ் ஏற்கனவே ஜியா கானை காதலித்து அவருடன் பிரேக் செய்துகொண்டவர் என்பது குறிப்பிடத்தக்கது.

# காண்டீச்சுவரன்





## சிம்புவின்

# "அச்சம் என்பது மடமையடா"

இயக்குனர் கௌதம் மேனன் இயக்கி வரும் "அச்சம் என்பது மடமையடா" திரைப்படம் 90% படப்பிடிப்பு முடிந்துவிட்டதாகவும், இந்த படம் வரும் 2016 ஜனவரியில் ரிலீஸ் ஆகும் என்றும் கூறப்படுகிறது. சிம்பு, மஞ்சிமா மோகன், பல்லவி சுபாஷ், ராணா உள்பட பலர் நடித்துள்ள இந்த படத்திற்கு ஏ.ஆர்.ரஹ்மான் இசையமைத்துள்ளார். "என்னை அறிந்தால்" ஒளிப்பதிவாளர் டான் மெக்ரதூர் ஒளிப்பதிவு செய்துள்ள இந்த படத்திற்கு அந்தோணி படத்தொகுப்பாளராக பணிபுரிந்து வருகிறார். டிசம்பரில் "இது நம்ம ஆளு", ஜனவரியில் "அச்சம் என்பது மடமையடா" என அடுத்தடுத்து சிம்புவின் இரு படங்கள் வெளியாகவுள்ளதாக கூறப்படுவதால் சிம்பு ரசிகர்கள் உற்சாகம் அடைந்துள்ளனர்.

# கமலின் புதிய முயற்சி



கமல்ஹாசன் ஒரு புதிய முயற்சியில் இறங்கியுள்ளதாக செய்திகள் வெளிவந்துள்ளது. கமல் அவர்கள் தனது ஒவ்வொரு படத்திலும் நடிப்புக்கும், திரைக்கதைக்கும் எந்த அளவுக்கு முக்கியத்துவம் கொடுப்பாரோ அதற்கு இணையாக தொழில்நுட்பத்திற்கும் அதிக முக்கியத்துவம் கொடுப்பார். குறிப்பாக படத்தின் காட்சிகளுக்கு ஏற்ப சவுண்ட் அமைப்பில் அவர் சிறப்பு கவனம் செலுத்துவார். சமீபத்தில் வெளியான விஸ்வரூபம், உத்தமவில்லன் ஆகிய படங்களுக்காக அமெரிக்கா சென்று வாரக்கணக்கில் அங்கேயே தங்கியிருந்து ஒலி அமைப்பு பணிகளைக் கவனித்து வந்தார் என்பது அனைவரும் அறிந்ததே.

இந்நிலையில் ஒவ்வொரு படத்திற்கும் ஒலி அமைப்புக்காக அமெரிக்கா சென்று வருவதை தவிர்க்க இந்தியாவிலேயே ஒலி அமைப்புக்கான ஸ்டுடியோவை அமைத்தால் தனது படங்களுக்கும் மற்ற இந்திய படங்களுக்கும் உதவியாக இருக்கும் என்று கமல் முடிவெடுத்துள்ளதாகவும், விரைவில் சென்னை மற்றும் ஐதராபாத் ஆகிய நகரங்களில் அதிநவீனக் கருவிகளுடன் கூடிய சவுண்ட் ஸ்டுடியோ ஒன்றை ஆரம்பிக்க இருப்பதாகவும் கூறப்படுகிறது.



# மகா மரீனாமிச்சல் நடிப்பில் வருகிறது என்னுள் ஆயிரம்

# பெண்கள் மீதான வன்முறை

## ஒரு நோக்கு

**பால்நிலை அடிப்படிடையிலான வன்முறை என்றால் என்ன?**

பிறிதொரு அடையாளத்துடன், ஒரு பெண்ணாக, ஆணாக அல்லது நபராக இருக்கும் "பால்நிலையிலான" அடையாளத்திற்கு தொடர்பினைக் கொண்டுள்ள வன்முறையின் குறிப்பான வகையை பால்நிலை அடிப்படையிலான வன்முறை விபரிக்கின்றது. பால்நிலை அடிப்படையிலான வன்முறை என்ற பதத்தின் முழு அர்த்தத்தையும் புரிந்துகொள்ளுமுகமாக, பால்நிலை என்ற பதத்தின் அர்த்தத்தை முதலில் புரிந்து கொள்வது எமக்கு அவசியமாகும்.

**பால்நிலை**

ஆண்களுக்கும், பெண்களுக்கும்ம பொருத்தமானது எனக் குறிப்பிடப்பட்ட சமூகமொன்று கருதுகின்ற நடத்தையையும், வகிபங்குகளையும், செயற்பாடுகளையும் மற்றும் இயற்பண்புகளையும் "பால்நிலை" குறிப்பிடுகின்றது. உதாரணமாக ஆண்பிள்ளை அழுவதில்லை. பெண்பிள்ளைகள் எப்பொழுதுமே அமைதியாகவும் மென்மையாகவும் இருக்க வேண்டும்.

இது பால்நிலை இயற்கையானது அல்ல. ஆனால் சமூகரீதியில் கட்டப்பட்டதாகும் (உருவாக்கப்பட்டு போஷிக்கப்பட்டது). இதன் விளைவாக பலதரப்பட்ட சமூகங்களிலிருந்தும், கலாசாரங்களிலிருந்தும் வேறுபடுகின்றது. தம்மீது சுமத்தப்பட்டுள்ள பால்நிலை வகிபங்குகளின் பிரகாரம் ஆண்பிள்ளைகளும், பெண்பிள்ளை மற்றும் ஆண்களும், பெண்களும் நடப்பதற்கு கற்றுக்கெண்டு வளர ஆரம்பிக்கின்றார்கள். பால் நிலையிலான உறவுகளும், நடத்தையும் இன்றியமையாத விதத்தில் ஆண்களுக்கும், பெண்களுக்கும் இடையிலான வேறுபாடுகள் மீதான அடிப்படையில சமமின்மைகளையும், பாகுபாட்டினையும் விளைவிப்பதுடன் இது முறைமை ரீதியில் ஒரு குழுவுக்கு, அனேகமாக எப்பொழுதுமே ஆண்களுக்கு சார்பாக இருக்கின்றது. இது பெண்களினதும் பெண்பிள்ளைகளினதும் மீது பெருமளவு மறுதலையிலான தாக்கங்களையும், மக்களாக தமது முழுமையான ஆற்றலளவை உணர்வதற்கான அவர்களது வாய்ப்பினையும் கொண்டிருப்பதாகவும் அறியப்படுகின்றது. உலக சுகாதார தாபனத்தின் கூற்றுப்படி இத்தகைய சமமின்மைகள் சுகாதார நிலையிலும், சுகாதாரப் பரமாரிப்புக்கும் கல்விக்கும், தொழிலுக்குமான அடைதலை சொத்தின் உரித்துரிமைக்கும் மற்றும் அதனை அனுபவிப்பதற்கும் ஆண்களுக்கும், பெண்களுக்கும் இடையிலான நேர்மையின்மைக்கும் இட்டுச்செல்ல முடியும்.

பால்நிலை அடிப்படையிலான வன்முறை என்ற பதம் முக்கியமானது. ஏனெனில் அது சமூகத்தில் சமமற்ற அதிகார உறவுகளினதும், பாகுபாட்டினதும் விளைவொன்றாக இடம்பெறுகின்ற வன்முறையை அங்கீகரிக்கின்றது. பெண்களையும், ஆண்களையும், ஆண் பிள்ளைகளையும், பெண்பிள்ளைகளையும் பால்நிலை அடிப்படையிலான வன்முறை பாதிக்கின்ற அதேவேளை, பெண்களும், பெண்பிள்ளைகளும் அனேகமாக அதிகளவு பாதிக்கப்படுவதுடன் உடல் ரீதியாகவும் உணர்வு பூர்வ ரீதியாகவும் பாரதூரமான பின்விளைவுகளினால் பாதிக்கப்படுகின்றனர் என்பதை நினைவுபடுத்துவது முக்கியமானதாகும். அவர்களுக்கு பிரதிகூலமாக விளங்குகின்ற சமூக, கலாசார, அரசியல் மற்றும் பொருளாதாரக் காரணங்களின் நிமித்தம் பால்நிலை அடிப்படையிலான வன்முறையை அனுபவிக்கும் உயர்வான அபாயமொன்றில் பெண்களும், பெண்பிள்ளைகளும் உள்ளன்ர என்பதை வலியுறுத்துவது முக்கியமானதாகும்.

**பெண்களுக்கும், பெண்பிள்ளைகளுக்கும் எதிரான வன்முறையைப் பால்நிலை அடிப்படையிலான வன்முறையாக புரிந்து கொள்ளுதல்**

பெண்களுக்கு மேலாக ஆண்களுக்கு அதிகாரத்தை வழங்கும், ஆண்களுக்கும், பெண்களுக்கும் இடையிலான சமமற்ற அதிகார உறவில் பெண்களுக்கும், பெண் பிள்ளைகளுக்கும் எதிரான வன்முறையின் அடிப்படையைக் காரணி சார்ந்துள்ளது. இது இயற்கையானதல்ல, ஆனால் அனேகமாக, சமூகரீதியில் ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளதுடன், பெருமளவு கலாசாரங்களிலும், சமூகங்களிலும் சட்டங்களினாலும், கொள்கைகளினாலும் தவறாகச் சட்டபூர்வமாக்கப்பட்டுள்ளது. இந்த சமமற்ற அதிகார உறவினை மேம்படுத்துவதற்கும், பராமரிப்பதற்கும் இது பங்களிக்கின்றது. சமூகத்தில் பொருத்தமானவை, அவசியமானவையும்கூட எனக் கருதப்படுகின்ற குறிப்பான வகிபங்குகளுக்கும், நடத்தைக்கும் பெண்களும், ஆண்களும் குறித்தொதுக்கப்பட்டுள்ளனர். பெண்களுக்கு எதிரான வன்முறைக்கு இட்டுச் செல்லும் பால்நிலைகளின் சமமின்மையை ஆக்கிரமித்துள்ள சமூகக் கட்டுமானமும், சட்டநடைமுறைகளும் பால்நிலை அடிப்படையிலான வன்முறையாகவும், பாகுபாடாகவும் விபரிக்கப்படுகின்றன.

அவர்களது பால்நிலை மற்றும், பால்நிலை அடையாளத்தின் (பால் நிலைக்கான இணைப்பு) காரணமாக, குறிப்பான வழியொன்றில் பெண்களும், பெண் பிள்ளைகளும் வன்முறையை அனுபவிக்கின்றனர். இதே போல, பெண்களும், பெண்பிள்ளைகளும் ஈடில்லாத விதத்தில் பாதிக்கப்பட்டுள்ளனர் என்ற உண்மையின் காரணமாக, பெண்களுக்கும், பெண் பிள்ளைகளுக்கும் எதிரான வன்முறை [Violence Against Women and Girls (VAWG)], பால்நிலை அடிப்படையிலான வன்முறை [Gender Based Violence (GBV)] என்றே கருதப்படுகின்றது.

**குற்றமிழைப்பவர் பாதிக்கப்படுவர் உறவின் தன்மை**

ஒரு தரப்பு இன்னொரு தரப்பை விடக் குறைந்தளவு அதிகாரத்தைக் கொண்டுள்ள உறவொன்றில் பெண்களுக்கும், பெண்பிள்ளைகளுக்கும் எதிராக வன்முறை எப்பொழுதுமே இடம்பெறுவதால் விசேடமாகக் குறிப்பிடுவதென்றால் பாடசாலைகளில், வேலைத்தளங்களில் தடுப்பு நிலையங்களில், சிறைச்சாலைகளில் வைத்தியசாலைகளில் மற்றும் இடம் பெயர்ந்தோர் முகாம்களில் தமக்கு மேலாக அதிகாரத்தின் நிலையொன்றில் உள்ளவர்களிடமிருந்து வன்முறையை அனுபவிப்பதற்கு ஊறுபடத்தக்கவர்களாவர்.

பெருமளவு சம்பவங்களில் பாதிக்கப்பட்டவருக்கு குற்றமிழைப்பவர் அறியப்பட்டவர் என ஆய்வுகள் எடுத்துக்காட்டுகின்றன. இதன் விளைவாக, இந்த பரிச்சியத்தின் காரணமாக குற்றமிழைப்பவருக்குப் பெண்களும், பெண்பிள்ளைகளும் பாதிப்பு நிலைக்கு ஆளாகின்றனர். எனினும் இது எல்லாச் சந்தர்ப்பங்களிலும் பொதுவானது அல்ல. முற்று முழுதான அந்நியர் ஒருவரினால் பெண்களும் பெண் பிள்ளைகளும் வன்முறையை அனுபவிக்கக்கூடும்.

**தொடரும்**

**"வீட்டில் ஒற்றுமை இருந்தால், நாட்டில் ஒழுங்கு இருக்கும். நாடுகளில் ஒழுங்கு இருந்தால், உலகத்தில் அமைதி நிலவும்" என ஒரு பிரசித்தமான முதுமொழி உள்ளது. இதனால் தான் வீட்டு வன்முறை தனிப்பட்ட விடயமல்ல. ஆனால்இது எமது பொதுவான கரிசனையாகும் என தேசிய மற்றும் சர்வதேச சட்டங்கள் தற்போது அங்கீகரிக்கின்றன.**



சாவித்திரி குணசேகர

# பெண்களே உங்களுக்கான மச்ச பலன்கள்!

ஒரு பெண்ணின் நெற்றியில் குங்குமம் வைத்துக் கொள்கிற இடத்தில் மச்சம் இருந்தால் அவளுக்கு உயர் பதவியிலும் பெரிய அந்தஸ்திலும் உள்ள லட்சாதிபதியான கணவன் அமைவான். அவனுக்கு வாழ்க்கையில் எல்லா வசதி, வாய்ப்புகளும் கிடைக்கும்.

நெற்றியின் வலது புறத்தில் சிவந்த மச்சம் இருந்தால் அப்பெண் அதிர்ஷ்டம் நிறைந்தவளாக இருப்பாள். தன்னம்பிக்கை மற்றும் தைரியம்மிக்கவளாக இருப்பாள். எவருக்கும், எதற்கும் அடங்கிப் போகாத குணம் இருக்கும்.

நெற்றியின் இடது புறத்தில் சிவந்த மச்சம் இருந்தால் அப்பெண் ஒழுக்கத்தில் சிறந்தவளாக இருப்பாள் அதே மச்சம் கறுப்பாக இருந்தால் அப்பெண் அற்பகுணம் உடையவளாகவும், வேண்டாத நபர்களின் சகவாசம் உள்ளவளாகவும் இருப்பாள்.

மூக்கின் மீது எங்காவது மச்சம் இருந்தால் அப்பெண் எடுத்த காரியங்களை செய்து முடிக்கும் ஆற்றல் மிகுந்தவளாக இருப்பாள்.

மூக்கின் நுனிப்பகுதியில் மச்சம் இருந்தால் அப்பெண்ணுக்கு அமையும் கணவர் மிகப்பெரிய செல்வந்தராக இருப்பார்.

காதுகளில் மச்சம் இருந்தால் ஏகப்பட்ட செலவு செய்வார்கள். என்ன செலவு செய்தாலும் அதற்குத் தக்கபடி பணமும் வரும். சமுதாயத்தில் இவர்களுக்கு தனி மதிப்பு இருக்கும்.

நாக்கில் மச்சம் இருந்தால் அவள் கலைஞானம் கொண்டவளாக இருப்பாள். ரசனை அதிகம் இருக்கும்.

மேல் உதடு அல்லது கீழ் உதட்டில் மச்சம் இருந்தால் அவள் அதிர்ஷ்டம் மிகுந்தவளாக, நல்லொழுக்கம் உடையவளாக, வாசனைப் பொருட்களின் மீது பிரியம் உள்ளவளாக, சிறந்த கணவனை அடைந்தவளாக இருப்பாள்.

மோவாயில் மச்சம் உள்ளவள் மிக உயர்ந்த எண்ணங்களைப் பெற்றிருப்பாள். பொறுமையும், அமைதியும் அவளின் உடன் பிறந்ததாக இருக்கும். குணத்திலும், தோற்றத்திலும் அழகான ஆணை கணவராக அடைந்திடுவாள்.

இடது கன்னத்தில் மச்சம் உள்ளவள் மற்றவர்களை வசீகரிக்கும ஆற்றல் உள்ளவளாக இருப்பாள். அவள் விரும்பியதை செய்து முடிக்க பலர் காத்திருப்பார்கள்.

வலது கன்னத்தில் மச்சம் உள்ளவர்கள் கஷ்டங்கள் பலவற்ன்றச சந்தித்து முன்னேற்றம் அடையும் திறனைப் பெற்றிருப்பாள். கஷ்டமும் சந்தோஷமும் சமமாக அனுபவிப்பாள்.

இடதுபக்கத் தோளில் மச்சம் கொண்டவள் ஏகப்பட்ட சொத்துகளுக்கு அதிபதியாவாள். பரந்த மனப்பான்மையுடன் பிறருக்கு தான தர்மம் செய்யும் குணம் இவளிடம் இருக்கும்.

கழுத்தில் எங்கு மச்சம் இருந்தாலும் வாழ்க்கையில் 7 முறை அதிர்ஷடம் அடிக்கும்.

கழுத்தில் வலப்புறத்தில் மச்சம் உள்ளவள் முதல் பிரசவத்தில் ஆண் குழந்தையைப் பெறுவாள். பிறந்த வீட்டுக்கும், புகுந்த வீட்டிற்கும் அதிர்ஷ்டத்தைத் தேடித் தருவாள்.

தலையில் எங்கு மச்சம் இருந்தாலும் அந்தப் பெண்ணிடம் பேராசையும், பொறாமைக் குணமும் நிறைய இருக்கும். வாழ்க்கையில் சந்தோசமோ, மன நிறைவோ இருக்காது.

நெற்றியின் நடுவில் மச்சம் இருந்தால் அவள் அதிகார பதவியில அமர்வாள். ஆடம்பர வாழ்வு கிடைக்கும். செய்வது எல்லாம் வெற்றியாகும்.

இரு புருவத்துக்கிடையே மச்சம் இருந்தாலும் மேற்சொன்ன பலனே. நெற்றியில் வலது பக்கம் மச்சம் இருந்தால் வறுமை வாட்டும். ஆனாலும் நேர்மையுடன் வாழ்வாள்.

காதுக்கும், கண்ணுக்கும் இடையே உள்ள கன்னப் பகுதியில் இடது பக்கம் மச்சம் இருந்தால் வாழ்க்கை வசதிகரமாக இருக்கும். சந்தோசம் குடிகொண்டு இருக்கும். இதுவே வலதுபக்கம் என்றால் வறுமை வாட்டும்.

இடது தாடையில் மச்சம் இருந்தால் ஆள் அழகாக இருப்பாள். ஆண்கள் இவளைத் துரத்தித் துரத்திக் காதலிக்கத் துடிப்பார்கள். நற்குணமுடையவள். வலது தாடையில் மச்சம் என்றால் பிறரால் வெறுக்கப்படுவாள்.

கண்களில் மச்சம் இருந்தால் வாழ்க்கை ஏற்றமும், இறக்கமும் நிறைந்ததாக இருக்கும்.

மூக்கு மீது மச்சம் இருந்தால் மிகப் பெரிய அதிர்ஷ்டம். நினைத்ததெல்லாம் நடக்கும். ஆடம்பர வாழ்வு, அந்தஸ்து இருக்கும். சமூக மதிப்பு கிடைக்கும்.

பெண்ணின் இடதுபக்க மார்பகத்தில் வலது பக்கமாக மச்சம் இருந்தால் வாழ்வில் படிப்படியாக முன்னேறுவாள். அதுவே இடது புறமாக மச்சம் இருந்தால் உணர்ச்சிகள் அதிகம் இருக்குமாம். வலது பக்க மார்பில் எங்கு மச்சம் இருந்தாலும் வாழ்க்கையில் போராட்டம் இருக்கும்.

நெஞ்சின் இடப்பகுதியில் மச்சம் இருந்தால் அவளுக்கு காலா காலத்தில் திருமணம் நடக்கும். நல்ல கணவன் அமைவான்.

தொப்புளுக்கு மேலே, வயிற்றில் மச்சம் காணப்பட்டால் அமைதியும், இன்பமும் கலந்த வாழ்க்கை அமையும். பிறரால் போற்றப்படுபவளாக இருப்பாள்.

தொப்புளில் மச்சம் இருந்தால் வசதியான வாழ்க்கை. தொப்புளுக்கு கீழே மச்சம் இருந்தால் வறுமையும், செல்வமும் மாறி மாறி வரும்.

கண்களுக்குத் தெரியாமல் முதுகில் எங்கு மச்சம் இருந்தாலும் துணிச்சலான காரியங்கள் அந்தப் பெண்ணிடத்தில் இருக்கும். வாழ்க்கை வசதிகரமானதாக இருக்கும். உடலில ஆரோக்கியம் திகழும்.

உள்ளங்கை, முழங்கை, மணிக்கட்டு ஆகியவற்றில் எங்கு மச்சம் இருந்தாலும் அவளது குடும்பம் இனிமையாக இருக்கும். கலாரசனை உடைய பெண் இவள். சிறந்த நிர்வாகியும்கூட.

பிறப்புறுப்பில் மச்சம் இருக்கும் பெண்ணைவிட வேறு ஒரு அதிர்ஷடசாலி பெண் இருக்க மாட்டாள். உயர்ந்த பதவிகள் தேடி வரும்.

இடது தொடையில் மச்சம் இருந்தால் படிப்படியாக கஷ்டப்பட்டு வாழ்க்கையில் மிக உன்னத நிலைமை அடைவாள். வலது தொடையில் மச்சம் என்றால் தற்பெருமையும் அடங்காபிடாரித் தனமும் இருக்கும்.

இடது முழங்காலில் மச்சம் இருக்கும் பெண், புத்தி கூர்மையானவளாகவும், தன்னம்பிக்கை உடையவளாகவும் இருப்பாள். அதுவே வலது முழங்காலில் என்றால் அவள் பிடிவாதக்காரி.



# இலக்கியக் கிண்ணம்

## புகழ்பூத்த அறிஞர் கடிதம்

தொகுப்பு : கலாபூஷணம் சு.துரைசிங்கம்

**மறைமலை அடிகளின் மடல்**

அருந்தமிழ்ப் புலமையுடன் ஏனைப் பல நன்மொழிப் புலமையும் ஒருங்கி நிரம்பி, அன்பினை வளர்க்கும் ஒரு தெய்வ வழிபாட்டிற்றினைச் சிறந்து திகழுங் கிறித்துமத குருவாய் விளங்கும் மாட்சிமைமிக்க அப்பன் ஞானப்பிரகாசருக்கு அன்புடன் வரைவன

அன்புருவாகும் அண்ணால்

நம் அன்பருந் தமிழ்ப்புலமையிற சிறந்தாருமான திரு.இராசையனார் தங்கள் புலமைத் திறங்களையும் அன்பின் மாட்சிகளையும் எடுத்து உரைத்து தங்கட்கு யான் இயற்றிய "சாதி வேற்றுமையும் போலிச் சைவரும்" "தமிழர் நாகரிகம்" என்னும் இரண்டு நூல்களையும் வி.பி.பி.யில் அனுப்புமாறு தெரிவித்து ஒரு திருமுகம் போக்கினார். அவர் தெரிவித்தவாறே பிற்குறிப்பிட்டிருக்கும் விளக்கப்படி அந் நூல்களைத் தங்கட்கு வி.பி.பி.யில் அனுப்பியிருக்கிறேன். அப்புத்தக கட்டைத் தாங்கள் அன்பு கூர்ந்து பெற்றுக்கொள்ளுமாறு வேண்டுகிறேன். அவை தம்மைத் தாங்கள் ஒருகால் முற்றும் உற்று நோக்கி ஆராய்ந்து தங்கள் அரிய கருத்தை தெரிவிப்பீர்களாயின் தங்கட்குப் பெரிதும் கடமைப் பட்டவனாவேன். ஆரியர் இந் நாவலந்தீவிற் புகுந்து மெல்ல மெல்ல தமிழரோடு உறவு கலந்து அவர் தமக்கிருந்த பழைய நாகரிகச் சிறப்புக்களையெல்லாந் தாங் கவர்ந்து கொண்டு தாங்கொணர்ந்த புல்லிய முறைகளையெல்லாம் அவர்க்குப் புகட்டி அவரைத் தமக்கு அடிமை யாக்கி விட்டனர். ஆரியரினது கூட்டுறவினால் இழிவு எய்துதற்கு முன் தமிழர் அடைந்திருந்த நாகரிக வாழ்வின் வகைகளை எல்லாம் என்னாலியன்ற மட்டும் ஆராய்ந்து, சென்ற முப்பதாண்டுகளாக அவை தம்மைத் தமிழ் மக்கட்கு அறிவுறுத்தி வருகின்றேன். எனது சிறுமுயற்சியால், தமிழரின் தனிச்சிறப்பும் தனித்தமிழ்மாட்சியும் ஆங்காங்கு பரவிவருகின்றன. என்றாலும் முயற்சிக்குத்தக்க அளவு அவை பரவவில்லை... என்றாலும் எல்லாம் வல்ல இறைவன் அருளால் எனது முயற்சி நாளடைவில் வேரூன்றி பெரும் பயனைத் தருமெனும் நம்பிக்கையுடையேன். நோவா என்னும் முனிவர் காலத்தெழுந்த வெள்ளப்பெருக்கினால் பெருந்தமிழ நாடாகிய "குமரிநாடு" கடல் கொளுமுன் தமிழரும் சாலடியரும், எகுபதியும், ஆரியரும், பிநீசியரும் ஈபுருக்களும் ஓரினத்தவராகவே ஒரு பெருநிலப்பகுதியில் உறைந்து முழுமுதற் கடவுளையே வணங்கி வந்தனர். நாகரிக வாழ்க்கையிற் பண்டுதொட்டுச் சிறந்த இம்மக்கட் பகுப்பினர் அனைவரும் நடுக்கோட்டின் அருகில் சூடுங் குளிரும் ஒத்த நாடுகளில் உறைந்தவர் ஆவர்.

அந் நோக்கம் ஈடேறும் பொருட்டுத் தங்களையொத்த சமயப் பெரியார்களும் எனக்குதவி செய்தால் எனது முயற்சி பயன் தரும். தங்கள் வேதக்கொள்கைகளும் எனது சைவசித்தாந்த கொள்கைகளும் ஒன்றே என்பதை என்னுடைய பெருநூல்களாகிய "சிவஞானபோத ஆராய்ச்சி" யிலும் "மாணிக்கவாசகர் வரலாறுங் காலமும்" எனும் நூலிலும் விரித்து விளக்கியிருக்கிறேன். இந்நூல்கள் அச்சிலிருக்கின்றன. வெளிவந்தவுடன் தங்கள் பார்வைக்கும் அனுப்பிவைப்பேன். நலம்.

---

வாழ்க்கையில் நான்பெற்ற அனுபவங்கள் எல்லாவற்றையும் பார்க்கும்பொழுது இவையெல்லாம் ஏற்படுத்திய ஒட்டுமொத்தமான தாக்கம்தான் நான். ஏன் நான் மாறினேன் அல்லது ஏன் நான் மாறவில்லை என்றால் எனக்கு ஏற்பட்ட அனுபவங்கள்தான் இதற்கு காரணம். சில நண்பர்கள் கடுமையாக விமர்சிப்பார்கள். சில நண்பர்கள் நான் முன்பு இருந்த நிலையிலிருந்து விடுபட்டதாகச் சிலாகித்து சொல்பவர்களாகவும் இருப்பார்கள். நான் சொல்வது என்னவென்றால், மனிதனைப் புரிந்து கொள்ளப்பாருங்கள். அது இலக்கியகாரனுக்கு, கலைஞனுக்கு அடிப்படையான தேவை. நான் மீண்டும் சொல்லுகிறேன், ஒரு சமூகப் பொதுமனிதனாகச் சொல்லுகிறேன் "நாங்கள் சமூகத்துக்கு எவ்வளவைக் கொடுக்கிறோமோ" அவ்வளவைத்தான் பெற்றுக்கொள்ள முடியும்.

**பேராசிரியர் கா.சிவத்தம்பி ஒரு நேர்காணலில்**

---

**கந்தையாப் பண்டிதர் இயற்றிய "ஜோர்ஜ்மன்னர் இயன்மொழி வாழ்த்து" என்னும் நூலைப்பற்றிய மதிப்புரை**

"சங்க நூல்கள் எல்லாம் எங்களுக்கு இன்னும் புதுப்பாடமாகவே இருக்க தங்களுக்கு இன்னும் பழம் பாடமாகி ஏவல் செய்து நிற்பது வியப்பினும் வியப்பே! தங்களைக் கீரன் என்பேனோ? கபிலன் என்பேனோ? மருதனிளநாகனார் என்பேனோ? யார் என்று கூற அறியேனாய் இடர்ப்படுகின்றேன்.

**செல்வக்கேசவராய முதலியார்**
**தமிழ்ப்பேராசிரியர்**
**பச்சையப்பன் கல்லூரி**
**சென்னை**

சங்கச்சான்றோர் பாடல்கள் போலப் பாட்டுக்களை இயற்றுவோர் தற்காலத்திலும் உளர் எனின் அவர் தாங்களே என்பது மிகையன்று.

**ந.மு.வேங்கடசாமிநாட்டார்**
**தலைமைத் தமிழ்ப்பண்டிதர்**
**பிஷப் கீப்ர் கல்லூரி, திருச்சி.**

---

**குமாரசுவாமிப்புலவர்**

இவர் உடுப்பிட்டி கோவிற்பற்றிலே வல்லிபட்டியிலே சுமார் நூறு வருடங்களின் முன்னிருந்த வித்துவான் சந்திரசேகர முதலியார்க்கு புத்திரர். முத்துக்குமாரு முதலியாருக்கு சகோதரர். இவர் "புரந்தரனாடகம்" எனப் பெயரிய ஒரு நாடகத்தையும் அறுபத்து நான்கு அடி கொண்ட ஓர் சிந்துடன் பல பதங்களையும் பாடினார்.

**குறிப்பு :** தமிழ்புளூராக் நூலில் இடம் பெறாத ஈழத்தவர்களுள் ஒருவர் குமாரசுவாமிப்புலவர். சதாசிவம்பிள்ளை 1786க்கு முன்னர் குமாரசுவாமிப்புலவர் வாழ்ந்தார் என்றும் அவர் சகோதரர் முத்துக்குமாரமுதலியார் 1786க்கு முன்னர் பிறந்தார் என்றும் கூறல் ஆராயத்தக்கது. இவ்விருவரின் மருகர் க.குமாரசுவாமி முதலியார் காலம் 1792 1874. சந்திரசேகர முதலியாரும் புலமையுடையவர்.

---

**இலக்கியத்துளிகள்**

இந்திய அமைதிப்படை இலங்கைக்கு வந்திருந்த பொழுது யாழ்ப்பாணத்தில் இயங்கி வந்த அரச வானொலியின் பகுதி நெறியாளராக இருந்தவர் தென்கச்சி கோ. சுவாமிநாதன். இவர் இந்திய விவசாயத்துறையில் பணியாற்றிய அதேவேளை திருச்சி வானொலியில் "இன்று ஒரு தகவல்" சொல்பவராகவும் பண்ணை அறிவிப்பாளராகவும் கடமையாற்றினார். இத்தகவலை முஸ்லிம் எழுத்தாளர் ஒருவர் கொழும்பு தமிழ்ச்சங்கத்தில் நடந்த கூட்டமொன்றில் தெரிவித்தார்.

---

யாழ்.சுழிபுரம் விக்ரோறியா கல்லூரி ஆசிரியரின் 7 நூல்கள் ஒரே மேடையில் அண்மையில் வெளியிடப்பட்டது.

---

முதுபெரும் எழுத்தாளர் சிற்பி எனும் சி.சரவணபவன் நோய் வாய்ப்பட்டு வெள்ளவத்தையில் மகனுடன் வாழ்ந்து வந்த நிலையில் கடந்த திங்கட்கிழமை கொழும்பில் காலமானார். இவர் கலைச்செல்வி எனும் இலக்கிய இதழின் ஆசிரியருமாவார்.

---

தமிழ் ஆய்வு உலகத் தமிழர்களை வியப்பில் ஆழ்த்தியது என்று கூறினார் கவிக்கோ அவர்கள். இதிலிருந்து சுன்னாகம் குமாரசுவாமிப் புலவரின் ஆற்றல் எவ்வளவு தூரம் விஞ்சி நிற்கின்றது என்பதை அறிய முடிகிறது.

---

# ஹிட்லர்

ஜேர்மனியில் ஹிட்லர் கொடி கட்டிப் பறந்த நேரம்.

அந்த நேரத்தில் ஹிட்லரைக் கொல்லச் சதி செய்ததாகப் பல்லாயிரம் பேர் கைது செய்யப்பட்டனர்.அதில் ஒரு பகுதியினரை சிறையில் சித்திரவதை செய்து கொல்லுமாறும், ஏனையோரைச் சுட்டுத் தள்ளுமாறும் உத்தரவிட்டார் ஹிட்லர்.

சுட்டுக் கொல்லப்பட வேண்டியவர்கள் பட்டியலில் இருந்தவர்களில் ஒருவர் ஜெனரல் ரோமல். அவர் ஒரு காலத்தில் ஹிட்லருடன் தோளோடு தோள் நின்று போராடியவர்.

'ஜெனரல் ரோமலுக்கு கருணை காட்டலாம் என நினைக்கிறேன்' என்றார் ஹிட்லர்.

'அப்படியானால் அவரை விடுதலை செய்து விடலாமா?' என்று கேட்டனர் அதிகாரிகள். உடனே ஹிட்லர் சொன்னார், 'அவரைச் சுட்டுத் தள்ள வேண்டாம். தற்கொலை செய்துகொள்ள அனுமதிக்கவும்!' என்றாராம்.

# கட்டிலும் மனைவியும்

மனோதத்துவ டாக்டரிடம் வந்த ஒருவர், டாக்டர் நீங்கள் தான் என்னை எப்படியாவது குணப்படுத்த வேண்டும் என்றார்.

உங்களுக்கு என்ன நோய்? விளக்கமாக சொல்லுங்கள்? என்று கேட்டார் டாக்டர். இரவில் நான் கட்டிலின் மேல் படுத்தவுடன் கட்டிலின் கீழ் யாரோ இருப்பதைப் போல் தோன்றுகிறது. கட்டிலை விட்டு கீழே இறங்கிப் பார்க்கிறேன். அங்கு யாரும் இல்லை. பயம் போவதற்காக நான் கட்டிலின் கீழேயே படுத்துக் கொள்கிறேன். இப்போது கட்டிலின் மேலே யாரோ படுத்துக் கொண்டிருப்பது போலத் தோன்றுகிறது. இப்படியே இரவு முழுவதும் கட்டிலின் மேலும் கீழும் மாறி மாறிப் படுத்துக் கொண்டே இருக்கிறேன். இதனால் எனக்கு பைத்தியமே பிடித்துவிடும் போல் இருக்கிறது என்றார்.

உங்களைக் குணப்படுத்த முடியும் என்று நினைக்கிறேன். வாரந்தோறும் இரண்டு முறை தவறாமல் என்னை இரண்டு ஆண்டுகள் வந்து பார்க்க வேண்டும். என்னை ஒவ்வொரு முறை சந்திப்பதற்கும் 1000 ரூபாய் கட்டணம் தர வேண்டும் என்ன சொல்கிறீர்கள்? என்றார் டக்டர்.

நிறைய செலவாகும் போல இருக்குதே? என்னால் இவ்வளவு தொகையைப் புரட்ட முடியுமா என்று தெரியவில்லை, எதற்கும் என் மனைவியைக் கேட்டு விட்டு அடுத்த வாரம் சொல்கிறேன் என்று சொல்லி விட்டு புறப்பட்டார் அவர்.

ஒரு வாரம் கழித்து டாக்டருக்கு போன் வந்தது. அதில் அவர், டாக்டர் என் மனைவி என் நோயைக் குணப்படுத்தி விட்டாள் என்றார்.

டாக்டரால் அதை நம்ப முடியவில்லை. எப்படி? என்று கேட்டார். என் மனைவி நான் படுக்கும் கட்டிலின் கால்களை வெட்டிவிட்டாள் என்று பதில் வந்தது.



# திருமணத்திற்கு முன் காதலனும் காதலியும்

ஆண்: இதற்காகத்தானே இத்தனை நாளாய்க் காத்திருந்தேன்.

பெண்: நீ என்னை விட்டு விலகி விடுவாயா?

ஆண்: கனவிலும் அவ்வாறு நான் நினைக்க மாட்டேன்.

பெண்: நீ என்னை விரும்புகிறாயா?

ஆண்: ஆமாம் இன்றைக்கு மட்டுமல்ல என்றென்றும்!

பெண்: நீ என்னை மறந்து விடுவாயா?

ஆண்: அதைவிட நான் செத்துப் போயிடலாம்!

பெண்: எனக்கொரு முத்தம் தருவாயா?

ஆண்: கண்டிப்பாக அதுதானே எனக்கு மிகப்பெரிய சந்தோச தருணம்.

பெண்: நீ என்னை அடிப்பாயா?

ஆண்: ஒருபோதும் அந்தத் தவறை நான் செய்ய மாட்டேன்

பெண்: நீ என்னுடன் கடைசி வரை கை கோர்த்து வருவாயா?

திருமணத்திற்கு பின் இவர்கள் என்ன பேசுவார்கள் என்பதை அறிய விருப்பமா?

ஒன்றுமில்லை, அப்படியே கீழிருந்து மேலாகப் படிக்கவும்...



## குட்டீஸ் பக்கம்



# அடுத்தவர் பொருளுக்கு ஆசைப்பட்டால்...

அது ஒரு பெரிய ஆலமரம். அந்த மரத்தின் கிளை ஒன்றில் இரண்டு தூக்கனாங் குருவிகள் கூடு கட்டி வசித்து வந்தன. அவற்றின் கூடு பெரிதாக, காற்றில் அசைந்தாடிக் கொண்டிருந்தது.

ஒரு நாள் பகல் வேளை தூக்கணாங் குருவிகள் இரண்டும் இரை தேட வெளியே சென்றிருந்தன. அவ்வேளை ஒரு சிட்டுக்குருவி பறந்து வந்து கூட்டுக்குள் புகுந்து கொண்டது. சிறிது நேரத்தில் ஒரு தூக்கனாங்குருவி கூட்டுக்குள் தலையை நுழைத்தது. கூட்டுக்குள் சிட்டுக்குருவி இருப்பதைப் பார்த்தது.

குருவி அக்கா எங்கள் வீட்டுக்குள் புகுந்து எனக்கு இடம் இல்லாமல் செய்துவிட்டாயே. தயவுசெய்து வெளியே போய்விடு என்றது தூக்கனாங்குருவி.

போடி போ இது என் வீடு. இதை விட்டுப் போக மாட்டேன். உன்னால் முடிந்ததைப் பார்த்துக் கொள் என்று அகங்காரத்துடன் கூறியது சிட்டுக்குருவி.



சிட்டுக்குருவியின் அகங்காரத்தைப் போக்க வழி என்னவென்று யோசித்தது தூக்கனாங் குருவி. தனது நண்பர்களுடன் யோசிப்பதற்காக துக்கத்துடன் பறந்து சென்றது. சிட்டுக் குருவியோ ஆனந்தமாகப் பாடிக்கொண்டு கூட்டினுள் இருந்தது.

திடீரெனத் தூக்கனாங் குருவிகள் கூட்டமாகப் பறந்து வந்தன. அவை ஒவ்வொன்றும் ஈர மண்ணை அலகில் கொத்தி வந்தது கூட்டின் வாசலைக் கொஞ்சம் கொஞ்சமாகக் கூட்டை மேலும் அடைத்துப் பூசின. கூட்டின் வாசல் குறுகிக் கொண்டே போனது.

கூட்டினுள் இருந்த சிட்டுக் குருவிகள் கழுத்து, அப்புறம் தலை மட்டும் பின் அலகு என்று தெரிந்துகொண்டே வந்தது. கடைசியில் ஒன்றுமே தெரியவில்லை. தூக்கனாங் குருவிகள் சிட்டுக்குருவியை கூட்டுக்குள் வைத்து அடைத்து விட்டுப் பறந்து போயின.

அடுத்தவர் கூட்டை தனது கூடெனக் கூறிய சிட்டுக்குருவி அநியாயமாகத்தன் உயிரை இழந்தது. அடுத்தவர் பொருளுக்கு ஆசைப்பட்டால் இதுதான் கதி என்பதை இறக்கும் தருணத்தில் உணர்ந்து கொண்டது.

**"பிறர் பொருளுக்கு ஒரு போதும் ஆசைப்படல் ஆகாது."**

**மு.கமலினி**
தரம் – 10
(யா/மகாஜனாக் கல்லூரி)

# வாரமொரு குறள்



*பொறிவாயில் ஐந்தவித்தான் பொய்தீர் ஒழுக்க நெறி நின்றார் நீடுவாழ் வார்.*

**பொருள் :**

**மெய், வாய், கண், மூக்கு, செவி எனும் ஐம்பொறிகளையும் கட்டுப் படுத்திய தூயவனின் உண்மை யான ஒழுக்கமுடைய நெறியைப் பின்பற்றி நிற்பவர்களின் புகழ் வாழ்வு நிலையானதாக அமையும்.**

# மருவிய மொழிகள்*

* ஆதி வடிவம் ஆயிரம் வேரைக் கண்டவன் அரை வைத்தியன்
  மருவிய வடிவம் ஆயிரம் பேரைக் கண்டவன் அரை வைத்தியன்
  பின்பு தற்போது ஆயிரம் பேரைக் கொன்றவன் அரை வைத்தியன்
* ஆதி வடிவம் ஆ நெய்க்கு ஒருகாலம் வந்தால் பூ நெய்க்கு ஒருகாலம் வரும்
  மருவிய வடிவம் ஆனைக்கொருகாலம் வந்தால் பூனைக்கொரு காலம் வரும்
* ஆதி வடிவம் மண் குதிர் + ஐ (குதிரை) நம்பி ஆற்றில் இறங்காதே
  மருவிய வடிவம் மண்குதிரையை நம்பி ஆற்றில் இறங்காதே

**சி.சிந்துயன்**
கிளி/கலவெட்டித்திடல் நாகேஸ்வரா வித்தியாலயம்
புளியம்பொக்கணை.

**(வாசகர்களே உங்கள் பிரதேசங்களிலும் இதுபோன்ற மருவிய பழ மொழிகள் உங்களுக்கும் தெரிந்தால் எழுதி அனுப்பவும்.)**

# அறிவியல் கண்டுபிடிப்பு

| | | |
|---|---|---|
| 1. ஆகாய விமானம் | – | ரைற் சகோதர்கள் |
| 2. டைனமற் | – | அல்பிரட் நோபல் |
| 3. மின்விசிறி | – | எட்மன்ட்காட்ரைட் |
| 4. தையல் இயந்திரம் | – | பி.திம்மோனியர் |
| 5. பாரமானி | – | ரொறிசொல்லி |
| 6. நுணுக்குக்காட்டி | – | ஞ.ஜான்சன் |
| 7. மோட்டார்க்கார் | – | கார்ல்பென்ஸ் |
| 8. சினிமா | – | லும்மியர் |
| 9. கம்பியூட்டர் | – | வானடேஸவ் |
| 10. அணுகுண்டு | – | ஜே.ராபர்ட் ஒப்பன் |
| 11. ஹெலிகொப்டர் | – | ஏறியன் ஏஹ்மிச்சன் |
| 12. ஹைட்ரஜன் குண்டு | – | எட்வெட் டெல்லர் |
| 13. மின்னற் கடத்தி | – | பெஞ்சமின் |
| 14. பரசூட் | – | யு.து.கனேரின் |
| 15. மின்சார மோட்டார் | – | ஆ.ஜக்கோடி |
| 16. தந்தி | – | யு.கூக், ஓ.விற்ஸ்ரோன் |

த.மதுஷன்
யா/யூனியன் கல்லூரி தெல்லிப்பளை.

# விடுகதை

01. அக்காள் விதைத்த முத்து அள்ளமுடியாத முத்து அது என்ன?
02. அழகு அழகாய்ப் பூப் பூக்கும் அம்மாடி என்று காய் காய்க்கும் அது என்ன?
03. அவனுக்கு ஒருமுறை பல் விழுந்தால் மறுமுறை முளைக்காது அதுஎன்ன?
04. அள்ளலாம் கிள்ள முடியாது அது என்ன?
05. அடிக்காமலே அழ வைப்பாள் அது என்ன?
06. அகன்றவாய் உடையவர் திறந்த வாய் மூடாதவர் அது என்ன?
07. அச்சு இல்லாத சக்கரம் அழகு காட்டும் சக்கரம் அது என்ன?
08. அடிக்காத பிள்ளை அலறித் துடிக்குது அது என்ன?
09. அட்டைக் கரிப்பெண்ணுக்கு உச்சந் தலை மஞ்சள் அது என்ன?
10. அண்ணன் கல்வியில் வாங்காதது தம்பியிடையில் வாங்கியது அது என்ன?
11. அதிசயக் குளத்திலே அற்புதக் குருவி வாலினால் நீரை வற்றக் குடிக்குது அது என்ன?
12. அம்மா கொடுத்த தட்டிலே நீர் விட்டால் நிற்காது அது என்ன?
13. அண்ணனும் தம்பியும் இரண்டு பேர் அவர்களைச் சுற்றிலும் பன்னிருவர் அவர் யார்?
14. அந்தரத்திலே பறக்கும் பறவையும் அல்ல அழகான வால் உண்டு குரங்கும் அல்ல அது என்ன?
15. அண்ணன் தம்பி அவர்கள். தம்பிக்கு மாதத்தில் ஒருநாள் விடுமுறை. அண்ணனுக்கு அதுவும் இல்லை. அவர்கள் யார்?

**விடைகள் :**

| | |
|---|---|
| 1. கோலம் | 2. நெருஞ்சி |
| 3. சீப்பு | 4. தண்ணீர் |
| 5. வெங்காயம் | 6. சௌக்கு |
| 7. வளையல் | 8. சங்கு |
| 9. பனங்காய் | 10. பட்டம் |
| 11. விளக்குத்திரி | 12. தாமரை இலை |
| 13. கடிகாரம் | 14. பட்டம் |
| 15. சூரியன், சந்திரன் | |

**கு.கோகுலா**
இடைக்காடு மகா வித்தியாலயம்

# கல்வியைக் கருத்தில் கொள்

அன்பின் நண்பா கொஞ்சம் நில்!
நட்பாம் எந்தன் வார்த்தையைக்
பள்ளி செல்லும் காலத்திலே
படிப்பை மட்டும் கருத்தில் கெ
துள்ளித் திரியும் காலம் இதுவே
தோல்வியை நோக்கிச் செல்லாதே

தந்தையும் தாயும் எமக்காகக்
காணும் கனவுகள் பல கோடி
தவிடு பொடியாய் அவற்றை நீ
ஆக்கிடவே முயலாதே!
வாழ்க்கை என்ற புத்தகத்தின்
முன்பக்கமே கல்வி தான்!
முன்பக்கத்தை இழந்துவிட்டால்
வாழ்வில் எழில் இருக்குமா?

வாழ்வின் அடித்தளமே
பள்ளி செல்லும் வாழ்க்கைதான்
பக்குவமாய் அதைப் புரிந்து கொண்டு
படிப்பை மட்டும் கருத்தில் கொள்!




ர.தனலக்ஸ்மன்
யா/மயிலணி சைவ மகா வித்தியாலயம்



# செய்தித்தாள்

அழகான வெள்ளைத் தாளில்
அழகான எழுத்துடன்
வாரந்தோறும் வருகுது
எமக்கு நல்ல செய்தி தருகுது

நன்மை பயக்கும் செய்தியை
பண்புடனே தருகுது
நம் நாட்டு செய்திகளை
அன்றாடம் தருகுது

உலகத்தில் நடப்பவற்றை
எல்லாம்
நாம் கற்க தருகுது
நல்ல நல்ல விடயங்களை
நலமுடனே தருகிறது.

வாரம் வரும் நாளிதழ்
நன்மை பயக்கும் செய்தி
தருகுது
தினமும் செய்தி பார்ப்பதால்
நமது அறிவு வளருது.



மு.அஜிராஜ்
யா/மகாஜனாக் கல்லூரி

**தேர்தலுக்கு முன்:**


1. எம்மைநாமே ஆளவேண்டும்
2. எமது உரிமைகளை மீட்கவேணடும்
3. என்றைக்கும் சலுகைக்கு அடிபணியோம்
4. சிறந்த மக்கள் சேவையே நமது எண்ணம்
5. மக்களின் நிலமீட்புக்காகப் போராடுவோம்

**தேர்தலுக்குப் பின்:**

1. ஜப்பான் சொகுசு வாகனம் தேவை
2. பாவிக்காத வாகனத்துக்கு எரிபொருள் ஒதுக்கீடு
3. நாடாளுமன்ற உறுப்பினர்கள் போன்று அதிகரித்த சம்பளம்
4. நாடாளுமன்ற உறுப்பினர்கள் போன்று இலவச மருத்துவம்
5. ஓய்வூதியம்

வடக்கு மாகாணசபை உருவாக்கப்பட்டதன் பின்னர் முதலாவது தேர்தலில் அந்தப் பிரதேச மக்களின் தலைவராகிய சபையின் தவிசாளர்கள் தலைமை தாங்கினர்.

மக்களின் எதிர்பார்ப்பு வடக்கு மாகாணசபைக்குள் கல்வி, சுகாதாரம், விவசாயம், உள்ளூராட்சி மற்றும் பெருந்தெருக்கள் போக்குவரத்து ஆகிய 5 அமைச்சுக்கள் வருகின்றன. அந்தந்த அமைச்சுகளுக்குக் கீழே வருகின்ற திணைக்களங்களில் கூட்டமைப்பின் உதவியுடன் எமது பிள்ளைகளுக்கு வேலைவாய்ப்புக்கள் கிடைக்கப்பெறும். ஒவ்வொரு மாகாணசபை உறுப்பினர்களின் ஊடாகவும் எமது பிரதேசங்களை அபிவிருத்தி செய்யலாம். எமது மக்களுக்கான ஒரு குட்டி அரசாங்கம் மாகாண சபை. நாம் தெற்கிடம் கையேந்தவேண்டிய நிலை இனி வராது என்ற நப்பாசையில்



# உரிமையை விடுத்து சலுகையைத் தேடும் வடக்கு மாகாணசபை

தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு சர்வதேசமே வியக்குமளவில் பெரு வெற்றியாக 30 ஆசனங்களைப் பெற்று ஆட்சிப்பீடம் ஏறியது. 1977 ஆம் ஆண்டுக்குப் பிறகு தமிழ் மக்கள் அதிக ஆர்வம்காட்டி பெரு விருப்புடன் வாக்களித்த தேர்தல் என்றால் அது வடக்கு மாகாணசபைத் தேர்தல்தான். தேர்தல் அறிவிக்கப்பட்டதும் ஒவ்வொரு தமிழ் மகனும் மாகாணசபை எமது கைக்கு வந்தால் ஏதோ தமிழீழம் கிடைத்ததற்கு நிகராகும் என்றாற்போல் மிகவும் உணர்வுபூர்வமாகவே வாக்களித்தனர். பிரசாரங்களும் மிகவும் அமோகமாக இடம்பெற்றன. சகல தேர்தல்களையும்விட தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு வடக்கு மாகாணசபைத் தேர்தலுக்கு செலவழித்த பணமும் மிகவும் அதிகம்.

இந்த மாகாணசபைத் தேர்தலில் தமிழ்த்தேசியக் கூட்டமைப்புக்குக் கிடைத்த மிகப்பெரிய வரப்பிரசாதம் உள்ளூராட்சிமன்றங்களும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஆளுகைக்குள் இருந்தமைதான். முதலமைச்சர் மற்றும் அமைச்சர்கள் உட்பட வடக்கு மாகாணசபை உறுப்பினர்கள் ஒவ்வொருவரின் வெற்றிகளுக்குப் பின்னாலும் உள்ளூராட்சி மன்றங்களின் தவிசாளர்கள் மற்றும் உறுப்பினர்களின் வியர்வை சிந்தியிருக்கும். சகல பிரதேச பிரசாரக்கூட்டங்களுக்கும் எமது மக்கள் மாகாணசபைத் தேர்தலில் போட்டியிட்ட ஒவ்வொரு வேட்பாளர்களையும் நம்பி வாக்களித்தார்கள்.

முதலமைச்சரைத் தெய்வமாக மக்கள் கருதினார்கள். சட்டம் தெரிந்தவர். ஆன்மீகவாதி, கல்விமான். நேர்மை நெறிநிற்பவர். எதற்கும் விலைபோகாதவர். என்றெல்லாம் தமிழ் மக்கள் நம்பினார்கள். ஆனால், மக்களின் எண்ணங்கள் அனைத்தும் தலைகீழாக மாறின. தற்போது மக்கள் எமக்கு சரியான ஒரு தலைமை இல்லையே என்று வெம்பியழுகின்ற நிலைமைக்கு இன்று கூட்டமைப்புத் தலைமைகளினதும் மாகாணசபை உறுப்பினர்களதும் செயற்பாடுகள் அமைந்துள்ளன.

**தமிழ்திரன்**

மக்களுக்கு சேவையாற்ற தமிழ்த் தேசியக் கூட்டமைப்பால் கல்விப்புலத்தைச் சார்ந்த – அந்தந்த துறைசார் வல்லுநர்களை – முதலமைச்சராகவும், ஒவ்வொரு அமைச்சுக்களுக்கும் நியமித்தார்கள். ஆனால், கூட்டமைப்பு செய்த மிகப்பெரும் தவறு என்று நான் இதைக் கருதுகின்றேன். மக்கள் சேவையைப் பொறுத்தவரையில் முதலமைச்சர் தான் ஒரு நீதியரசர் போன்றும் சுகாதார அமைச்சர் தான் ஒரு சுகாதார வைத்திய அதிகாரி போன்றும், கல்வி அமைச்சர் தான் ஒரு கல்விப் பணிப்பாளர் போன்றும் செயற்படுகின்றமை மக்களை விசனத்துக்குள் ஆழ்த்துகின்றது. நிர்வாகம் வேறு அரசியல் வேறு. நிர்வாகி செய்வது கடமை. அரசியல்வாதி செய்வது சேவை. இதை அவர்கள் உணர மறுக்கிறார்கள்.

ஆனால், ஒவ்வொரு மாகாணசபை உறுப்பினர்களும் தமது நலன்கள் குறித்து மிகவும் அக்கறையாக இருப்பது தற்போது மக்கள் மத்தியில் ஆத்திரத்தையும் விசனத்தையும் ஏற்படுத்தியுள்ளது. மக்கள் சேவைக்கென வந்த அவர்கள் தமக்கு சம்பள அதிகரிப்பு கோருகின்றார்கள். ஜப்பான் சொகுசு வாகனங்கள் வேண்டுமெனக் கோருகின்றார்கள். ஓய்வூதியக் கொடுப்பனவு கோருகின்றார்கள். இலவச மருத்துவ சேவை வேண்டுமெனக் கோருகின்றார்கள். எரிபொருள் கொடுப்பனவு கோருகின்றார்கள். இதனைவிட, முதலமைச்சர், அமைச்சர்கள் மற்றும் சபாநாயகர் ஆகியோர் இல்லாத வாகனத்துக்கு எரிபொருள் கொடுப்பனவு பெறுகின்றார்கள். இந்த இடத்தில் மக்கள் சேவையில் அவர்கள் காட்டிய நீதி தப்பாகின்றமை வெள்ளிடைமலை.

ஆகவே, இனிவருங்காலங்களிலாவது எமது மக்கள் மீது சேவைநோக்கும், தியாக சிந்தையும், அர்ப்பணிப்பும் மிக்க தலைவர்களை மக்கள் இனங்கண்டு தெரிவுசெய்தால்தான் எமது இனத்துக்கு விமோசனங்கிட்டும். தவறின், செல்வா கூறியமை போன்று தமிழ் மக்களைக் கடவுள்தான் காப்பாற்றியாகவேண்டும்.


## தினச்செய்தி விளம்பரக் கட்டணம்

**Thinacheithi Weekly NewspaperAdvertisement Rate Card**

| PagesSizes | (col /cm) | Black & White | Color |
|---|---|---|---|
| Full page | 08x40 | 30000 . 00 | 50000 . 00 |
| Half page | 08x20 | 15000 . 00 | 25000 . 00 |
| Qatar page | 04x20 | 7500 . 00 | 12500 . 00 |
| Per col /cm | 01x01 | 95 . 00 | 160 . 00 |
| **Front Page** | | | |
| Front strip ad | 8x5 | 5000 . 00 | 8000 . 00 |
| Front height ad | 3x15 | 6000 . 00 | 9000 . 00 |
| Per col /cm | 1x1 | 120 . 00 | 200 . 00 |
| Ear space advertisements | 6x6 cm | 1500 . 00 | 2500 . 00 |
| **Back page** | | | |
| Ear space back page | 6x6 cm | 1000 . 00 | 2000 . 00 |

**Obituary/ Death notice / Birthday greeting/ Wedding notice & greeting/ Invitation**

**Per col/cm 1x1 Black &White 60.00 Color 110.00**

**Election Notice & Meeting**

**Per col/cm 1x1 Black &White 120.00 Color 200.00**

**Classified Advertisement:**

***First 20 words 150.00 Additional word 10.00***

தினச்செய்தி என்றும் உங்களுடன்

T.P : 021 7539300
Fax : 021 2242139
E-mail : thinacheithiadvt@gmail.com
Web : www.thinacheithi.com / lk

# சுவாச நோய்களைத் தடுப்போம்

தற்போதைய உலகில் இறப்பு வீதத்தைத் தீர்மானிக்கும் முக்கிய காரணிகளில் நீண்டகாலத்திற்குரிய சுவாச நோய்கள் (வருடத்துக்கு நான்கு மில்லியன்) விளங்குகின்றன.

அதிகரித்த புகையிலைப் பாவனை, ஆரோக்கியமற்ற உணவுப் பழக்கம், சீரர உழைப்பின்மை மற்றும் அதிகரித்த மதுபாவனை என்பவையே இந்த நோய்களின் தூண்டற் காரணிகளாக அமைகின்றன.

**பொதுவான சுவாசநோய்களாவன**

மூக்கிலிருந்து நீர்வடிதல், தடிமன்அல்லது ஜலதோஷம், கக்குவான் இருமல், மார்புச்சளி நோய், சுவாசக்குழாய் அழற்சி, ஆஸ்துமா, நியூமோனியாக்காய்ச்சல், கசம், சன்னி, சுவாசப்பைப் புற்றுநோய், பொதுவாகச் சுவாசநோய்கள் கீழ்வரும் காரணிகளால் ஏற்படுகின்றன.

ஒவ்வாமை – மகரந்தமணி, தொழில்சார் உணர்திறன்கள், தூசித் தெள்ளு, சில மருந்துப் பொருள்கள்.

நுண்ணங்கித் தொற்று – பக்ரீரியா (குக்கல், கசம், ஈர்ப்புவலி), வைரஸ் (தடிமன், சுவாசக்குழாய் அழற்சி), புகைப்பிடித்தல் (சுவாசப் புற்றுநோய்), மனஅழுத்தத்தால் தூண்டப்படுதல் (ஆஸ்துமா), சில நோய்கள் பரம்பரையாகக் கடத்தப்படக் கூடியவை (ஆஸ்துமா)

**அன்னியப் பொருள்களை உள்ளெடுத்தல**

குளிர்காலநிலை, ஆரோக்கியமற்ற உடற்பயிற்சி, ஆரோக்கியமற்ற உணவுப்பழக்கம்.

சுவாச நோய்களைத் தடுக்கவும் நோய்க்குரிய சமூகத்திலிருந்து எமக்குப் பரவாது தடுப்பதற்குமான வழிமுறைகளாவன...

இருமும்போதும், தும்மும் போதும் மூக்கு வாய்ப்பகுதிகளைக் கைக்கட்டையினால் மூடிக்கொள்ள வேண்டும்.

கண்ட இடங்களில் துப்புவதைத் தடுத்தல் அல்லது தவிர்த்தல் வேண்டும். நோயாளிகளால் ஆரம்பத்திலேயே இனங்காணப்பட்டுச் சிகிச்சைபெற வேண்டும்.

சிகிச்சை பூரணப்படுத்தப்பட வேண்டும்.

குடும்ப உறுப்பினர்களுக்கான மருத்துவப்பரிசோதனை (அவசியமான நோய்களுக்கு அனைத்துக் குடும்ப உறுப்பினர்களும் பரிசோதனையைச் செய்து கொள்ள வேண்டும். (கசம்)

புகைத்தல், மதுபாவனை போன்றவற்றை இயன்றளவு தவிர்த்தல்.

சமையலின்போது புகை வெளியேறுவதை இயன்றளவு தடுத்தல்

நல்ல காற்றோட்டமும் சூரிய ஒளியும் உள்ள இடங்களில் வாழ்தல்

எமது போசாக்கு நிலையையும், நோய் எதிர்ப்புச் சக்தி நிலையையும் நன்கு பேணுதல் வேண்டும்.

வக்சின்கள் மற்றும் தடுப்பூசிகள் உரிய நேரத்தில் போட்டுக் கொள்ளப்பட வேண்டும். (BCG குக்கல்)

நோயாக்கியின் வாழ்தகவு கூடிய காலநிலை மாற்றங்களின்போது காலநிலைக்கேற்றவாறு எம்மை இசைவுபடுத்திக் கொள்ள வேண்டும்.

காசநோயாளிகளாயின் அவர்கள் உரிய சிகிச்சையையை முழுமையாகப் பெறுவதுடன், நோயாளியின் சளி சேகரிக்கப்பட்டு புதைக்கப்பட அல்லது எரிக்கப்பட வேண்டும்.

மனப்பயிற்சிகள், சுவா சப்பயிற்சிகள் என்பவற்றில் ஈடுபடுவதன் மூலம் மன அழுத்தத்தைக் குறைக்க முயலுதல் வேண்டும்.

சளி மற்றும் சுவாசச் சுரப்புகளுடன் கையாண்டு முடிந்த பின் கைகளைச் சவர்க்காரமிட்டுக் கழுவுதல்.

வாய்ச் சுகாதாரம் மற்றும் தோல் சுகாதாரத்தைப் பேணுதல் வேண்டும்.

சுவாச நோய்கள் பொதுவாகக் காற்றுவழியான பரவுகையைக் கொண்டிருப்பதோடு, அவை சிறந்த சுகாதாரப் பழக்க வழக்கங்கள் மூலம் முழுமையாகக் கட்டுப்படுத்தப்படக் கூடியவை.

எனவே, சிறந்த சுகாதாரப்பழக்க வழக்கங்களை நடைமுறைப்படுத்துவதன் மூலமும் நோய்களுக்கான உரிய சிகிச்சைகளை முழுமையாகப் பெறுதல் மூலமும் சுவாச நோய்களை இல்லாதொழிப்போம்.

செல்வி க. யாதவனி,
மருத்துவபீட மாணவி

# வெங்காயத்தின் மகிமை

வெங்காயத்தின் காரத் தன்மைக்குக் காரணம் அதில் உள்ள "அலைல் புரோப்பைல் டை சல்பைட்" என்ற எண்ணெய். இதுவே வெங்காயத்தின் மணத்திற்கும் எமது கண்களில் கண்ணீர் வருவதற்கும் காரணமாக அமைகிறது. வெங்காயத்தில் புரதச் சத்துக்கள், தாது உப்புக்கள், வைட்டமின்கள் ஆகியவை உள்ளன.

முருங்கைக்காயை விட அதிக பாலுணர்வு தரக்கூடியது. தினமும் வெங்காயத்தை மட்டும் சாப்பிட்டு நீண்ட காலம் ஆரோக்கியமாகவும், பாலுறவுத் திறத்தோடும், வாழ்ந்ததாக ஒரு நபர் கின்னஸில் இடம்பிடித்திருக்கிறார்.

வெங்காயம் ஒரு நல்ல மருந்துப் பொருள். இதை இதயத்தின் தோழன் என்றும் சொல்லலாம். இதிலுள்ள கூட்டுப் பொருட்கள் ரத்தத்தில் கொழுப்பு சேர்வதை இயல்பாகவே கரைத்து, உடலெங்கும் இரத்தத்தை கொழுப்பு இல்லாமல் ஓட வைக்க உதவி செய்கிறது.

குளவியோ, தேனீயோ கொட்டிவிட்டால் பயப்பட வேண்டாம். அவை கடித்த இடத்தில் வெங்காயத்தை எடுத்துத் தேய்த்தாலே போதும். வெங்காயத்தில் உள்ள ஒரு வகை என்சைம், கொட்டியதால் ஏற்படும் உடலின் வலியையும், அழற்சியையும் உண்டாக்



குகின்ற ப்ராஸ்டாகிளாண்டின்ஸ் என்ற கூட்டுப் பொருளை சிதைத்து விடுகிறது. விஷத்தையும் முறித்து விடுகிறது.

சிறுநீர் அடக்கிவைக்கும் பழக்கம் ஆண்களை விட பெண்களிடம் அதிகம் உண்டு. அவ்வாறு சிறுநீரை அடக்குவதால் அதில் நுண்ணுயிரிகளின் உற்பத்தி அதிகமாகி, நோய் உண்டாகும் வாய்ப்பு அதிகரிக்கும். இந்த பழக்கத்தை தொடர்பவர்களுக்கு சிறுநீர்த்தாரைத் தொற்று வரும். இவர்கள், வெங்காயத்தை உணவில்அதிகமாகச் சேர்த்துக் கொண்டால் போதும். வெங்காயம் கழிவுப் பொருட்களை கரைத்து, அழற்சியைக் குறைத்து கழிவுகளை வெளியே தள்ளிவிடும். இதனால் சிறுநீர்த் தாரைத் தொற்றும் குறையும்.

யூரிக் அமிலம் அதிகமாக சிறுநீர்ப் பையில் சேர்ந்தால் கற்கள் தோன்றும், வெங்காயத்தை அடிக்கடி சாப்பிட்டால் அந்த கற்கள் கரைந்துவிடும்.

முதுமையில் வரும் மூட்டு அழற்சியை கட்டுப்படுத்தும் ஆற்றல் வெங்காயத்திற்கு உண்டு. இதற்கு வெங்காயத்தையும், கடுகு எண்ணெயையும் சேர்த்து மூட்டு வலி உள்ள இடத்தில் தடவினால் போதும். வலி குறைந்துவிடும்.

செலினியச் சத்து இருப்பவர்களுக்குத்தான் கவலை, மன இறுக்கம், களைப்பு போன்ற பிரச்சனை தோன்றும். இதைத் தவிர்க்க சுலபமான வழி வெங்காயத்தில் இருக்கிறது. வெங்காயத்தை தொடர்ந்து உணவில் எடுத்து வந்தாலே போதும் தேவையான செலினியச் சத்து கிடைத்துவிடும். வெங்காயம் தவிர பூண்டையும் இதற்காக பயன்படுத்தலாம்.

சீதோஷ்ண நிலை மாறும்போது அடிக்கடி இருமல் வரும். நுரையீரல் அழற்சி, மூக்கு எரிச்சல் போன்றவையும் ஏற்படும். சிறிது வெங்காயச் சாற்றில் தேன் கலந்து சாப்பிட்டால் மேற்கண்ட பிரச்சனைகள் நீங்கும்.

புற்றுநோயைத் தடுக்கும் மருந்துப்பொருள் வெங்காயத்தில் இருப்பதாக சமீபத்திய ஆராய்ச்சியில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. புகைபிடித்தல், காற்று மாசுபடுதல், மன இறுக்கம் போன்றவற்றால் ஏற்படும் செல் இறப்புகள் செல் சிதைவுகளை இது சரிசெய்து விடுகிறது.

நாலைந்து வெங்காயத்தை தோலை உரித்து அதோடு சிறிது வெல்லத்தைச் சேர்த்து அரைத்து சாப்பிட பித்தம் குறையும், பித்த ஏப்பம் மறையும். வெங்காயத்தை வதக்கிச் சாப்பிட உஷ்ணத்தால் ஏற்படும் ஆசனக் கடுப்பு நீங்கும்.

# கேள்விக்கு என்ன பதில்

**எனக்கு 21 வயது ஆகின்றது. நான் கர்ப்பமாக இருக்கின்றேன். எனக்கு மலச்சிக்கல் ஏற்படுகின்றது. அதற்கான தீர்வு என்ன?**

கர்ப்ப காலத்தில் ஏற்படும் பொதுவான பிரச்சினைகளில் ஒன்று மலச்சிக்கல். இதற்கு ஓமோன்களில் ஏற்படும் மாற்றங்களினால் குடற்றொழிற்பாட்டில் ஏற்படும் மாற்றம், கர்ப்பப்பையின் அளவு, திணி அதிகரித்தல், இக்காலத்தில் பாவிக்கப்படும் இரும்புச்சத்துக் குளிசைகள், உணவுப் பழக்க வழக்கங்களில் ஏற்படும் மாற்றங்கள் (நார்ச்சத்துக் குறைவான உணவுகளை உட்கொள்ளல், நீர் அருந்துதல் போதாமை) ஒழுங்கற்ற முறையில் மலங்கழிக்கச் செல்லுதல், போதியளவு உடற்பயிற்சியின்மை என்பன காரணமாக அமைகின்றன. சில அரிதான சந்தர்ப்பங்களிலேயே மருத்துவக் காரணங்களினால் இது ஏற்படலாம்

எனவே நீங்கள் இதை எண்ணிக் கவலைப்படத் தேவையில்லை. தகுந்த முறையில் உங்கள் வாழ்க்கை முறைகளைமாற்றி அமைப்பதன் மூலம் இதன் பாதிப்பைக் குறைத்துக் கொள்ளலாம்.

இதற்காக தேவையான அளவில் நீரை நாளந்தம் எடுத்துக்கொள்ளல், நார்ச்சத்து அதிகம் உள்ள உணவுப் பொருட்களை (பழங்கள், மரக்கறிகள்) அதிக அளவில் உட்கொள்ளல், ஒழுங்கான முறையில் உடற்பயிற்சி, நடைப்பயிற்சி மேற்கொள்ளல், தினமும் குறித்த ஒரே நேரத்தில் மலங்கழிக்கப் பழக்கிக் கொள்ளல் போன்றவற்றை மேற்கொள்ள வேண்டும்.

இதற்காக மருந்துகளைப் பாவிப்பது தவிர்க்கப்பட வேண்டும். ஆனாலும் இவற்றிற்கு உங்கள் மலச்சிக்கல் குறையவில்லை எனின் தகுந்த முறையில் வைத்தியரை அணுகி சிகிச்சை பெறுவது சிறந்தது

**சிலர் அடிக்கடி தடிமனால் பாதிக்கப்பட்டு, தும்மல், மூக்கிலிருந்து நீர் வடிதல் என்பவற்றால் அவஸ்தைப் படுகின்றார்கள். அன்ரிபயோட்டிக் (Antibiotics) பாவித்தும் குணமடைவதில்லை. இதற்கு காரணம் என்ன? இதை எவ்வாறு தடுக்கலாம்?**

இந்த அறிகுறிகளுக்கு ஒவ்வாமையால் சுவாசப் பாதையில் ஏற்படும் அழற்சியே காரணமாகும். இதை ஆங்கிலத்தில் Allergic Rhinitis என்பர். இது கிருமித் தொற்றினால் ஏற்படும் நோய் அல்ல. கிருமித் தொற்றினால் ஏற்படும் நோய்களுக்கே அன்ரிபயோட்டிக் (Antibiotics) தேவைப்படும். தூசு மற்றும் காற்றில் கலந்துள்ள மகரந்த மணி என்பன சுவாசப் பாதையைத் தூண்டி சில இரசாயனப் பதார்த்தங்களை உற்பத்தி செய்வதால் Allergic Rhinitis ஏற்படுகின்றது. இதனால் அரிப்பு, வீக்கம், மூக்கிலிருந்து நீர்வடிதல், கண்கள் வீங்கி சிவத்தல், மூக்கடைப்பு என்பன ஏற்படுகின்றன. குறித்த ஒரு நபருக்கு சில பொருட்கள் ஒவ்வாமையை ஏற்படுத்தும். அவற்றைக் கண்டறிந்து தவிர்ப்பதே இந்தநிலை ஏற்படுவதை தவிர்க்கும் வழியாகும். சிலருக்கு காலநிலை மாறுபாட்டின் போதும் இவ்வாறு ஏற்படலாம். இதனைத் தவிர்க்க முடியாதவர்கள் மருந்துகளைக் குளிகைகளாகவோ அல்லது நாசியினுள் விசிறியோ (Nasal spray) உள்ளெடுக்கலாம். உதாரணமாக Diphenhydramine, Cetriazine மற்றும் Loratidine என்பனவாகும். இதில் முதலில் கூறியது நித்திரையைக் கூட்டும் என்பதால் பின்னைய இரு மருந்துகளைப் பகல் வேளையில் பாவிக்க முடியும். அவ்வாறு பாவிக்க வேண்டியவர்கள் வைத்திய ஆலோசனையின் பின்னரே எடுக்க வேண்டும்.




- நன்றி -

நீரிழிவு சிகிச்சை நிலையம்

# லங்கா ராணி

(கடந்தவார தொடர்ச்சி.....)

சரவணன் இரும்புக்கதவைத் திறந்து கொண்டு உள்ளே போனான். மற்ற இருவரும் கீழ்த்தளத்திற்கு இறங்குவதற்கு அந்தப்படிகளில் ஏறிக் கீழிறங்கினார்கள். அந்தக் கிடங்குகளின் மேற்பகுதியில் சுமார் மூன்றடி உயரமான இரும்புச்சுவர் சுற்றி இருந்தது. இதில் கைகளை ஊன்றிக் கொண்டு கீழே எல்லோரையும் பார்க்கலாம். கீழ்த்தளத்தின் மத்தியில் மேடை இருந்தது. நீளப்போருக்கு இருந்த சட்டங்கள் மேல் பலகைத் தட்டுக்களைப் பாப்பி இருந்தார்கள். இத்தட்டுக்கள் ஒன்றுக்கொன்று சரியாகப் பொருந்திக்கொண்டன. இந்தப் பலகைத் தட்டுக்களைக் கழற்றலாம். கழற்றினால் மேலும் சுமார் முப்பதடி ஆழத்தில் அடித்தளம் இருந்தது. ஆயினும் மேடையைச் சுற்றியிருந்த தளப்பகுதி நிரந்தரமாகவே பொருத்தப்பட்டிருந்தது. இதன்மேல் நடமாடுவதில் எவ்வித ஆபத்துமில்லை. ஆகவே பிரயாணிகள் எல்லோரும் மேடையைச் சுற்றியுள்ள தளப்பகுதியில் பாய்களை விரித்துப் பெட்டிகளை வைத்துக்கொண்டார்கள். ஆங்காங்கே சாய்ந்து கொண்டுமிருந்தனர்.

அவர்கள் இருவரும் இறங்கி வந்து சுற்றிலும் ஒரு கண்ணோட்டம் விட்டார்கள். சரவணனுடைய பெட்டி வைத்த இடத்திலேயே இருந்தது. இளைஞர்கள் மூவரும் எல்லா இடங்களையும் புரிந்து கொண்டவர்கள் போல் இருந்தனர். மற்ற முகங்களில் காணப்பட்ட ஏக்கம், கவலை, தவிப்பு எல்லாம் இந்த முகங்களில் இல்லை. ஒரு மூலையில் இரண்டு பாய்கள் கிடந்தன. வேட்டி அணிந்திருந்தவன் அதைத் தூக்கிக் கொண்டு வந்தான். மேடையில் இரண்டையும் விரித்துக்கொண்டனர். அங்கிருந்த முகங்களை உற்றுப் பார்த்தனர். அகதிகள் முகாமில் பழக்கப்பட்டவர்கள் தான்.

மற்றப் பக்கத்தில் படுத்துக் கொண்டிருந்த சற்று வயதானவர் தலையைத் தூக்கிய வண்ணம். "தம்பிமாரே அதில படுக்காதேயுங்கடா. கீழே பெரிய பாதாளமாம். இதுக்குள்ள போன மாசம் ஒருவன் விழுந்து செத்தவனாம்" என்றார்.

பலகையை உற்று நோக்கினார்கள். நன்றாகப் பொருத்தப்பட்டிருந்தது. பாயில் சாய்ந்து படுத்துக் கொண்டார்கள். கையை மடித்துத் தலையணையாக வைத்துக்கொண்டார்கள்.

சரவணனும் இரும்புக்கதவைத் திறந்து கொண்டு உள்ளே நுழைந்து பழைய இடத்தில் படுத்துக்கொண்டான். லங்கா ராணியில் அநேகமாக எல்லோருமே உறங்கிக் கொண்டிருந்தனர்.

அருளர்

காலை ஆறு மணிக்கே பலர் மேல் தளத்தில் வரத் தொடங்கி விட்டிருந்தனர். காலைக் கடன்களை முடிப்பது பெரும் கஸ்ரமாகவே அமைந்திருந்தது. வெறும் மரச்சட்டங்களைப் பொருத்திச் சாக்குகளால் அடைத்து விட்டிருந்தார்கள். ஆண்களுக்கு வலது பக்கம். பெண்களுக்கு இடது பக்கம். கதவுகளும் சாக்குகள் தான். வாளிகளை வைத்திருந்தார்கள். நிரந்தரமாகப் பொருத்தப்பட்டிருந்த கூடத்திற்குப் பெரிய வரிசையில் காத்து நின்றனர். முகம் கழுவுவதற்கும் கடல்நீர்தான். ஏதோ அலசிக் கொண்டார்கள்.


டாக்டர் நற்குணம் கீழ்த்தளத்தில் நின்றுகொண்டிருந்தார். பல பேர் கடலில் முதல் முறையாகப் பிரயாணம் செய்வதாலும் இரவுச் சாப்பாடு இல்லாததாலும் களைப்புற்றுக் காணப்பட்டனர். வழக்கமாக ஏற்படும் கடற்சோர்வு விசுவரூபம் எடுத்துப் பலரின் தலையை அமர்த்தி இருந்தது. வாந்தி எடுத்தனர், தலை சுற்றுகிறது என்றனர். டாக்டர் நற்குணம் முன்னெச்சரிக்கையுடன் கொண்டு வந்திருந்த மாத்திரைகளை ஒவ்வொன்றாகக் கொடுத்து உட்கொள்ளும்படி வற்புறுத்திக் கொண்டிருந்தார். அங்குள்ளவர்களில் அவருக்குத் தெரிந்த முகங்கள் பல இருந்தன.

'ஹலோ டாக்டர் எப்படி?" என்று ஆச்சரியத்துடனும் மகிழ்ச்சியுடனும் வினவினர்.

லங்கா ராணியில் சுமார் இருபது டாக்டர்கள் வெவ்வேறு பகுதிகளில் அகதிகளாகப் பிராயணம் செய்து கொண்டிருந்தனர்.

ஒரு சாரத்தை உடுத்திக்கொண்டு கால்களை மடித்துக் கைகளைக் கோர்த்துப் பிடித்தவண்ணம் உட்கார்ந்து கொண்டிருந்தார். டாக்டர்களுக்கே உரித்தான முழுமையான முகபாவம்

வயது நாற்பத்தைந்து இருக்கும். அவரது பக்கத்தில் அவர் மனைவி, குழந்தைகள், வேறு இரண்டு பெண்களும்




இருந்தனர். வயது பதினாறு, பதினெட்டு இருக்கும். கூந்தல் பின்னிவிட்டிருந்தனர். இழுத்துச் சீர்படுத்தாமல் இருந்தது. பொது நிறம். நல்ல அழகானவர்கள் போல இருந்தது. முகத்திலொரு பயம் மிகுந்த களைப்பு, கண்கள் கலங்கியபடியே இருந்தன. அவர்களைச் சற்றுக் கூர்ந்து நோக்கியபின் டாக்டர் நற்குணம்,

"ஏதும் வேண்டுமா?" என்று டாக்டரைப் பார்த்தவாறே கேட்டார்.

"தேவையில்லை" என்று டாக்டர் சற்று இழுத்தவாறே கூறினார்.

கொழும்பை அடுத்து பாணவிலையில் டாக்டர் திருமுருகன் கடந்த ஆறு ஆண்டுகளாகப் பிரதம வைத்திய அதிகாரியாகக் கடமை புரிந்தவர். இவருடன் மேலும் மூன்று தமிழ் டாக்டர்கள் கடமையாற்றிக் கொண்டிருந்தனர். ஒருவர் பெண், வயது இருபத்தாறு இருக்கும். மருந்தாளராகவும் இரு தமிழர் இருந்தனர். சிங்களவர் பெரும்பான்மையாக இருந்த அந்த

1977 ஆம் ஆண்டு நடைபெற்ற இனக்கலவரத்தின் போது கொழும்பில் இருந்து 1200 தமிழ் அகதிகளைச் சுமந்தவாறு காங்கேசன்துறை வந்து சேர்ந்தது "லங்காராணிக்" கப்பல். அந்தக் கப்பலில் வந்தவர்களை வைத்தும் அன்றைய அரசியல் நிலவரத்தைப் பின்னணியாக வைத்தும் "லங்கா ராணி" என்ற நூலை அருளர் எழுதியுள்ளார். "தினச்செய்தி" வாசகர்களுக்கு அருளரின் நூலை வாரா வாரம் தரத் திட்டமிட்டுள்ளோம்.

இடத்தில் ஏராளமான நோயாளிகள் இவரிடம் வந்து போவதுண்டு. பௌத்தபிக்குகள், பெரும் முதலாளிகள், தேர்தலில் நிற்பவர்கள், அங்கு திரியும் காடையர்கள், அந்தப் பகுதியிலிருந்த எல்லோரும் டாக்டரிடம் வந்து போகிறவர்கள் தான். அவர்களின் உடல்நோயை டாக்டரே முன்னின்று குணப்படுத்தி அனுப்பிவிடுவார்.

வியாழக்கிழமை ஆகஸ்ட் பதினெட்டாம் திகதி நாட்டில் பயங்கரமான நிலை உருவாகியிருந்தது. இதை டாக்டர் உணராமலில்லை. அங்கு வேலை பார்த்த சிங்களக் கங்காணிமார், எடுபிடிகள் டாக்டரின் உத்தரவுகளை முகத்தைச் சுளித்துச் செய்து முடித்தார்கள். தங்கள் கடமைகளைக்கூடப் பெரிதும் சிரமப்பட்டே செய்து முடித்தார்கள். தமிழரின் கீழ்ப் பணி புரிகிறோம் என்பது அவர்களின் மனதைப் பிய்த்துப் பிடுங்கிக் கொண்டிருந்தது. அங்கு பணியாற்றிய இரு சிங்கள டாக்டர்களும் வேறு பதவிகளில் இருந்த மற்றவர்களும் தங்களுக்கும் இவற்றுக்கும் எவ்வித சம்பந்தமும் இல்லை என்பதுபோல பாசாங்கு செய்து கொண்டார்கள். தமிழர்களை விரட்டி அடித்தால் தங்களுக்கு அந்தப் பதவிகள் வரும் என்பதை அவர்கள் உணராமலில்லை. டாக்டர் மத்தியானம் வீட்டுக்குப் போனார். வீடு பக்கத்தில்தான். சாப்பாட்டு மேசையில் எதுவும் பிரமாதமாக இல்லை. மனைவி சுகந்தி சற்றுக் கலக்கம் அடைந்தவாறு இருந்தார். கதிரையில் உட்கார்ந்து சாப்பாட்டை ஒரு நோட்டம் விட்டார்.

"என்னங்க! கலவரம் வரப்போகுதாம். முனியாண்டி சொல்லுறான். ஐம்பத்தெட்டாம் ஆண்டையும் விட மோசமாக வந்தாலும் வருமாம். மீன் வாங்கப் போனவன் வாங்காமலே ஓடிவந்துட்டான்" என்று கூறி முடித்தார் அவரது மனைவி சுகந்தி.

டாக்டர் தனக்கே உரித்தான பாணியில் மனைவியின் கலக்கத்தைப் போக்குவதற்கு "அவன் விசரன், அவன்ட கதையைவிடு" என்று கையைக் கழுவிக்கொண்டே சாப்பிடத் தொடங்கினார். இரண்டு பிடி எடுத்து வாய்க்குள் வைத்திருப்பார். அந்த எண்ணம் அவரையே ஆட்கொள்வது போல இருந்தது. விழுங்குவது கஷ்டமாய் இருந்தது.

"முனியாண்டியைக் கூப்பிடு"

சுகந்தியின் கையைப் பிள்ளைகள் பிடித்துக்கொண்டு நின்றனர். முனியாண்டி சமையலறைப் பக்கம் நின்றவன் டாக்டர் கூறுவதைக் கேட்டுத் தானாகவே வந்து முன்னுக்கு நின்றான்.

முனியாண்டிக்கு வயது அறுபது இருக்கும். உழைத்து ஓய்ந்த முகமும் உடம்பும், கட்டைக் காற்சட்டையும் சேட்டும் அணிந்திருந்தான். டாக்டரிடம் வந்து சேர்ந்து மூன்று வருடங்களாகின்றன. மலைநாட்டில் இருந்தவன். நுவரெலியாவில் ரோச்சைல் தோட்டத்தில் வேலை பார்த்தவன். ஒருநாள் இரவு இவனை வானில் ஏற்றிக்கொண்டு வந்து கண்டிப் பகுதியில் உள்ள காட்டில் விட்டுவிட்டுச் சென்றுவிட்டார்கள். இருட்டில் நடந்து கண்டிக்கு வந்து சேர்ந்தான்.

உழைப்பு ஒன்றுதான் இவனுக்குத் தெரிந்திருந்தது. எந்த வெயிலிலும் இவனுடைய தோல் எலும்போடு உறைந்துபோய் இருக்கும். எலும்பை உருக்கி உருக்கி வேலை செய்து கொண்டிருப்பான். "இலங்கையும் இந்தியாவும் ஒப்பந்தம் செய்திருக்காங்க அதால நீ வெளியேற வேண்டும்" என்று சிங்களக் கங்காணி கூறினான்.

"ஆமாம் கருவாட்டு ஏற்றுமதி இறக்குமதி என்றல்லோ நினைச்சிக்கிட்டிருந்தேன். இப்படியா சங்கதி" என்று விழித்தான்.

"ஏறு, ஏறு" என்று இழுத்துக் கொண்டு வந்து வானில் ஏற்றினார்கள். அவன் பிறந்து வளர்ந்ததெல்லாம் அதே தோட்டம்தான். பிரஜா உரிமை, பாஸ்போர்ட், விசா, தூதரகம் இதெல்லாம் விளங்காத சொற்கள் அவனுக்கு காங்கிரஸ் மாத்திரம் கொஞ்சம் தெரியும். மாதா மாதம் ஒரு ரூபாய் கொடுத்து வந்தான். கொடுக்காமலிருக்கலாமென்றால் "வேலை போகும், சம்பளம் கிடையாது. விரட்டிப் போடுவார்கள்" என்று சொன்னார்கள். இதனால் கொடுத்து வந்தான்.

வானில் இருந்து இறங்கும்போது உள்ளிருந்த சிங்களக் கங்காணி, முதுகில் ஒரு உதையும் விட்டான். கையில் இருந்தது பத்து ரூபாய்தான். இரண்டு கந்தைத்துணிகள், அதை வைத்துக் கொண்டு கொழும்புக்கு வந்து சேர்ந்து விட்டான். இவனைப்போல் ஆயிரமாயிரம் பேர் தெருவில் நின்றார்கள், உழைப்பதற்கு இடமில்லை. பேணியை எடுத்துக்கொண்டு பிச்சை எடுக்கப் புறப்பட்டான். பாணவிலவில் ஒரு பணக்கார வீடு. படலை திறந்து கொண்டு உள்ளே போனான். "அம்மா... அம்மா..." ஒரு சத்தமும் இல்லை. "வாள்... வாள்..." என்று இரண்டு பெரிய நாய்கள் தொடையைக் கிழித்துவிட்டன. நல்ல கடி, யாரோ வேலைக்காரன் வந்து கட்டுப்போட்டு விட்டான். நொண்டி, நொண்டி வைத்தியசாலைக்கு வந்து சேர்ந்து விட்டான். விறாந்தையில் படுக்க விட்டார்கள். அங்குதான் டாக்டர் திருமுருகன் முனியாண்டியைக் காண்கிறார்.

(தொடரும்......)

# சிறுபான்மை மக்களுக்காகவும் துணிந்து குரல் கொடுத்தவர்



தமிழத்தேசிய கூட்டமைப்பின் தலைவர் சம்பந்தனும், இந்த நாட்டின் ஜனாதிபதியாக வரலாம் என்று கூறி, தமிழ் மக்களின் நன்மதிப்பினைப் பெற்ற ஒரு பெரும்பான்மையின மதத் தலைவரின் மரணச் செய்தி, இன, மத, மொழி பேதமின்றி, அனைவரது மனங்களில் துயரத்தினை ஏற்படுத்தியுள்ளது.

பொதுபலசேனா போன்ற இனவாதம் பேசும், துறவிகளின் மத்தியில், இன நல்லுறவினை பற்றிப் பேசிய பௌத்த நெறி துறவியாக இவர் அனைவராலும் கையெடுத்து வணங்கப்பட்டார்.

சோல்பரி அரசியலமைப்பின் சிறுபான்மையின காப்பீட்டை போல, இலங்கை சிறுபான்மை மக்களின் காப்பீடாகவே இவர் இருந்தார் என்றே சொல்ல முடியும்.

இலங்கை வரலாற்றிலே பெரும்பான்மையினத்தினால் அடக்கியாளப்பட்ட சிறுபான்மையினத்தின், கடைசி எதிர்பார்ப்பு என எண்ணிப் பார்க்கும் அளவிற்கு, எல்லோருடைய மனங்களிலும் நீங்காத இடத்தில் வாழ்ந்தவர் இந்த சோபிததேரர்.

1942ஆம் ஆண்டு மே மாதம் 29ஆம் திகதி ஹோமாகம பாதுக்க மாதுலுவாவே பிரதேசத்தில் மூன்று பிள்ளைகள் அடங்கிய குடும்பத்தில் இவர் பிறந்தார்.

தனது குடும்பத்தில் ஒரேயொரு ஆண்பிள்ளையான மாதுலுவாவே சோபித்த தேரர், 1955ஆம் ஆண்டு மே மாதம் 9ஆம் திகதி கோட்டே ஸ்ரீநாகவிகாரையில் துறவறத்தில் இணைந்து கொண்டார்.

அதனைத் தொடர்ந்து வித்யாலங்கார மற்றும் விதயோதய பிரிவெனாக்களில் உயர்கல்வி பெற்றுக் கொண்ட இவர், 1964 ஆம் ஆண்டு ஸ்ரீஜயவர்தனபுர பல்கலைக்கழகத்தில் கலைப்பிரிவில் கௌரவ பட்டப்படிப்பை பூர்த்திசெய்தார்

1955ஆம் ஆண்டு முதல் கோட்டே ஸ்ரீ நாகவிகாரையில் தனது துறவற வாழ்க்கையை தொடர்ந்த சோபித தேரர் மக்களின் பிரச்சினைகளைக் கண்டறிந்து தீர்ப்பதற்கு பெருமுயற்சியில் ஈடுபட்டு வந்தார்.

நீண்டகாலமாக தேசிய ரீதியில் மாத்திரமன்றி, சர்வதேச ரீதியாகவும் புத்தசாசனத்திற்கு பெரும் பங்களிப்பு செய்துள்ளார்.

கடந்த அரசாங்கத்தில் இடம் பெற்ற பல விடயங்களை கருத்திற் கொண்டு நியாயமான சமூகத்திற்கான மக்கள் அமைப்பை நிறுவி, எதிர்க்கட்சிகளை ஒன்றிணைத்து நல்லாட்சியை உருவாக்க வேணடும் என்ற தொனியை உயரச் செய்து முன்னெடுத்த போராட்டத்தில் அவர் வெற்றி கண்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இந்நிலையில் பௌத்த துறவியாக தன்னை அடையாளப்படுத்திக் கொண்ட இவர், இலங்கையில் வாழும் அனைத்து இனத்தினையும் தாங்கிப் பிடித்த மதத் தலைவராக அனைவராலும் பார்க்கப்பட்டார்.

மாதுலுவாவே சோபித தேரர், இலங்கையின் அரசியல் மாற்றத்திற்காக பாரிய பங்களிப்புக்களை வழங்கியுள்ளார்.

குறிப்பாக தற்போதைய நல்லாட்சியின் தோற்றத்திற்கு அதிகளவு பங்களிப்பு செய்த மதத் தலைவராக இவரைப் பார்க்கமுடியும்.

கடந்த அரசாங்கத்தின் சர்வாதிகார செயற்பாடுகளுக்கு துணிந்து குரல் கொடுத்து, இலங்கையினை ஒரு மத சார்பற்ற நாடாகவும், அனைத்து இன மக்களும் எவ்வித வேறுபாடுகளும் இன்றி, சிறப்பாக வாழ வேண்டும் என்பதில் மிக தெளிவாக இருந்தார்.

குறிப்பாக உண்மை பௌத்தத்தின் கொள்கைகளை பரப்புவதில் முன்னுதாரணமாக தொழிற்பட்டார்.

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் கிட்டத்தட்ட பத்தாண்டு கால ஆட்சியை முடிவுக்கு கொண்டுவருவதற்காக, சிவில் சமூக அமைப்புகளையும், பல்வேறு எதிரணிக் கட்சிகளையும் ஒன்று திரட்டுவதில் முக்கிய பங்காற்றியிருந்தார்.

இலங்கையில் சிறந்த ஜனநாயகம் தழைத்தோங்குவதற்கு, ஆட்சி மாற்றம் ஒன்று அவசியம் என்று உணர்ந்து சமூக நீதிக்கான மக்கள் இயக்கம் ஒன்றை ஆரம்பித்து, நல்லாட்சியை விரும்பும் அனைவரையும் ஒன்றிணைத்து போராட்டங்களை நடாத்திவந்தார்.

அதுமட்டுமன்றி இந்த நாட்டில் வாழும் சிறுபான்மை மக்கள் பெரும்பான்மையின மக்களுக்கு சரிநிகரானவர்கள் என்பதை ஏற்றுக் கொண்டவர். அத்துடன் இந்த நாட் டில் பயங்கரவாதம் நிலவவில்லை, பொருளாதார பிரச்சினையே நிலவியது என்ற கருத்தினையும் துணிந்து சிங்கள மக்கள் மத்தியில் வெளிப்படுத்தி வந்தார்.

அனைவரும் இலங்கையினை பௌத்த நாடு என்று தெரிவித்து வந்த நிலையில், இந்த நாட்டில் சிறுபான்மை சமூகம் ஒன்று உள்ளது, அவர்களும் அனைத்து உரிமைகளையும் பெற்று வாழ வேண்டும் என குரல் கொடுத்தவர் இவர் என்பதை தமிழ் மக்கள் என்றும் மறக்கமாட்டார்கள்.

அதுமட்டுமன்றி தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் தலைவர் சம்பந்தனும் இந்த நாட்டின் ஜனாதிபதியாக வரலாம் என்று கூறி தமிழ் மக்களின் நன்மதிப்பினைப் பெற்றுக் கொண்டு தமிழ் மக்களின் தேவைகளுக்கு குரல் கொடுத்து வந்தார்.

குறிப்பாக நாட்டில் தற்போது பேசப்படும் மிக முக்கியமான பிரச்சினையான அரசியல் கைதிகளின் விடுதலை விடயத்தில் அதிகளவு குரல் கொடுத்து வந்தார்.

இந்நிலையில், இலங்கையில், தமிழ் மக்களுக்கான எந்தவித தீர்வும் வழங்கப்படாத இந்த நிலையில், மாதுலுவாவே சோபித்த தேரர் போன்றவர்களின் இழப்பு தமிழ் மக்களுக்கு மிக வேதனைக்குரியதொன்றாகும்.

இவரது உடல் மறைந்தாலும், சிறுபான்மையினத்திற்காக பாடுபட்டார் என்பதில், சிறுபான்மை உள்ளங்களிலும், உண்மை பௌத்த நெறிக் கொள்கைகளை பின்பற்றினார் என பெரும்பான்மை மக்களிடத்திலும் இவர் என்றும் நீங்கமாட்டார்.



# தன்வினை

## (தொடர் சிறுகதை – 2)


இதில் என்ன பகிடி என்றால் தாலி அறுக்க திட்டம் போட்டு கொடுத்ததே டொக்ரரின் மகனே! இதென்ன கொடுமையாய் இருக்குது. எந்தப்புத்தில எந்தப்பாம்பு இருக்குமெண்டு யாராலும் கண்டுபிடிக்க முடியாதென்பது உண்மைதான் போல இருக்கு. ஆனாலும் என்னால நம்பமுடியல்ல. நரம்பில்லாத நாக்கால எல்லாத்தையும் இஸ்ரத்துக்கு சுழட்டி கதைக்கமுடியும். அந்த வகையில் இது பொய்க்கதையாய் இருக்கும் என முருகேசுமாஸ்ரர் மறுதலித்தார்.

சரி சரி எல்லாம் கடவுளுக்கு தானப்பா வெளிச்சம். சும்மா ஏன் விதண்டாவாதத்தை என மனைவி கூறிக் கொண்டிருக்கும் போது மாஸ்ரர் என்ற ஓர்குரல் வாசல் படலையில் அழைக்க முருகேசு மாஸ்ரரின் மனைவி இஞ்சாரப்பா நீங்க உள்ளுக்க போங்க நான் போய் என்னெண்டு கேட்டுட்டு வாறன். இப்பத்தேக் காலத்தில பொடியள நம்பேலாது. சும்மா அலுவல் எண்டு கூப்பிட்டிட்டு இருட்டடியைப் போட்டிட்டுப் போறாங்க. ஏன் கத்தியாலையே குத்திட்டுப் போன சம்பவம் இருக்கு. மாலை கருகி ஆளை ஆள் தெரியாத இருட்டாயும் வந்திட்டுது. பேசாம வீட்டுக்கை போங்க என மனைவியின் செல்லமான அதட்டலை கேட்க முருகேசு வாத்தியார் மனசுக்குள் "எட என்ர மனிசிக்கு தானே பொம்பிள ரவுடி எண்ட நினைப்பு தான் பாக்கிறன் நீங்க வீட்டுக்க இருங்க என சொல்லும் இவளது வார்த்தையே இவள் நினைப்பை வெளிப்படுத்துது." என எண்ணித் தனக்குள் சிரித்த போதும் "மறுபுறம் எட மனைவி பின்னால் ஒளிகிறானோ மடையன் இவன் என வாறவர்கள் நினைப்பார்களே" என்ற வருடல் அவர் முகத்தில் தோன்ற மறுகணமே முகத்தை கடுப்பாக்கி கொண்டு நீ சும்மா இரப்பா "யாரோ ஆம்பிளையளின்ர குரல் கேட்கிறது. நான் என்னவண்டு ஓர் எட்டு பார்த்திட்டு வருகிறேன்". படலை லைற்றைப் போடு என கூறியபடி வாசல் படியில் இறங்கி செருப்பை கொழுவுகிறார்.

அவசர அவசரமாய் முருகேசு மாஸ்ரரின் மனைவி லைற்றை போட்டு விட்டு குசினிக்குள் சென்று மிளகாய் தூள் வாளியை சுமந்தபடி முருகேசு மாஸ்ரருக்கு பின் தொடர்கிறாள். அவளது அந்த நடத்தையை பார்த்த அவளது தம்பியும் இந்த காலத்தில் எப்ப யாருக்கு எப்படி ஆபத்து வரும் எண்டு தெரியாது. நல்லவர் கெட்டவர் எண்டு உலகம் யாரையும் பார்க்கிறதில்லை. அதுவும் நல்லவர்களைவிட கெட்ட்வர்களைத்தான் தண்டிப்பது அதிகம். எனவே அத்தானுக்கு ஏதாச்சும் பிரச்சினை எண்டா "கைமுந்துறவன் தான் சண்டியன்" நான் ஒரு பிடி பிடிக்கணும் என முருகேசு மாஸ்ரரின் மச்சானும் சகோதரியை பின்தொடர முருகேசு மாஸ்ர ரும் படலையை நோக்கி ஓர் அணி யில் நகர அவருடைய எண்ணங்கள் யாராச்சும் பிள்ளையின்ர அப்பா தன்ர பிள்ளையை தண்டிச்சதுக்கு வந்திருப்பாரோ அல்லது அந்த விவசாய மாஸ்ரர் சுந்தரத்தார் பொடியனை வைச்சு கண்டபடி வேலை வேண்டிறார் அதுவும் O/L எழுதிற பொடியளை படிக்கிற காலத்தில படிக்கவிடாம கசக்கி பிளிகிறார் எண்டு நேற்று சம்பந்தர் கதைச்சமாதிரி இண்டைக்கும் யாராச்சும் நியாயம் பிளக்க வந்திருக்கினமோ.

அல்லது ஆறு மாதத்துக்கு முன்னர் கந்தப்பண்ணை தன்ர பொட்டயின்ர குழப்படி பற்றி கதைக்க நீ யார் எனக் கேட்டமாதிரி இண்டைக்கு யாரேன் பெட்டையின் தேப்பன்மார் யாராச்சும் வந்திருப்பினமோ என தனக்குள் பல கோணங்களுக்குள் பலதையும் எண்ணியபடி படலையைத் திறக்கிறார். படலையில் இரண்டு ஆண்கள் அதுவும் ஒருவர் கண்களைக் கசக்கி உயிர் இழப்பின் போது ஆறுதலுக்கு வருபவர்களின் தோள்களிலே கண்களைப் புதைத்து அழும் பெண்கள் போல ஓர் ஆண் மற்ற ஆணின் தோளில் முகம் புதைத்து அழுதபடி" ஐயோ மாஸ்ரர் என்ன மன்னிச்சிடுங்கோ நான் உங்கள கேவலப்படுத்தினதுக்கு இண்டைக்கு நான் கேவலப்பட்டு போய் நிக்கிறன். நீங்கள்தான் என்னை இந்த கேவலம் கெட்ட வாழ்க்கையில இருந்து காப்பாத்த வேணும் என ஏதேதோ சொல்லிப் புலம்ப அழுகின்ற குரலுக்கு சொந்தக்காரர் யார் என்பது குழப்பம் ஆனாலும் யார் கந்தப்பண்ணையோ? எனக் கேட்க தனது தலையிலே கையினால் அடிச்சு ஐயோ என்ன கேவலப்படுத்த எண்டு வந்தவள் என்ன விட்டுட்டு போட்டாளே வயசுவர முன்னம் வாழ்க்கையைத் தேடி ஓடிப்போட்டாள். நாளைக்கு என்னால இந்த ஊரில தலை நிமிந்து நடக்கேலாது. என்னை நீங்க தான் காப்பாத்தோணும் எனக் கூறியபடி கந்தப்பண்ணை முருகேசு மாஸ்ரரின் கால்களில் விழுந்தார். வயது முதிர்ந்த ஒருவர் தனது கால்களில் விழுந்ததால் மனம் குறுகிப்போன முருகேசு மாஸ்ரர்,

என்ன நான் காப்பாத்திறதா அதுவும் உங்கட மானத்தை என்னால என்னவண்டு காப்பாத்த முடியும்." என கேட்டபடி வேகமாய் பின்நகர்ந்தபடி




எழும்புங்கண்ணை எழும்புங்க உங்கட வயசென்ன என்ர வயசென்ன. நான் என்ன கடவுளே என்ர காலில விழுந்து காப்பாத்த சொல்லி கேட்கிறியள்." என கேட்க,

ஐயோ மாஸ்ரர் எனக்கு பணம் இருக்கெண்ட திமிரும் குருட்டுத்தனமாய் என்ர பிள்ளையில நான் வைச்சிருந்த நம்பிக்கையிலும் உங்களை அண்டைக்கு கேவலப்படுத்திப் போட்டன். ஆனா அது எல்லாம் பிழை என்பதை எனக்கு உணத்திட்டு என்ர பெட்டை யாரோடையோ ஓடிப் போட்டாள். விடியவே கடிதத்தை எழுதி தலை கணிக்கு கீழை வைச்சிட்டு சனிக்கிழமை வகுப்புக்கு போட்டு வாறன் எண்டிட்டு போனவள்தான் இன்னும் வீடு திரும்பேல. மத்தியானம் தாய் தலையணையை தூக்கின போது கடிதம் கிடைச்ச நேரத்தில இருந்து நானும் அவளின்ர சினேகிதங்கள் கதைச்ச பொடியன்ர வீடு அங்க இங்கை என நாயாய் அலைஞ்சு திரிஞ்சு கடைசியில பொலிசுக்கு போனா பொலிசும் அக்கறை எடுக்கிறமாதிரி தெரியேல.

உங்களுக்கு பொலி சில செல்வாக்கு எண்டு கேள்விப்பட்டன் தயவுசெய்து என்னை காப்பாத்துங்க பிளீஸ் உங்களை கெஞ்சி கேட்கிறன் என கந்தப்பணணை கெஞ்சி அழுததும் முருகேசு மாஸ்ரனின் மனம் மெழுகென உருகியது. "கந்தப்பண்ணை ஊரில எந்த பெரிய மனுசன் செல்வம் செல்வாக்கு என ஊரே மெச்சி கதைக்கும் எல்லோருக்கும் உதவுவார். எதையும் யாரிடமும் எதிர்பார்க்கமாட்டார். ஆனால் முன் கோபக்காரர் சட்டென்று கோபம் வந்துவிடும். ஊரில் முதல்நிலை பணக்காரர் ஆறேழு தோட்ட நிலங்கள் இருபது பரப்புக்களில் இருக்கிறது நான்கு ஐந்து ஏக்கர் தென்னம்பிள்ளை தோப்புகள், உழவுயந்திரங்கள் ஐந்து, மண்கிளறும் பைக்கோ வாகனம் இரண்டு, கடைகள் இரண்டு என பெரும் பண வசதி படைத்த மனிதர் கந்தப்பண்ணை. அவரை எதிர்த்தால் ஊரில் பல பெரிய புள்ளிகளை எதிரத்ததற்கு சமனாவான். இவ்வளவு ஏன், இந்த முருகேசு மாஸ்ரருக் கென்று ஒரு காலத்தில் ஊரிலே பெரிய மதிப்பு இருந்தது. எண்டைக்கு கந்தப்பண்ணையோட கொழுவல் ஏற்பட்டதோ அண்டைக்கே முருகேசு மாஸ்ரரின் மவுசும் நாளுக்கு நாள் பாத்திரத்தில் இருந்த குடிநீர் அள்ள அள்ள குறைவது போல் குறைந்து இருந்த இடம் தெரியாமல் போனது. பற்றாக்குறைக்கு டொக்ரரோட ஏற்பட்ட மோதலால மீதமிருந்த செல்வாக்கும் போச்சுது அப்போது முருகேசு மாஸ்ரர் குருடனுக்கு அவ்வவ்போது தேவைப்பட்ட கைத்தடி போன்ற நிலை. தேவையானவர்கள் தங்கள் தேவைகளை நிறைவேற்ற அவ்வப்போது பயன்படுத்துவார்கள். முருகேசு மாஸ்ரருக்கு அவருடைய மாணவன் ஒருவனால்தான் பொலிசில செல்வாக்கு. முருகேசு மாஸ்ரரின் மாணவன் பொலிசில சப்இன்ஸ்பெக்ரர் அதால பொலிஸ்கேஸ் எண்டால் அதுவும் தீர்க்க முடியாத பொலிஸ் கேஸ் எண்டால் முருகேசு மாஸ்ரரிடம் தான் ஊரார் வருவார்கள். ஆறு மாதத்துக்கு முன்பு இப்ப இருக்கும் செல்வாக்கு இருந்திருந்தா முருகேசு மாஸ்ரர் கோடு ஏறி இருக்கவும் மாட்டார். இந்த கந்தப்பண்ணையோ டையோ ரமேஸ்டொக்டரோடயோ வீணாய் கொழுவல் ஏற்பட்டிருக்கவும் மாட்டாது.

முருகேசு மாஸ்ரரும் எல்லா கேசுக்கும் கதைக்க போகமாட்டார் பிழை சரி பார்த்து நியாயமான கேஸ் எண்டா தான் தலையிடுவார். அதனால ஊரில சிலசில பகையும் ஏற்பட்டிருக்கு இப்போது கந்தப்பண்ணை வந்ததும் தன்ர பிள்ளையின்ர கேசை பொலிஸ் சீரியஸ்சாய் எடுத்து விசாரிக்க இல்லை. அதை சீரியஸ் ஆக்கி விசாரணையை தூண்டுவிக்க தான் கந்தப்பண்ணையும் முருகேசு மாஸ்ரரிடம் வந்திருக்கிறார். பணம் பாதாளம் மட்டும் பாயும் என்பார்கள் பக்கத்தில உள்ள பதவிக்கே பாயமாட்டேல எப்படி பாதாளம் வரை பாயும் படிப்பு பதவி வரை பாயுது என முருகேசு மாஸ்ரரின் மனைவி வாய்க்குள் முணு முணுக்க தலையிடியும் காய்ச்சலும் தனக்கு தனக்கு வந்தால்தான் தெரியும். பாவம் கந்தப்பண்ணை எவ்வளவு கௌரவமான மனுசன் அந்தப் பொட்ட அந்தாளின்ர கௌரவத்தை பாத்துதே விசர் பெட்டை என முருகேசு மாஸ்ரர் மனதுக்குள் எண்ணியபடி இதே கந்தப்பண்ணை இதே வாசலில ஆறு மாதத்துக்கு முன்னாடி, தன்ர பெட்டையிட்ட மன்னிப்பு கேட்கச் சொல்லி ஊரில உள்ள பெரிய மனுசர் எல்லாரையும்கூட்டி வந்து கத்தி மன்னிப்பு கேட்க வைச்ச மனுசன் இண்டைக்கு இப்படி வந்திருக்கு காலம் எவ்வளவு வேகமாய் சுழலுது என தனது பழைய கந்தப்பண்ணேன்ர பெட்டையை பற்றிய வாழ்க்கை குறிப்புக்களை அசை போட்டார். கந்தப்பண்ணைக்கு மூண்டு பெட்டையள் மூண்டும் கிளிக்குஞ்சு மாதிரி என பலர் கூறுவர். திரிசங்கு சொர்க்கங்கள் என சிலர் கூறுவார்கள். மூன்று பிள்ளைகளும் வரியப் பிள்ளைகள் பெண்ணை பெத்த அரசனும் ஆண்டி ஆவான் என்பார்கள். ஆனால் ஆண்டியாய் இருந்த கந்தப்பண்ணையை அரசன் ஆக்கியது அந்தப் பெண்பிள்ளைகளின் இராசிதான். பல வீடுகளில் மூதேவிகள் என்று பெண்களை இழிவுபடுத்தும் வாழ்க்கை கந்தப்பண்ணைக்கு மூன்றும் சீதேவிகளா அல்லது வானத்து ரம்பைகளா என ஆச்சரியப்பட வைக்கும் அழகுடன் கூடிய ராசியான பிள்ளைகள். மூத்தவள் ரம்மியா இரண்டாவது கௌசிகா மூன்றாவது தாட்சா மூவரும் கிராமப்புற பாடசாலையில்தான் கல்வி கற்றார்கள். எவ்வளவு வசதி வாய்ப்பு இருந்த போதும் தனது கிராமத்தின் மீது கொண்ட பற்று காரணமாய் கந்தப்பண்ணர் கிராமப்புற பாடசாலையில் இருந்து பிள்ளைகளை ரவுண்பள்ளிக்கு மாற்றவில்லை.

மூவரும் படிப்பில் கெட்டிக்காரிகள் ரவுணுக்கு படிக்கவிட்டால் இப்பத்தே காலத்தில பல பஸ் ஏறி சிலபஸ் முடித்து O/L,A/L பாஸ் பண்ணி கம்பஸ் போக வேண்டிய பிள்ளைகள் பஸ்சில கிஸ்சில போய் அழிஞ்சு போம் அதுவும் சில பஸ்சில வீட்டுக்குள்ள நாலு சிவர் மறைப்பில நடக்கும் கூத்த நாய்மாதிரி மற்றவங்க பாத்து அருவருப்பா நினைப்பாங்க எண்ட நினைப்பே இல்லாம நடக்கும் கூத்தைக்கண்டு தன்ர புள்ளையள் கெட்டுப் போம் என கந்தப்பர் நினைச்சாரோ அல்லது உந்த பெட்டகுட்டியளுக்கு ஏன் கனக்க படிப்பு நாலு சந்ததிக்கு என்னட்ட சொத்து இருக்கு உதுகள் கண்டபடி படிச்சா பணத்திமிரும் படிப்புத் திமிரும் ஏறி வாறவங்கள மதியாம ஆரோ ஐஸ்பழகடகாரன்ர பெட்டையை மாதிரி டைவஸ் கிய்வஸ் எண்டு போயிட்டா எல்லாம் போயிடும் பேசாமா ஏதோ மண்டைக்கு ஏறுறதை படிச்சிட்டு வீட்டை கிடக்கட்டும் என நினைச்சாரோ அல்லது ஊர் மீதும் ஊர்ப்பாடசாலை மீதும் கொண்ட பற்றில் படிக்கிறபுள்ள எங்கவிட்டாலும் படிக்கும் பட்டணம் போனா என்ன போகாட்டி என்ன என நினைச்சாரோ என்னவோ தனது மூன்று பிள்ளைகளையும் முருகேசு மாஸ்ரரின் பாடசாலையில்சேர்த்தார். கந்தப்பரும் முருகேசரும் ஒரே ஊர்க்காரர்கள் அல்ல கந்தப்பரின் ஊர் எல்லையில் முருகேசு மாஸ்ரரின் ஊரின் ஆரம்பத்தில் முருகேசு மாஸ்ரரின் வீடு இருந்தது அயலூர்காரராய் இருந்த போதும் அப்பாடசாலை மாணவர்கள் மீது மிகுந்த அக்கறையும் கருசனையும் உடையவர் முருகேசு மாஸ்ரர். முருகேசு மாஸ்ரர் ஒருமுறை ஒரு மாணவனையோ மாணவியையோ பார்த்துவிட்டால் அவரது முக்குறிப்பையும் நடத்தை கோலத்தையும் அப்படியே அச்சொட்டாக சொல்லிவிடுவார். அது அவரது அனுபவக்குறிப்பா இல்லை ஆண்டவன் அருளா இயற்கை தந்த வினோதபடைப்பா என்பது யாருக்குமே தெரியாது. யாரையாவது ஓர் விடயத்தில் தப்பாக கருதி அனுகி பிழை கண்டு பிடித்து அறிக்கை வெளியிட்டால் அது நூறுவீத உண்மையாக இருக்கும். இது அவர் மாணவர்கள் மீதுகொண்ட ஈடுபாடா அல்லது சந்தேக குறியீடுகளா என்பது பலரது கேள்விக்குறி. இவ்வளவு ஏன்? சக ஆசிரியர்களே

இந்தாள் வீட்டை மனுசியை பூட்டிட்டு வாறதுபோல இப்படி சந்தேகம் பிடிச்ச மனுசன் என்று கூறக் கூட கேள்விப் பட்டு மனம் சலியாது தன் கடமையில் கண்ணாயிருந்து கவனம் செலுத்துவது முருகேசு மாஸ்ரரின் இயல்பு. இப்படிப்பட்ட முருகேசு மாஸ்ரர் கந்தப்பண்ணையின் மகள் 8ஆம் வகுப்பு படிக்கும் போது அந்தப் பாடசாலையில் கணித ஆசிரியராய் வந்து சேர்கிறார். நியமனம் கணித பாடமாய் இருந்தபோதும் தமிழ், ஆங்கிலம், சமயம், வரலாறு, விஞ்ஞானம் என சகல பாடத்தையும் மிகநுணுக்கமாக மாணவரின் முகக் குறிப்பறிந்து கற்பிப்பதில் முருகேசு மாஸ்ரர் கெட்டிக்காரர்.

இப்படியான முருகேசு மாஸ்ரர் இரண்டாண்டு கற்பித்தலை முடித்த வேளையில் கந்தப்பண்ணையின் மூத்தமகள் ரம்மியா 11ஆம் ஆண்டில் காலடி எடுத்து வைக்கிறாள். ரம்மியம் என்றால் அழகு ரம்மியா அழகில் மட்டுமல்லாது படிப்பிலும் கெட்டிக்காரியாய் இருந்தவளது நடத்தையில் மாற்றம் பல காணப்பட்டது. எப்போதும் புத்தகப் பைக்குள் கண்ணாடி, சீப்பு, பவுடர், கிரீம் என தன்னை அலங்கரிக்கும் பொருட்கள் காணப்பட்டன.

தொடரும் ...

விரைவில்
"எங்கே அவள்"
புதிய தொடர்

# வன்னி நாட்டார் பாடல் ...

யாரடா எந்தன் குளக் கட்டுத்தனிலே?
நாங்கள்தான் அந்த சிந்துகவி பாடியோர்.
நாயை பிடித்ததன் தெள்ளையுறந்து
நல்லதோர் ஈட்டிவாள் கையிலெடுத்து
பாசக்கயிறுருவி பண்டிக்கு நாய்விட்ட
பரமசிவனையனைப் பாடியேவாறோம்

குருவிச்சிந்தும் குருவிகளின் அடாவடித்தனத்தைப் பற்றியதாகவே அமைந்திருக்கிறது. தேர்ந்த ஒரு விவசாயியால் உய்த்துணரப்பட்ட விடயங்களே பாடலாகவுள்ளது எதுவும் மிகையல்ல என்பதை சகவிவசாயிகளால் புரிந்து கொள்ளமுடிகிறது.

“கோலமலை நீலமலை குருந்துமலை கண்டல்
கொக்கிளாய் பரந்தமலை மெம்மலை குருந்தேர்
கன்னியங் குமரிமலை ஓதியமலையேகி
பொதியமலை நாயாறுதட்டா மலைக்குருவி முதலாய்
தோற்ற முள்ளகந்தளாய் குளமேவு மலையினொரு
சோல்லரியபூநேரி சூழு மலையாளம் ... குருவிக்கிளை பறந்துவருதே...

பாலர் பாடல்கள் கதைப் பாடல்கள், குருவிச்சிநாச்சியார் சலிப்பு வன்னிச்சி நாச்சியார் மான்மியம், கொட்டுக்கிணற்றடிப் பிள்ளையார் கும்மி, அரியாத்தை ஒப்பாரி, போன்றகதைப் பாடல்கள் இன்றும் வழக்கிலுள்ளன.

ஒப்பாரி என்ற அருமையான பாடல்களும் பாடும் திறமையும் இருக்கிற தலை முறையுடன் மறைந்து போய்விடுமோ என்ற அச்சமுள்ளது. இறந்துபோன ஒருவரைப்பற்றி அவரது குணநலங்களையும் அவருக்கும் தனக்குமுள்ள பந்தத்தை பாட்டாகப் பாடுவதே ஒப்பாரி. ஒப்பு ஆரம் வன்னியில் மட்டுமல்லாது தமிழர்கள் வாழுமிடமெங்கும் ஒப்பாரி வழக்கிலுள்ளது.

சாமானிய படிப்பறிவேயில்லாத பெண்கள் கட்டியழும் போதுபாடும் இந்தப்பாடல்களில் எது கைமோனை வருணனை ஏசல் வசைபாசம் என்ன இல்லை?

கொழும்பிலுள்ள மகள் தந்தை இறந்த செய்திகேட்டு ஓடிவருகிறாள். அய்யோஎன் அப்பன் உயிர் பிரியுமுன் வரமுடியவில்லையே! என்ற ஆதங்கம் பாடலில் வருகிறது

வாடமுன்னம் வந்தனில்லே... உன்
வண்ணமுகம் பார்ப்பதற்கு....
சோர முன்னம் வந்தனில்லே
உன்ர சோதிமுகம் பார்ப்பதற்கு
அருகிருந்தோபாக்கயில்லை நான்
அள்ளிப்பால் வார்க்கயில்லை
கிட்டருந்தோ பாக்கயில்லை அய்யாநான்
கிள்ளிப்பால் வார்க்கயில்லை

என்ற ஒப்பாரியாகவேதன் சோகத்தைச்சொல்கிறாள். கணவனை இழந்துவிட்ட பெண்ணின் சோகம் இது,

கோட்டை வாசலய்யா... இப்ப கூகை குடிகொள்ளுதய்யா...
மாளிகைத் தோப்பையா இண்டைக்கு
மங்கலமிழந்ததையா

மகன் இறந்துபோனான் பாடலிலே பாசமழை அவள் கண்களில் மகனின் பிரிவு ஏதோ தன்னால்தான் ஏற்பட்டதாக எண்ணிப்பாடுகிறாள்.

“அய்யாநான் மல்லிகைப்பூ மாலையிட்டு
மடியில் வைச்சுப் பாக்காம...
எருக்கம்பூ மாலையிட்டோ எடுத்தெறிஞ்சேன் பூமியிலே...”

வக்கணை வைத்துப் பாடுவது ஒரு வழக்கம். வன்னியில் போர் நடந்த காலத்தில் ஒரு வீரச்சாவு முள்ளியவளையிலே எழுத்தறிவு இல்லாத பெண் பாடிய ஒப்பாரி என்னை ஆச்சரியப்பட வைத்தது. அது,


கள்ளரளிப் பந்தலிலே கள்ளரளிப் பந்தலிலே
ஒரு கள்ளன் வந்து நிக்கறான்னு ஒரு கள்ளன் வந்து நிக்கிறான்னு
ஒரு கர்ணன் வந்து சொன்னாரு அய்யா
கருத்தானை மேலேறி கரிமருந்துங் கைபிடிச்சு
கள்ளன் சுடப் போகையில
கருத்தானை காலிடறி கரிமருந்தும் கைதவறி.
எங்களய்யா... கரும்புலியா சாய்ஞ்சதென்ன...
வெள்ளரளிப் பந்திலிலே வெள்ளரளிப் பந்தலிலே
ஒரு வேடன் வந்து நிக்கிறான்னு எங்கய்யா
வெடிமருந்துங் கைபிடிச்சு வெள்ளானை மேலேறி
அந்தவேடன் சுடப் போகையிலே
வெடிமருந்துங் கைதவறி வெள்ளானைகால் தவறி
எங்க வேங்கைப் புலிசாஞ்சதென்ன?...

நாட்டார் பாடல்கள் என்பது கடலளவு. அதில் ஒரு சிறு துளியை ரசித்தோம். தொட்டிலில் தொடங்கி சுடுகாடு மட்டும் தொடர்வது பாடல்கள் இதனாலேயே “தொட்டில் பழக்கம் சுடுகாடுமட்டும்” என்ற பழமொழி உருவானது.

# உதவி என்ற பெயரில் வதந்திகளை பரப்பாதீர்

## மாவிட்டபுர பிரதமகுரு கோரிக்கை

கடந்தகால யுத்த நடவடிக்கைகளினால் பெரும் அழிவிற்கு உட்பட்ட மாவிட்டபுர கந்தசுவாமி கோவிலின் புனரமைப்பு பணிகளுக்கு பெருமளவில் வெளிநாட்டில் இருக்கும் சொந்தங்களே உதவி செய்து வருவதாக ஆலயத்தின் பிரதமகுரு இரட்ணசபாபதிக்குருக்கள் தெரிவித்தார்.




இதுதொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்

கடந்த கால யுத்த நடவடிக்கைகளால் மாவிட்டபுர கந்தன் ஆலயம் பல்வேறு வகையில் அழிவுகளை சந்தித்ததுடன் அதன் பெருமளவான சொத்துக்களுக்கும் பெரும் சேதம் ஏற்பட்டது. இந்தநிலையில் ஆலயத்தை மீளவும் புனரமைக்க வேண்டியதேவை எழுந்தது. இதற்காக உள்நாட்டில் வாழ்பவர்கள்,வெளிநாட்டில் வாழும் சொந்தங்களிடம் உதவி கோரப்பட்டது. எமது கோரிக்கையை ஏற்று வெளிநாட்டில் இருக்கும் சொந்தங்கள் பெருமளவில் உதவிகளை செய்து வருகின்றன.

எனினும் உள்நாட்டில் வசிக்கும் தனிநபர்கள் எவரும் ஆலயத்திற்கு எவ்வித உதவிகளையும் செய்யவில்லை.மாறாக சிலர் ஆலயத்தின் புனரமைப்பிற்காக தாம் உதவிகளை செய்து வருவதாக பொய்யான வதந்திகளை பரப்பி வருவது மிகுந்த மனவேதனை அளிப்பதாக உள்ளது.


எனவே உதவாவிட்டாலும் உபத்திரவம் செய்யாமல் இருப்பதே மேல் என்று கூறுவதனைப் போன்று இவ்வாறான பொய்யான வதந்திகளை பரப்பாமல் இருப்பதே இவர்களுக்கு நல்லது என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.


No-05, NC Road, Trincomalee.
TP- 026 2222298, Fax- 0262221179.
www.jewellanka.8m.com


விளையாட்டு

# குறுகிய காலப் பயிர்




எதிர்வரும் நவம்பர் 24ஆம் திகதியில் இருந்து பங்களாதேஷ் பிரிமியர் லீக் (BPL) இருபதுக்கு இருபது கிரிக்கெட் போட்டிகள் ஆரம்பிக்கவுள்ளன. இந்நிலையில இருபத்தைந்துக்கும் அதிகமான இலங்கை கிரிக்கெட் வீரர்கள் இந்தச் சுற்றுப் போட்டியில விளையாட அழைக்கப்பட்டுள்ளனர். இதில் தேசிய நிலை வீரர்கள் மற்றும் முதல்தர வீரர்களும் உள்ளடங்குகின்றனர். ஆனால் இலங்கை கிரிக்கெட் சபை இந்த வீரர்களின் பங்களாதேஷ் அனுமதியை ஏற்க முடியாதென்றும், எதிர்வரும் நியூசிலாந்துக்கு எதிரான தொடருக்காக இவர்கள் முறையான பயிற்சிகளைப் பெறவேண்டியுள்ளது என்றும் கூறி இவர்களது வாய்ப்பைத் தடுத்துள்ளது. மேலும் அண்மையில் உள்ளூர் கிரிக்கெட் போட்டிகளில் பங்குகொள்ளும் வீரர்களின் வேதனத்தைக் கணிசமாக உயர்த்தியுள்ளோம். இந்நிலையில் திருப்தியான வேதனத்தை வீரர்கள் பெற்றுக் கொண்டிருக்கிறார்கள் என்றும் அதிகாரிகள் கூறுகிறார்கள். அதோடு ஒப்பந்த அடிப்படையான வீரர்கள் பற்றிய முடிவு இலங்கை கிரிக்கெட் சபையினது எனவும், முதல்தர கிரிக்கெட் வீரர்களின் விடயத்தை அவரவர்களின் கழகங்கள் பார்த்துக் கொள்ளும் என்று கூறியுள்ளார்கள். தற்போது உயர்தர கிரிக்கெட் என்பது, தொழில்சார் கிரிக்கெட்டாக ஆகிவிட்ட நிலையில் பல்வேறு மட்டங்களில் பல்வேறு நாடுகளில் கிரிக்கெட் போட்டிகள் நடைபெற்று வருகின்றன. கிரிக்கெட் அறுபது வயது வரை விளையாடி ஓய்வு பெறும் விளையாட்டல்ல. குறித்த சில வருடங்களே வீரர்கள் சோபிக்க முடியும். அந்தவகையில் பார்க்கும்போது, திறமையுள்ள இளம்வயதில்தான் அவர்கள் பொருள சாம்பாதித்துக் கொள்ள முடியும். அப்படியான சந்தர்ப்பங்களை அதிகாரம் கொண்டு தடுக்கலாமா என்று சிலர் கேட்கிறார்கள். மேலும் தொழில்சார் கிரிக்கெட் வீரர்கள் மூவகை கிரிக்கெட் போட்டிகளையும் இனம் பிரித்து அறிந்து விளையாடக் கூடியவர்கள். இந்நிலையில் ஒரு கிரிக்கெட் தொடர் என்பது இன்னொரு சுற்றுப்போட்டியில் கலந்து கொள்வதால் சிதைந்துபோகும் என்பது எந்தளவிற்குப் பொருத்தம் என்று தெரியவில்லை. கிரிக்கெட் வீரர்களின் ஒரு சில வருட உழைப்புத்தான் அவர்களின் காலம் முழுவதிற்கும். இந்நிலையில் சகல கிரிக்கெட் வீரர்களும் BPL சுற்றுப்போட்டியைப் புறக்கணிப்பார்களா என்பதைப் பொறுத்திருந்துதான் பார்க்க வேண்டும்.

# மாறி வீசும் காற்று

கடந்த வாரத்தில் ஐ.சி.சி தரவரிசை அட்டவணைகள் வெளியிடப்பட்டுள்ளன.




இந்த தரவரிசை இறுதிப்பட்டியல் பிரிஸ்பேன், மற்றும் மொஹாலி டெஸ்ட் போட்டிகளின் பின்னர் வெளியிடப்பட்டுள்ளன. பிறிஸ்பேன் டெஸ்ட் போட்டியில் நியூசிலாந்து அவுஸ்ரேலியாவிடம் தோல்வி கண்டிருந்தது. மொஹாலி டெஸ்ட் போட்டியில் தென்ஆபிரிக்கா, இந்தியாவிடம் தோல்வி கண்டிருந்தது.

இந்த வகையில் டெஸ்ட் துடுப்பாட்ட வரிசையில் தென்ஆபிரிக்காவின் ஏ.பி.டி.வில்லியர்ஸ் முதலிடம் பெற்றுள்ளார். 2012 இல் டெஸ்ட் துடுப்பாட்ட வரிசை ஒன்றைப்பெற்ற இவர் கடந்த ஜனவரியில் குமார் சங்கக்காரவிடம் தன் முதன்மை நிலையைப் பறிகொடுத்திருந்தார். ஆனால் தற்போது முதல் நிலையில் இருந்த அவுஸ்ரேலியாவின் ஸ்ரீவ்சிமித் பிறிஸ்பேன் டெஸ்ட் போட்டியில் 48 மற்றும் 01 என்று ஓட்டங்களை எடுக்க, வில்லியர்ஸ் போட்டியில் தோல்வி கண்டிருந்தாலும் இவர் மொஹாலியில் பெற்ற 63 மற்றும் 16 இவரை ஸிமித்தைவிட ஒரேயொரு புள்ளி வித்தியாசத்தில் முதல் இடத்தில் ஏற்றியிருக்கிறது. ஆனால் வில்லியர்ஸ், ஸ்மித் (சங்கக்கார ஓய்வுபெற்று விட்டார்) டேவிட்வோர்னர், நியூசிலாந்தின் கேன்வில்லியம்சன் உட்பட ஏழு டெஸ்ட் துடுப்பாட்ட வீரர்கள் 44 புள்ளிகள் வேறுபாட்டில் மட்டுமே உள்ளனர். கேன்வில்லியம்ஸன் 5ஆம் இடத்திலும் டேவிட்வோர்னர் 7 ஆம் இடத்திலும் இருக்கின்றனர்.

இதேவேளை சில பிரபலங்கள் சடுதியாக கீழ் இறங்கியுள்ளனர். விராட்கோஹ்லி 11 ஆவது இடத்தில் இருந்து 16 ஆவது இடத்திற்கும், றொஸ்ரெய்லர் 13 ஆவது இடத்தில் இருந்து 17 ஆவது இடத்திற்கும் அஜின்கியா ரஹானே 21 இலிருந்து 24 ஆவது இடத்திற்கும் BJ வட்லிங் 23 ஆவது இடத்தில் இருந்து 25 ஆவது இடத்துக்கும், சிக்கர்தவான் 30 ஆவது இடத்திலிருந்து 38 ஆவது இடத்திற்கும் கீழ் இறங்கியுள்ளனர்.


இதேவேளை டெஸ்ட் பந்துவீச்சு நிலையில் தொடர்ந்தும் டேல்ஸ்ரெய்ன் (தற்போது சிறிது அடிவிழுந்தாலும்) தரவரிசை ஒன்றிலேயே இருக்கிறார். இதேவேளை மொஹாலி டெஸ்ட் போட்டியில் அற்புதமாகப் பந்து வீசிய ரவிச்சந்திரன் அஸ்வின் 5 ஆம் இடத்திற்கும் முன்னேறியுள்ளார். இவர் மொஹாலி டெஸ்ட் போட்டியில் எடுத்த விக்கெட்டுக்கள் 8. இதேவேளை அவுஸ்ரேலிய மிட்சல் ஸ்டாக் 20 ஆம் இடத்தில் இருந்து 13 ஆம் இடத்திற்கும் மொஹாலியில் ரவீந்திரஜடேஜா 8 விக்கெட்டுக்கள் சாய்த்ததன் காரணமாக 21 ஆம் இடத்துக்கும் முன்னேறியுள்ளனர்.

இந்நிலையில் அவுஸ்ரேலிய நியூசிலாந்து மற்றும் இந்திய தென்ஆபிரிக்க தொடர்கள் முடியும் போது இன்னும் புதிய மாற்றங்களைக் காணக்கூடியதாக இருக்கும்.





# பிடிவாதம் போச்சே

அண்மைக் காலங்களில் இந்தியக் கிரிக்கெட் வீரர்களைவிட அதிகமாகப் பேசப்பட்டவர்கள் ஐ.சி.சி யின் தலைவராக இருந்த சிறிநிவாசன் ஆவார். இவர் எதிர்மறை வகையிலேயே பிரபல்யமாகி இருந்தார். ஐ.பி.எல் ஊழல்கள், இவரும், இவரது மருமகன் குருநாத் மெய்யப்பனும் பல்வேறு ஐ.பி.எல் விடயங்களில் குற்றங்கள் புரிந்ததாகக் கண்டறியப் பட்டது என்று இந்த வரிசை நீண்டு கொண்டே போனது. இவர் என்னதான் வந்தாலும் பதவிகளைக் கைவிட்டுப் போவதில்லை என்று பிடிவாதமாகவே இருந்தார். எனினும் இந்திய கிரிக்கெட் சார்ந்தவர்களே இவரை எப்படி ஓரம் கட்டலாம் என்று எதிர்பார்த்து இருந்ததும் உண்மை. இந்த நிலையில் இரண்டு வருடம் ஐ.சி.சி தலைமைப் பதவிக் காலத்தை கடந்த ஜூனில் ஏற்றிருந்த இவர் பீ.சி.சி.ஐ இவர் மீதான ஆதரவை விலக்கிக் கொள்வதாக அறிவித்த நிலையில் உடனடியாக செயற்படும் வகையில் விதிகளுக்கு இணைந்து ஐ.சி.சி தலைமைப் பதவியில் இருந்து நீக்கப்பட்டுள்ளார். எனவே சிறிநிவாசனுக்குப் பதிலாக ஐ.சி.சி தலைமைப்பதவியை தற்போது இந்தியக் கிரிக்கெட் சபையின் தலைவராக இருக்கும் சஷாங்க்மனோகர் நியமிக்கப்படுவார் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. இவரிடம் புதிய நியமனம் பற்றிக் கேட்டபோது இதனை நான் எதிர்பாத்திருக்கவில்லை. ஆகவே இதில் திருப்தியோ, சந்தோஷம் அடைவதோ என்றொன்றில்லை என்றுள்ளார். ஆனால் சிறிநிவாசனும் அவரது ஐ.பி.எல் அணியான சென்னை சுப்பர் கிங்ஸ் அணியும் இனி ஐ.பி.எல் போட்டிகளிலும் இல்லை என்பது உறுதி.



ஜோசப் கிருஷ்ணா

# பூசாவிலும் தமிழ் அரசியல் கைதிகள்



அமைச்சர் டி.எம்.சுவாமிநாதன்

காலியில் உள்ள பூசா முகாமிலும் தமிழ் அரசியல் கைதிகள் தடுத்து வைக்கப்பட்டுள்ளதாக திடுக்கிடும் தகவல் ஒன்றை வெளியிட்டுள்ளார் புதிதாக சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு அமைச்சராக பொறுப்பேற்றுள்ள டி.எம்.சுவாமிநாதன் அவர்கள். இது தொடர்பாக அவர் தினச்செய்திக்கு மேலும் கூறியவை வருமாறு.

இதுவரை காலமும் அரசும் அரசியல் தலைவர்களும் சிறைகளில் இருக்கும் தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலை குறித்தே பேசினார்கள். ஆனால் முன்னைய அரசாங்கம் வேறு எங்கெல்லாம் அரசியல் கைதிகளை தடுத்து வைத்திருந்தது என்பது தொடர்பாக எவருக்கும் எதுவும் தெரியாது.

ஆனால் காலியில் உள்ள பூசா முகாமில் கடந்த 4 வருடங்களாக பயங்கரவாத தடுப்புப் பொலிசாரின் பொறுப்பில் 5 இற்கும் மேற்பட்ட தமிழ் அரசியல் கைதிகள் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

எனவே இவர்களது விடுதலை குறித்தும் நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது. தற்போது வெலிக்கடை, நியூமகசின், நீர்கொழும்பு, போகம்பறை, பதுளை, மொனராகலை, அநுராதபுரம், பொலனறுவை, யாழ்ப்பாணம், வவுனியா, திருகோணமலை, மட்டக்களப்பு, கொழும்பு தடுப்பு முகாம் ஆகிய சிறைச்சாலைகளில் தமிழ் அரசியல் கைதிகள் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

இவ்வாறு தடுத்து வைக்கப்பட்டுள்ள தமிழ் அரசியல் கைதிகள் 212 பேரை விடுவிப்பதற்கு அரசு நடவடிக்கை எடுத்துள்ள நிலையில் தற்போது பூசாவிலும் 5 இற்கும் மேற்பட்ட தமிழ் அரசியல் கைதிகள் கடந்த 4 வருடங்களுக்கு மேலாக தடுத்து வைக்கப்பட்டுள்ளதாக வெளிவந்திருக்கும் புதிய தகவல் தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலையில் இவர்களுக்கும் வாய்ப்பு கிடைக்குமென எதிர்பார்க்கப்படுகிறது. அத்துடன் தமிழ் மக்களுக்கு இது ஒரு நம்பிக்கை தரும் விடயமாகவும் அமைந்துள்ளது.



# குடியிருப்புகளுக்குள் வெள்ளம்

யாழ்.கச்சேரிக்கு அருகாமையில் உள்ள கச்சேரி நல்லூர் வீதியில் உள்ள மூன்று நான்கு வீடுகளுக்குள் வெள்ளம் புகுந்து மக்கள் வெள்ளத்தில் வாழ்கிறார்கள் இதுபற்றி எவரும் உரிய நடவடிக்கை எடுக்கவில்லை. இப்பிரதேசத்தில் சுமார் ஐம்பது வருடங்களுக்கு மேலாக மழை காலங்களில் கச்சேரி வெள்ளம், இப்பிரதேசத்து வெள்ளம் அனைத்தும் வீட்டுக்குப் பின்புறம் வெட்டி விடப்பட்ட கால்வாயால் புகையிரத கடவையைக் கடந்து அனைத்து வெள்ளமும் பாய்வது வழமையாக இருந்தது. ஆனால் தற்பொழுது புகையிரதக் கடவை அமைத்ததன் பின்னர் குறித்த வெள்ளம் புகையிரதக்கடவையைக் கடந்து அருகில் இருக்கும் காணிக்கூடாக செல்லாமல் அப்படியே தேங்கி நிற்கிறது. இதுபற்றி சுமார் ஒன்றரை வருடங்களுக்கு மேலாக பிரதேச செயலகம், அனர்த்த முகாமைத்துவ பிரிவு, யாழ்ப்பாணம் மாநகரசபை என அனைத்து அரச நிறுவனங்களிடமும் முறையிட்டும் இதுவரை தீர்வு கிடைக்கவில்லை.

வெள்ளநீர் கிணற்றுக்குள் புகுந்துவிட்டது நல்ல நீர்கூட தருவதற்கு எவருமின்றி இந்தக் குடும்பங்கள் அல்லல்படுகின்றன. இந்த வெள்ள நீரையை சமையலுக்கும் குளிப்பதற்கும் அக் குடும்பங்கள் பயன்படுத்தி வருகின்றன.

சிறுவர்கள் அதிகம் உள்ள இந்தச் சூழலில் சிறுவர்களுக்கு தொற்றுநோய் ஏற்படும் அபாயம் ஏற்பட்டுள்ளதால் வெள்ள நீரை வெளியேற்றுவதற்கு உரியவர்கள் தயவுசெய்து ஆவன செய்ய வேண்டுமென அப் பகுதியிலுள்ள குடும்பங்கள் கோரிக்கை விடுக்கின்றன.



படமும் தகவலும் : ரஜீபன்

இப் பத்திரிகை தினச்செய்தி நிறுவனத்தினால் சுன்னாகத்திலுள்ள அலுவலகத்தில் பதிக்கப்பெற்று யாழ்ப்பாணம் நாவலர் அச்சகத்தினரால் அச்சிடப்பட்டு நவ.15,2015 அன்று வெளியிடப்பட்டது.